

ராணி முத்து
லட்சுமி பிரபா
ரூ.6
உயிரும் உனக்காக

# இதயம் அறிவோம்



உடலில் உள்ள ரத்தக்குழாய் களுக்கு ரத்தத்தை 'பம்ப்' செய்யும் ஒரு அற்புதமான எந்திரம் இதயம்.

ரத்தம், ஒருமுறை உடல் முழுவதும் சென்று வருவதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் வெறும் 23 விநாடிகள்தான்.

மனிதனின் உடலில் 7 முதல் 10 லிட்டர் வரை ரத்தம் இருக்கும்.

ஒருமுறை இதயம் துடிக்க எடுத்துக்கொள்ளும் நேரம் 0.49 விநாடி. இரண்டு துடிப்புகளுக்கிடையே அது ஓய்வுகொள்ளும் நேரம் 0.3 விநாடி.

பிறந்த குழந்தையின் இதயம் நிமிடத்துக்கு 150 முறை துடிக்கிறது. வளர்ந்த மனிதனுக்கு 70 முறை துடிக்கும். கடுமையாக உழைக்கும்போது இது 150 ஆக உயரும்.

—பொருநை எஸ்.பாலு.

## விநோதம்



பழத்தில் வண்டுகள் இருப்பது ஆச்சரியமில்லை. வண்டின் முட்டையிலிருந்து வரும் புழுவானது, மெல்லிய பழத்தோலின் உள்ளே செல்லும் அளவுக்கு சக்தி வாய்ந்தது. பூதக்கண்ணாடியினால் பார்த்தால் நமது தோலில் உள்ள ஓட்டைகளைப் போலவே, பழத்தோலிலும் ஓட்டைகளைப் பார்க்கலாம்.

—கே. ராஜேஸ்வரி,
காவேரிப்பாக்கம்.



1

# உயிரும் உனக்காக

லட்சுமி பிரபா



தோட்டத்து மரத்தில் கூடுகட்டியிருந்த குருவிகள் 'கீச் கீச்' என்று குரலெழுப்பி... விடியலை மகிழ்ச்சியாக வரவேற்றன.

ஒலிநாடாவில் சுப்ரபாதம் கசிந்துகொண்டிருக்க... கமலி குளித்து முடித்து... சுவாமி படங்களின் முன் கண் மூடி கரம் குவித்திருந்தாள். தீவிரமாய் எதையோ யாசித்துக்கொண்டிருந்தன, அவளது அழகிய இதழ்கள்.

ஒன்றரை வயது மழலைச் செல்வம் தீபிகா, 'தித்தி' என்றழைத்தவுடன் சட்டென்று தியானம் கலைந்து திரும்பிப் பார்த்தாள், கமலி!

அக்கா விசாலியின் குழந்தை தீபிகாவை கண்டதும்... கமலியின் மனம்... பாசத்தில் பாகாய் கரைந்தது.

"அட தீபு குட்டிக்கு பசிக்குதா? காலங்காத்தால எந்திரிச்சுட்டாளே? என் பட்டு! என் தங்கம்! வா... வா சித்திகிட்டே..." வாரியணைத்து, அதன் பட்டு கன்னங்களில் முத்தமிட்டாள், கமலி.

கூடத்தில் விரித்திருந்த பாயில் ஒருக்களித்துப் படுத்தபடி... இவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள், அக்கா விசாலி.

அவளது விழிகளில் ஜீவன் தொலைந்து போயிருந்தது. கண்கள் உள்வாங்கி, கன்னங்கள் ஒட்டிப் போய் ஆளே உருத்தெரியாமல் அடியோடு மாறிப்போயிருந்தாள்.

'தங்கச் சிலையொன்று உயிர் பெற்று வந்ததைப் போன்று... கண்களைக் கட்டிப் போடும் அழகுடன் மிளிர்ந்த அக்கா இப்படி மாறிப்போய்விட்டாளே?' கமலிக்கு துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது. இலேசாக சிணுங்கி அழ ஆரம்பித்த குழந்தையின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி சமையலறைக்குள் புகுந்தாள்.

"அம்மா! பாப்பாவுக்கு பசிக்குது போல... பால் காய்ச்சிட்டியா?"

"பாலை இப்பத்தான் அடுப்புல வச்சேன். நல்லா கொதிக்கட்டும்! ஆமா... நீ ஏன் ஒரு மாதிரியா இருக்கே?" அம்மா தேவகியின் விழிகளில் சோகம் படர்ந்திருந்தது.

"அக்காவைப் பார்க்கவே சகிக்கலைம்மா! ராத்திரியெல்லாம் தூக்கம் பிடிக்காம... புரண்டு புரண்டு படுத்திட்டிருக்கா... அவளோட வாழ்க்கை இப்படி ஆயிடுச்சேங்கிற கவலை... அக்காவை செல்லா அரிச்சுகிட்டிருக்கு!"

"ம்... என்ன பண்ணறது கமலி! எல்லாம் நம்ம தலையெழுத்து! அனுபவிச்சுத்தானே தீரணும்?" கையாலாகாதவளாய் அவளை ஏறிட்ட தேவகியின் கண்களில் கண்ணீர் 'குபுக்' என்று கொப்பளித்தது.

"சரி... விடும்மா! இந்தா... பாப்பாவைப் பிடி! பால் காய்ச்சி



எடுத்துட்டு வரேன். பாபு வேற... சீக்கிரமா எழுப்பிவிடச் சொன்னான். எழுப்பிவிடும்போதே... சூடா காப்பியைக் கொடுத்துடணும்! அப்பத்தான் சுறுசுறுப்பா படிக்க உட்காருவான். இல்லேன்னா... சாய்ந்தாடம்மா சாய்ந்தாடுன்னு... தூங்கி வழிஞ்சுட்டிருப்பான்! சரியான கும்பகர்ணன்!"

இருண்ட வானில் மின்னல் வெட்டியதைப் போல... தேவகியின் கவலைபடர்ந்த முகத்தில் சிறு புன்னகை அரும்பியது. சிரித்தபடியே கூடத்திற்குச் சென்றுவிட்டாள்.

அம்மாவின் முகத்தில் மலர்ச்சியைக் கண்டதும் கமலிக்கு உள்ளூர திருப்தி பரவியது. அவள் மனதில் ஒரு சின்ன ஏக்கம் முளைவிட்டது.

அம்மா தேவகி கண்கலங்காமல், சிரித்த முகத்துடன் வளைய வரவேண்டும் என்ற ஆசை அவளது மனமெங்கும் வியாபித்திருந்தது.

அவளது குடும்பம் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்ததுதான். அவர்களுக்குச் சொந்தமாக ஒரு பழைய வீடும், கொஞ்ச நிலபுலன்களும் இருந்தன. அப்பா நடேசன் ஆரம்பத்தில் வியாபாரம் செய்துகொண்டுதான் இருந்தார்.

வியாபார சூட்சுமங்களைப் புரிந்துகொள்ளும் திறமையோ, பேச்சு சாமர்த்தியமோ இல்லாவிட்டால்... ஜெயிக்க முடியாது என்பதற்கு நடேசனை தாராளமாக நாம் உதாரணம் காட்டலாம். அவருக்கு சதா தன் உடம்பைப் பற்றிய கவலைதான்.

சிறு தலைவலி வந்தால்கூட... தாளமாட்டாமல் வீட்டிற்கு ஓடிவந்து தைலத்தைத் தடவிக்கொண்டு, பெரிய துண்டை தலையில் இறுகக் கட்டிக்கொண்டு 'அக்கடா' என்று படுத்துவிடும் ரகத்தைச் சேர்ந்தவர்.

சிறு தும்மல், இருமல் உபாதைகளுக்குக்கூட அவர் படுத்து ஓய்வெடுக்கத் தொடங்கியதும்... வியாபாரமும் அடியோடு படுத்துக்கொண்டது.

நாளடைவில்... ஆஸ்துமா நோயாளியாக அவர் ஆனதும்...

சுத்தம்! தேவகி புத்திசாலி.. கணவர் பொன்னைத் தொட்ட
லும் அது மண்ணாக மாறிவிடுவதைப் புரிந்துகொண்டா
அவர் வியாபாரம் செய்து.. பெருநட்டம் அடைவதைவி
எந்த உபத்திரவமும் இல்லாமல் வீட்டிலிருப்பதே மேல் என்
நினைத்தாள்.

அவள் ஏற்கனவே கற்றுவைத்திருந்த 'தையல் கலை
அவளுக்கு கை கொடுத்தது. நில புலன்களை அடமான
வைத்து, சமயத்தில் விற்று குடும்பத்தை ஓட்டிவந்தா
தேவகியின் அண்ணன் சிவராமன்.. இவளது குழந்தைகளி
படிப்புச் செலவிற்கு கணிசமான தொகையைத் தந்
அவ்வப்போது உதவி வந்தார்.

அக்கம் பக்கத்து வீடுகளுக்கு துணி தைத்துக் கொடுப்பதோ
முறுக்கு, அதிரசம், தட்டை முதலிய சீர்பட்சணங்களையு
வீட்டு விசேஷங்களில் செய்து கொடுத்து வருவா
ஈட்டினாள்.

குருவி சேர்ப்பதுபோல் பத்து பவுன் சேர்த்து வைத்
மூத்தமகள் விசாலிக்கு– தனது சக்திக்கு மீறிதான் திருமண
செய்து வைத்தாள்.

மருமகன் செந்தில் கறுப்பாக இருந்தாலும்... அரசாங்
சம்பளக்காரன். மகளை கண்கலங்காமல் வைத்து
கொள்வான் என்ற அவளது நம்பிக்கையில்... சீக்கிரமே
மண்ணள்ளி போட்டான். கிளியை வளர்த்து பூனையின்
கையில் கொடுத்த கதையாகிவிட்டது. தேவகி நிலைகுலைந்து
போனாள்.

பால் பொங்கி பாத்திரத்தின் விளிம்பைத் தொட்டதும்
சட்டென்று அடுப்பை அணைத்தாள், கமலி!

அத்தான் செந்திலை நினைக்கும்போதே.. உடம்பெல்லாம்
கம்பளிப்பூச்சி ஊர்வது போன்ற அருவருப்பு. 'எனக்கும் இதே
மாதிரி வாழ்க்கை அமைந்துவிட்டால்...?' திகிலில் அவளது
நாக்கு உலர்ந்தது.



## 2

'டகடக'வென்று ஜகடை உருள... கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து பித்தளை அண்டாவில் ஊற்றினாள், கமலி.

கத்தரி, வெண்டை, தக்காளி செடிகளுக்கும், முளைக்கிரை, பொன்னாங்கண்ணி, அரைக்கிரை என கீரைப் பாத்திகளுக்கும்– அளவாய் தண்ணீர் ஊற்றினாள்.

அவளது அக்கறையான கவனிப்பில்... தோட்டத்துச் செடிகளெல்லாம் 'தளதள'வென்று விதவிதமான பச்சை வண்ணங்களில் கண்களைக் கட்டிப் போட்டன.

"கமலி! உனக்கு நேரம் ஆகலையா? சாப்பாடு கட்டி வச்சுட்டேன்!" தேவகி அடுப்பங்கரை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து குரல் கொடுத்தாள்.

"இதோ வந்துட்டேன்ம்மா!" பூவாளியை கிணற்று மேடை மீது வைத்துவிட்டு, சட்டென்று வீட்டிற்குள் புகுந்தாள், கமலி.

ஈரமாகிவிட்ட பழைய சேலையைக் களைந்துவிட்டு, வெளிர்நீல பருத்தி சேலைக்கு மாறினாள். தேவகி, கையில் மல்லிகைச் சரத்துடன் வந்தாள்.

நீலநிற பருத்திசேலை அளவான– அழகான உடலைத் தழுவி கர்வப்பட்டுக்கொண்டிருக்க.. இடுப்பைத் தாண்டி அடர்ந்த கூந்தல் பாம்பு போல் நீண்டிருந்தது.

"இவ்வளவு பூ வேண்டாம்மா!"

"பூவை வேண்டாம்னு சொல்லக்கூடாது.. வச்சுக்கோ கமலி! அம்மா ஆசைப்பட்டு கட்டி இருக்காங்க..!" குழந்தைக்கு பால் சோறு ஊட்டிக்கொண்டிருந்த அக்கா விசாலி.. அன்புடன் கடிந்துகொண்டாள்.

வானின் அழகு விண்மீன்களில் உள்ளது. பெண்ணின் அழகு

கூந்தலில் உள்ளது. தேவகி, கமலியின் கூந்தலில் பூவைச் செருகி அந்த அழகை ரசித்தாள்.

கமலி! பெயருக்கேற்றபடி அவளிடம் ஒரு தாமரை மலரின் அழகு குடிகொண்டிருந்தது.

நிலவை சில நட்சத்திரங்களுடன் சேர்த்துப் பிசைந்து வார்த்த சிலை போன்று... கண்களை வசீகரித்தாள்.

அவளது அழகுக்கு அழகைச் சேர்த்தது அவளது நீண்ட கூந்தல்!

டிபன்பாக்சை எடுத்து 'பேக்'கில் திணித்துக்கொண்டாள், கமலி.

"நேரமாயிடுச்சு... கிளம்பட்டுமா?"

"பத்திரமா பார்த்து போயிட்டு வாம்மா!"

"சரிம்மா!" கையசைத்துவிட்டுப் புறப்பட்டாள், கமலி. தெருமுனையில் அவள் தலை மறையும்வரை... தேவகியும், விசாலியும் வாசலிலேயே நின்றிருந்தனர்.

உள்ளே கூடத்தில் அப்பா நடேசன் போர்வையைத் தலைவரை இழுத்து வழியவிட்டுக்கொண்டு... இன்னமும் சுகமான நித்திரையில் மூழ்கிப் போயிருந்தார்.

தேவகி வேதனையுடன் பெருமூச்செறிந்தாள்.

கமலி வேலைக்குச் சேர்ந்து இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. கமலி பி.எஸ்சி. முடித்திருந்தாள். கூடுதல் தகுதியை வளர்த்துக்கொள்ள கம்ப்யூட்டருடன், எதற்கும் இருக்கட்டுமே என்று உள் அலங்காரம், சுருக்கெழுத்து எல்லாமே படித்து தேறியிருந்தாள்.

பத்தரிகையில் விளம்பரம் பார்த்து விண்ணப்பம் செய்த நிறுவனத்தில் நேர்முகத் தேர்வு வந்ததும் மகிழ்ந்துபோனாள்.

அவள் கலந்துகொண்ட முதல் நேர்முகத் தேர்விலேயே தேர்வு செய்யப்படுவாள் என்று சத்தியமாய்... கமலி எதிர்பார்க்கவில்லை!



"அம்மா! போதும்மா... நீ இத்தனை ஆண்டு இந்த குடும்பத்துக்காக... ஓடாக தேய்ஞ்சு உழைச்சது போதும். அக்காவை நிரந்தரமா இங்கேயே இருக்கச் சொல்லும்மா. பாவம்! அத்தான் குடிகாரர்... சீட்டாடுற பழக்கம் வேற... இது பத்தாதுன்னு சந்தேகப் புத்தி. கூடவே, பொம்பளை சகவாசம்னு திரிகிற மனுஷன்!

அடி– உதை, சித்திரவதை பட்டு அந்தாளுகூட அக்கா வாழணுமா? அக்காவையும், தீபு குட்டியையும் கடைசிவரைக்கும் வச்சு நான் காப்பாத்துறேன்ம்மா!"

வேலை நியமன உத்தரவு கிடைத்ததும்... மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப்போன கமலி... நேசமாய் தேவகி மற்றும் விசாலியின் கரங்களைப் பற்றிப் பேசியபோது... இருவரது விழிகளும் கண்ணீரில் தளும்பின.

"கமலி... நிதானமா இரும்மா! நான் இப்போ ஒரு பெண் குழந்தைக்கு தாய்! எடுத்தோம் கவிழ்த்தோம்னு எந்த முடிவையும் எடுக்க முடியாது. பொண்ணா பொறந்துட்டா... எல்லாத்தையும் பொறுத்து சகிச்சு வாழப் பழகிக்கணும், கமலி!

இனி எனக்கு பகவான் காட்டிய வழி! நடக்கிறது நடக்கட்டும்! உ...உனக்காவது ஒரு நல்ல கணவன் வாய்க்கணும்டி! உன் வாழ்க்கையாவது நல்லபடியா அமையணும். அதுதான் என் பிரார்த்தனை!"

நா தழுதழுக்க விசாலி பேசியது... இன்னமும் கமலியின் செவிகளில் ரீங்காரமிட்டுக்கொண்டுதான் இருந்தது.

தோளில் 'பேக்'கை மாட்டிக்கொண்டு ஓட்டமும், நடையுமாக... பஸ் நிறுத்தத்தை நோக்கி விரைந்தாள், கமலி.

தடதடத்து வந்த 'பைக்' அவள் மீது மோதாத குறையாக 'சரக்' என்று நின்றதும்... வெலவெலத்துப் போய் ஏறிட்டாள்.

அத்தான் செந்தில்! அவளை ஏற இறங்கப் பார்வையாலேயே அளவெடுத்ததைக் கண்டு... உள்ளூர மிகவும் கூசிப் போனாள்.

"நீங்களா...? நான் பயந்தே போயிட்டேன்!" உள்ளுக்குள் பொங்கி வந்த ஆத்திரத்தை சிரமப்பட்டு அடக்கினாள்.

"என்னைத்தவிர வேறு யாரு உன்கிட்ட இவ்ளோ உரிமையா நடந்துக்குவாங்க கமலி?" கொஞ்சலாகப் பேசியவனின் முகத்தில் ஓங்கி அறைய வேண்டும் போல் அவளது கை பரபரத்தது.

'பொறுக்கி, குடிகாரன், போக்கிரி' கண்டபடி திட்டிவிட கமலியின் நாக்கு துடிக்கத்தான் செய்தது.

செந்திலுக்கு களையான தோற்றம் கிடையாது. விசாலியோ... பறித்தெடுத்த மஞ்சள்கிழங்கு போல்... களை சொட்டும் முகத்துடன் இருந்தாள்.

விளைவு...? தொட்டதற்கெல்லாம் சந்தேகப்பட்டு.. நாக்கில் விஷத்தைத் தடவிக்கொண்டு... சொல்லம்புகளால் அவளது மென்மையான இதயத்தைக் குத்திக் கிழித்து... அமிலத்தை ஊற்றினான்.

இதெல்லாம் போதாதென்று... அவனுக்கு 'கண்ட பெண்களுடன் சகவாசமும்' இருந்தது. சம்பளம் கைக்குக் கிடைத்தவுடன்... சல்லாபத்துக்கு கிளம்பிவிடுவான்.

'பரபரப்பான காலை நேரத்தில் குறுக்கே வந்து நின்று கழுத்தை அறுக்கிறானே?' கமலி எரிச்சலுடன் நினைத்துக் கொண்டிருந்தபோதே... அவள் போகவேண்டிய பஸ் 'உப்'பென்று பெருத்துப்போய் வந்து நின்றது.

"நா வரேன்!" பதிலுக்குக்கூட காத்திராமல்... இடுக்கில் நுழைந்து எப்படியோ உள்ளே சென்றுவிட்டாள். ஜனநெருக்கடியில் வியர்த்து வழிந்தது.

'சந்தேகப்பிராணி... பொம்பளைப் பொறுக்கி! இந்த மாதிரியான ஆள் எனக்கு வாய்ச்சா... என்னால ஒரு நிமிடம் கூட சகிக்க முடியாது. கடவுளே!'

கமலியின் அடிமனதிலிருந்து வழக்கம்போல்... இந்த எண்ணம் எழும்பியது.



ஆனால், விதி... வித்தியாசமாக தன் விளையாட்டை ஆரம்பித்தது.

## 3

**கா**ரைவிட்டு இறங்கி புயல் வேகத்தில் கவுசிக்வர்மா உள்ளே நுழைந்ததும், வேலையில் மும்முரமாக ஆழ்ந்திருந்த அலுவலகப் பணியாளர்கள் மரியாதை நிமித்தமாக எழுந்து நின்றனர்.

பியூன் ரெங்கசாமி, சூட்கேசை தூக்கிக்கொண்டு எஜமானின் பின்னால் ஓடினான்.

'மேனேஜிங் டைரக்டர்' என்று பித்தளை எழுத்துகளால் பொறிக்கப்பட்டிருந்த கதவைத் தள்ளித் திறந்து உள்ளே புகுந்த கவுசிக், தனது சுழல்நாற்காலியில் அமரும் முன் சட்டென்று நின்றான்.

சுவரில் பெரிதுபடுத்தப்பட்ட புகைப்படத்தில்... மாலையின் பின்னே அவனது தாயார் வரலட்சுமி புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

பயபக்தியுடன் கண்ணீர் மல்க, படத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டான், கவுசிக்.

அவன் சுழல்நாற்காலியில் வந்தமர்ந்ததும்... சொல்லி வைத்தாற்போல் செயலாளர் பிரியா பவ்வியமாய் வந்து நின்றாள்.

"குட்மார்னிங் சார்!" இலேசாக தலையசைத்த கவுசிக் தன் பார்வைக்காக மேசையில் வைக்கப்பட்ட கோப்புகளை ஊன்றி கவனித்துக் கையெழுத்திட்டான்.

"மதன்லால் கம்பெனிக்கு அந்த 'கொட்டேஷனை' இன்னிக்கே அனுப்பிடுங்க... புராஜெக்ட் அறிக்கை தயாரா

இருக்கா? நாளைக்கு காத்தால என் மேசைக்கு வந்தாகணும். 'பெண்டிங்' எதுவும் இருக்கக்கூடாது, சரியா?" படபடவென்று பொரிந்து தள்ளினான்.

கவுசிக்வர்மா... இருபத்தொன்பது வயது, இளைஞன், 'வர்மா பில்டர்ஸ்', 'வர்மா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்', 'வர்மா இண்டஸ்ட்ரீஸ்', 'வர்மா அப்ளையன்சன்ஸ்' முதலிய நிறுவனங்களுக்குச் சொந்தக்காரன்!

தந்தை விஷ்ணுவர்மன் சமீபகாலத்தில்... பக்கவாத தாக்குதல் ஏற்பட்டு படுத்த படுக்கையாகிவிட்டார். அவரது காலத்தில் ஓரளவு சுமாராக போய்க்கொண்டிருந்த தொழில், கவுசிக் பொறுப்பேற்ற சில ஆண்டுகளுக்குள் பன்மடங்கு லாபத்துடன் பல்கிப் பெருகி இருந்தது.

அம்மா வரலட்சுமி, கவுசிக் சிறுகுழந்தையாக இருந்த போதே... காலமாகிவிட்டாள். அவள் உயிரோடு இருந்த காலத்தில் ஏழையும், அனாதையுமான ஒன்றுவிட்ட தங்கை மரகதத்தை வீட்டோடு தங்கவைத்து பாசம் காட்டி வந்தாள்.

இளம் வயதிலேயே விதவையாகிவிட்டவள் என்ற காரணத்தாலும்... நிர்க்கதியாய் நிற்கிறாள் என்பதாலும் அவள் மீது அதீத பாசத்தைக் கொட்டினாள், வரலட்சுமி.

விளைவு...? வரலட்சுமி திடீரென்று காலமானதும், விஷ்ணுவர்மன் என்ற புளியங்கொம்பை மரகதம் வளைத்துப் பிடித்துவிட்டாள்.

தாயின் மறைவை ஜீரணித்துக்கொள்ளும்முன் அப்பா மரகதத்தைக் கைப்பிடித்ததை கண்டு உள்ளூர உடைந்து போனான், கவுசிக்!

அடுத்த ஆண்டே மரகதத்திற்கு தீபக்வர்மா பிறந்ததும், இளைய மகனை தூக்கி வைத்துக் கொஞ்சியதும், பிஞ்சு மனதைப் புண்படுத்தின. கவுசிக் மனத்தளவில் மரத்துப்போய் தனித் தீவாகவே நடமாடத் தொடங்கினான்.

தீபக், அச்சில் வார்த்தது போல் அண்ணன் கவுசிக்கின்



ஜாடையில் இருந்தான். இருவருக்கும் ஏறத்தாழ ஆறு வயது வித்தியாசம் இருக்கும்.

கவுசிக் எந்த கெட்ட பழக்கத்திற்கும் அடிமை ஆனதில்லை. காலையும், மாலையும் தீவிர உடற்பயிற்சி செய்து உடம்பை கட்டுக்கோப்பாக வைத்திருந்ததால், ஆறு ஆண்டு இடைவெளி கூட தெரியாமல் தீபக்கைப் போன்று இளமையாக பொலிவுடன் காட்சியளித்தான்.

'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்' என்பதற்கேற்ப மரகதம் சதா நான்கு விரல்கடை அகல ஜரிகை 'பார்டர்' போட்ட பட்டுச்சேலையைக் கட்டிக் கொண்டு... கழுத்து கொள்ளாமல் நகைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு... கூட்டம், மாதர் சங்கம் என்று வளைய வந்தாள்.

தீபக்! ஒட்டுமொத்தப் பணக்காரத் திமிரை குத்தகைக்கு எடுத்திருந்தான். பணத்திலேயே புரண்டு வளர்ந்ததால் கண்களில் கர்வமும், அலட்சியமும் மிதக்க... யாரையும் ஒரு பொருட்டாகவே மதிக்காமல் 'தான்தோன்றி'யாக நடந்துகொண்டான்.

உலகத்தில் உள்ள அனைத்து கெட்டப் பழக்கங்களும் அவனுக்கு வசமாயின!

தீபக்கிற்கும், கவுசிக்கிற்கும் உள்ள உருவ ஒற்றுமையை மிகவும் நெருங்கிப் பழகியவர்களால் மட்டுமே கண்டுகொள்ள முடியும்.

புதிதாகப் பார்ப்பவர்களுக்கு இருவருக்கும் உள்ள உருவ ஒற்றுமை குழப்பத்தையே ஏற்படுத்தும்.

கவுசிக் தனது கவனத்தையெல்லாம் தொழிலில் திருப்பி முழுவீச்சில் செயல்பட்டதால் சிகரங்களைத் தொட்டுக் கொண்டிருந்தான்.

ஆறு மாதங்களுக்குமுன் புதிய நிறுவனம் ஒன்றை அவன் ஆரம்பித்திருந்தான். அது தற்போது முன்னேறிக்

கொண்டிருந்தது.

உதிரிப்பாகம் தயாரித்து, பெரிய பெரிய கார் கம்பெனிகளுக்கு கொடுக்கும் நிறுவனம், அது! பெருமளவு ஏற்றுமதியும் ஆனது.

மற்ற நிறுவனங்களையும் கவுசிக்தான் கட்டிக்காத்து வந்தான். நண்பகல் ஒரு மணிக்குமேல் புதிய நிறுவனத்தைக் கவனிக்க அண்ணா நகருக்குச் சென்றுவிடுவான்.

கடந்த ஒரு வாரமாக மற்ற நிறுவனங்களில் 'ஆடிட்டிங்' நடந்துகொண்டிருந்ததால், புதிய நிறுவனத்துக்கு அவனால் செல்ல முடியவில்லை.

அந்த நிறுவனத்தில் சில காலியிடங்கள் இருந்தன. அதற்குரிய தகுதிவாய்ந்த ஊழியர்களை அவனது மேலாளரே நேர்முகத் தேர்வு நடத்தி, தேர்வு செய்து இருந்தார்.

கவுசிக், மேலாளர் வரதனுக்கு போன் செய்தான். "புதிய ஊழியர்களுக்கு முறையா பயிற்சி கொடுக்கிறீங்கதானே? நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துடுவேன்" என்று கூறிவிட்டு வெளியேறி, காரை நோக்கி நடந்தான்.

தந்தை விஷ்ணுவர்மன் ஆடாத ஆட்டம் ஆடி, படுத்தபடுக்கையாகிவிட்டார். தம்பி திபக்வர்மா விளம்பர நிறுவனத்தைத் தொடங்கி 'மாடலிங்' செய்ய வரும் பெண்களிடம் மன்மதராசா ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தான்.

பணத்திற்காக அடைக்கலம் கொடுத்த அக்காளின் கணவரையே வளைத்துப்போட்ட சித்தி மரகதத்தின் அடாத செயல், கவுசிக்கை பெரிதும் ரணப்படுத்தி இருந்தது.

'பணம், அந்தஸ்துக்காக ஒரு பெண் எதையும் செய்வாள் போலும்' என்ற தவறான எண்ணம் அவனுள் விதையாக விழுந்து, விருட்சமாய் வளர்ந்திருந்தது.

எந்தப் பெண்ணைப் பார்த்தாலும், சட்டென்று உள்ளுக்குள் சுருங்கிவிடுவான். முகத்தை கடுவன் பூனையாக வைத்துக் கொள்வான்.

தனது வாழ்வில் எந்தப் பெண்ணுக்கும் இடமளிக்காமல்



பிரமசாரியாகவே இருந்துவிடலாம் என்று உறுதிபூண்டிருந்தான், கவுசிக்.

கார் சீறிப் பறந்துகொண்டிருந்தது.

குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் மனதைச் சூழ்ந்து கவ்வ— காரை படுவேகமாக ஓட்டினான், கவுசிக்!

அந்த வளைவில் திரும்பும்போது திடீரென்று 'பிரேக்' பிடிக்காமல் இலக்கில்லாமல் இசகுபிசகாக வளைந்து சென்ற கார், சாலையோர மரத்தில் படுவேகமாக மோதியது.

குருதி 'குபுகுபு'வென்று பெருக்கெடுக்க— பலத்த காயத்துடன் 'ஸ்டீயரிங்'கில் தலைசாய்த்த கவுசிக் மயக்கத்தில் மூழ்கினான்.

## 4

"நல்லது கமலி!" பாராட்டிய மேலாளர் வரதராஜனை திகைத்துப்போய் ஏறிட்டாள், கமலி.

"சார்..."

"நீ ரொம்ப சமீபத்திலேதான் படிச்சி முடிச்சிருக்கீங்க. அனுபவம் கிடையாது. ஆக, குறைஞ்சது ஒரு மாசமாவது உனக்கு வேலையை கத்துக்கொடுக்கணும்னு நெனச்சிருந்தேன். உன்னோட ஆர்வத்தைப் பார்த்தா... ரெண்டு வார பயிற்சி போதும்னு தோணுதும்மா!"

"நன்றி சார்."

"உதவி மானேஜர் மிஸ் மல்லிகா இப்போதான் உன்னைப் பத்தி பேசினா!" புன்னகைத்தார், வரதராஜன்.

"வேலையில் கண்ணும் கருத்துமா ஆர்வத்தோடு செயல்பட வேண்டியது என்னோட கடமை சார்!" பவ்வியமாய் பதிலளித்தாள், கமலி.

"ரொம்ப சரி! இன்னிக்கு எம்.டி. வர்றேன்னு சொல்லி

இருக்காரு! புதுசா வந்தவங்களை சந்திப்பாருன்னு நெனைக்கிறேன்."

கமலி வெளிப்பட்டு நடந்து, பக்கவாட்டிலிருந்த கேபினுக்குள் நுழைந்தாள். மல்லிகா கோப்புகளை புரட்டிக்கொண்டிருந்தாள். பக்கத்து இருக்கையில் வந்தமர்ந்தாள் கமலி.

கமலிக்கு மல்லிகாவை முதல்நாள் பார்த்த மாத்திரத்திலேயே மிகவும் பிடித்துவிட்டது. மல்லிகாவும் எந்த பந்தாவுமின்றி சகஜமாகப் பழகினாள்.

வேலை நேரம் தவிர மற்ற நேரங்களில் கலகலப்பாக அவள் பேசியதால், கமலி தயக்கம் உதறி 'டென்ஷன்' குறைந்து சிரித்தாள்.

"மல்லிகா மேடம்! இன்னிக்கு எம்டி. வரப்போறாராம்!"

"இன்னிக்கு இந்த நிறுவனம் முதலிடத்தில் இருக்குன்னா அதுக்கு காரணமே எம்டி. சார்தான்! அவரோட உழைப்பும் உத்வேகமுமே இந்தளவுக்கு உசத்தி இருக்கு! எல்லா அலுவலகத்திலும் அனுபவம் எதிர்பார்ப்பாங்க. ஆனா, திறமை இருக்குன்னு தெரிஞ்சா, துணிஞ்சு வேலையில் உட்கார வச்சுடுவாரு. திறமை, உழைப்பு, ஊக்கம் இது மூணும் இருந்துச்சுன்னா, நம்மை உச்சிக்குக் கொண்டுபோய் நிறுத்திடுவாரு! சதா சிடுசிடுன்னு இருந்தாலும், 'ஜெண்டில்மேன்'!"

மல்லிகா பேசப் பேச 'எம்.டி.'யின் மீது இருந்த மதிப்பும், மரியாதையும் உயர்ந்துகொண்டே போனது.

ஒரு நல்ல நிறுவனத்தில் வந்து வேலைக்கு அமர்ந்துவிட்டோம் என்ற திருப்தி கமலியின் மனதைப் பூரணமாக ஆக்கிரமித்தது.

மதிய உணவு இடைவேளையில் டிபன்பாக்சை எடுத்துத் திறந்தாள், கமலி.

அந்த கேபினை நிறைத்துக்கொண்டு புளியோதரையின் மணம் நாசியைத் துளைத்தது. தொட்டுக்கொள்ள வைத்திருந்த எள்ளுத் துவையலும் சுவையும் மணமுமாக இருந்தது.

திடீரென்று கமலியின் செல்போன் அலறியது.



"வயசுப்பொண்ணு வேலைக்குப் போகப்போறே? பஸ் பிடிச்சு வீட்டுக்கு வந்துசேர முன்ன பின்ன ஆகலாம். நான் வயத்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கணும். ஒரு செல்போன் வாங்கிக்கோ கமலி. உன் கையில போன் இருந்தா, எதுக்கு தாமதம்ன்னு பாபுவைவிட்டு போன் பண்ணச்சொல்லி தெரிஞ்சுப்பேன் இல்லையா?"

அம்மா தேவகியின் திருப்திக்காக சமீபத்தில்தான் செல்போன் வாங்கி இருந்தாள், கமலி.

"கமலி பேசுறேன்... அலோ..."

"அலோ... நாங்க இரத்ததான அமைப்பில் இருந்து பேசுறோம்மா! வீ.ஆர். ஆஸ்பத்திரியில் ஒரு 'ஏ.பி. நெகட்டிவ்' ரத்தம் உடனடியாக தேவைப்படுதுன்னு சொன்னாங்க! ஏற்கெனவே ஒரு பாட்டில் ரத்தம் ஏத்தி இருக்காங்க... பத்தலையாம்! ஆபத்தான நிலை போல... கையிருப்பு இல்லாததால... நமக்கு போன் பண்ணி கேட்டாங்க. நம்ம அமைப்பில் இந்த குரூப் ரத்தம் உள்ளவங்க மொத்தம் நாலு பேருதான்... மத்த மூணு பேருமே ஊரில் இல்லை. அதான் உனக்கு போன் பண்ணினோம். கொஞ்சம் சீக்கிரம் வரமுடியுமா, கமலி?"

"இ...இதோ நான் கிளம்பிட்டேன் சார்!"

அரக்கப் பரக்க 'ஹேண்ட்பேக்'கை மாட்டிக்கொண்டு... மானேஜரின் கேபினுக்குள் தயக்கமாய் நுழைந்தாள், கமலி.

'வேலையில் அமர்ந்து மூன்று நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள் அரை நாள் விடுப்பு வேண்டும் என்று கேட்டால்... ஏதாவது நினைத்துக்கொள்வாரோ?

அவர் என்ன நினைத்தாலும் சரி... இது உயிர்ப் பிரச்சினை! ஊசலாடிக்கொண்டிருக்கும் உயிருக்கு ரத்தம் கொடுத்து காப்பாற்ற வேண்டியது என் கடமை!'

விஷயத்தைக் கேள்விப்பட்ட வரதராஜன்... நழுவப் பார்த்த மூக்குக்கண்ணாடியை ஆட்காட்டி விரலால் சரிப்படுத்திக் கொண்டே... அவளை ஏறிட்டார்.

"வர்மா சார் வர்ற நேரம், இது! புது ஆட்களை பார்க்கப் பிரியப்பட்டாரே... சரி! அந்த நோயாளியைக் காப்பாத்த வேண்டியது அதைவிட முக்கியமாச்சே...! வர்மா சாரும் மனிதாபிமானம் உள்ளவருதான்! நீ போம்மா... நான் சாருகிட்டே சொல்லிக்கிறேன்!"

அவசரமாக விழுந்தடித்துக்கொண்டு வெளியே வந்தாள்.

'பஸ்சுக்காக காத்திருந்தால்... அந்த நோயாளி நிலைமை என்னவாகும்?'

அவசரத் தேவைக்காக நூற்றி ஐம்பது ரூபாயை அம்மா தேவகி தந்திருந்தாள்.

காலியாக வந்த ஆட்டோவில் சட்டென்று ஏறி அமர்ந்து... அந்த ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தாள், கமலி!

"உரிய நேரத்துல நீங்க கொடுத்த ரத்தம்... அந்த உயிரையே காப்பாத்தி இருக்கு! நன்றி!" அந்த ஆஸ்பத்திரி தலைமை மருத்துவர் அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"மனிதநேயத்தோடு செயல்பட வேண்டியது நம்ம கடமை சார்! விலைமதிப்பில்லாத ஒரு உயிரைக் காப்பாத்தின புண்ணியம் எனக்கு இன்னிக்கு கிடைச்சிருக்கே! அதுக்கு நான்தான் நன்றி சொல்லணும்."

கமலியின் இதழ்க்கடையில் ஒரு முறுவல் பூத்தது.

ஆஸ்பத்திரியை விட்டுச் செல்லும்முன்... ஏதோ ஒன்று அவளைத் தடை செய்தது.

'ஐ.சி.யூவில் இருக்கும் அந்த மனிதனை... பார்த்துவிட்டுச் சென்றால் என்ன?'

வெளியில் காத்திருக்கும் அவனது குடும்பத்தாரிடம்... தன்னைப்பற்றி சொல்லவேண்டியிருக்கும்!

செய்த உதவியை மறைமுகமாக பிரகடனப்படுத்துவது போலாகுமே?'

உள்ளூர பொங்கி வந்த ஆவலைக் கட்டுப்படுத்திக்கொண்டு விருட்டென்று வெளியேறினாள், கமலி.



# 5

இருள் விலகத் தொடங்கும் செந்தூரவானம் மாமரத்தில் இருந்த சிறுகூட்டுக்குள் குருவிகள் தங்களுக்குள் ரகசியம் பேசிக்கொண்டிருந்தன.

தோட்டத்தில் பூத்திருந்த பவளமல்லிப் பூக்களின் நறுமணத்தை சுமந்து வந்த தென்றல்... பால்கனியில் வந்து நின்ற கவுசிக்கின் முகத்தை இதமாய் வருடிச் சென்றது.

கவுசிக் தலையில் பெரிய 'பேண்டேஜ்' கட்டப்பட்டிருந்தது. விபத்து நடந்து முடிந்து இருவாரங்கள்தான் ஆகி இருந்தன.

'பரிபூரணமாக ஓய்வெடுக்க வேண்டும். சிறிதும் சிரமம் கொடுக்கக்கூடாது' என்று குடும்ப மருத்துவர் அவனை எச்சரித்திருந்தார்.

ஆண்டுக்கணக்கில் வீட்டிலேயே அடைபட்டிருப்பது போன்ற அயர்ச்சிதான் ஏற்பட்டது கவுசிக்கிற்கு.

அப்பா விஷ்ணுவர்மனுக்கு சமீபகாலமாக அவன் மீது பாசம் பொத்துக்கொண்டு வந்தது.

மகனுக்கு விபத்து நடந்ததைக் கேள்விப்பட்டு... மனிதர் புழுவாய்த் துடித்துப் போனார். மனைவி மரகதத்தைப் பற்றி அவனிடம் ஏதோ சொல்லத் துடித்தார்.

பக்கவாதம் வந்த தன்னை கவனிக்கக்கூட நேரமில்லாமல்... அலங்கார பதுமையாக அலைந்தவளின் மீது... விஷ்ணுவர்மனுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

அவரைக் கவனிக்க... காலையும் மாலையும் இரு நர்சுகள் வந்து சென்றனர். கவுசிக் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடந்தபோது... ஆஸ்பத்திரி வரார்ண்டாவில் நின்றிருந்த மரகதம் செல்போனில் தனது தோழிகளுக்கு செய்தியை தம்பட்டம் அடித்தாள்.

மூத்ததாரத்து மகன் கவுசிக்கின் மீது அவள் உயிரையே

வைத்திருப்பதாக ஊரார் நம்பும்படி... மிக அழகாகப் 'போக்கு' காட்டினாள்.

தம்பி தீபக் அந்த நேரத்தில் நண்பர்களுடன் சிம்லாவுக்கு சுற்றுலா போயிருப்பதாக... கவுசிக்கிடம் கூறினாள்.

கவுசிக் வீட்டிற்கு வந்ததும்... நர்சின் உதவியோடு அப்பா சக்கர நாற்காலியில் அமர்ந்தவண்ணம்... அவனது அறைக்கு வந்துவிடுவார்.

உடலின் இடதுப்பக்கம் முழுவதும் செயல் இழந்து போனதால்... அவர் பேச முற்பட்டபோது... வாய் ஒரு பக்கம் இழுத்துக் கோணலாகியது.

நேற்று இரவுகூட வெகுநேரம் வரை கவுசிக்கை வைத்த கண்வாங்காமல் பார்த்து... தாரை தாரையாக கண்ணீர் வடித்துவிட்டுத்தான் சென்றார்.

வழக்கம் போல் கவுசிக் வாயைத் திறக்கவே இல்லை. தாடை இறுக மவுனமாக... கைகளை மார்பின் குறுக்கே கட்டியபடி அமைதி காத்தான்.

'ஊகூம்! இதற்குமேல் வீட்டில் இருந்தால்... பைத்தியமே பிடித்துவிடும்... இன்றைக்கு அலுவலகம் செல்ல வேண்டியதுதான்!'

உள்ளுக்குள் முடிவெடுத்தபடி... பால்கனியில் உள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தபோதுதான்... சட்டென்று அந்த நினைவு வந்தது.

'உயிருக்குப் போராடியபோது... ரத்தம் கொடுத்து என்னுயிரைக் காத்தாளே ஒரு பெண். அவளுக்கு இன்னமும் நான் நன்றி சொல்லவில்லையே?'

"அந்தப் பொண்ணைப் பார்த்தா... ஏழைப் பெண் மாதிரிதான் தெரியுது. வழக்கமாக ரத்ததானம் செய்பவள்போல! ஒரு பெரிய விஐபி.யை காப்பாத்தி இருக்கோம்னு தெரிஞ்சும்... தான் செஞ்ச உதவிக்கு... எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காம வந்த சுவடு தெரியாம போயிட்டா! உண்மையிலே 'கிரேட்!' தலைமை





## ஏன் தெரியுமா?

புகுந்த வீட்டில் மணப்பெண்ணை ஐந்துமுகக் குத்துவிளக்கு ஏற்ற சொல்கிறார்கள், அது ஏன் தெரியுமா?

'பெண்மையின் அன்பு, நிதானம், மன உறுதி, சமயோசிதம், சகிப்புத்தன்மை ஆகிய ஐந்தும் மின்ன வேண்டும் என்பதற்காகத்தான்!

—ரெ.க. இராமானுசம், மதுரை.

மருத்துவர் அந்தப் பெண்ணைப் பாராட்டிப் பேசியது இன்னமும் கவுசிக்கின் காதுகளில் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

'இந்தக் காலத்திலும் இப்படியொரு பொண்ணா?' அடிமனதில் ஆச்சரியம் முளைவிட்டது.

சித்தி மரகதத்தைப் பார்த்ததில் இருந்து... 'எல்லாப் பெண்களுமே பணத்திற்கு ஆலாய் பறப்பவர்கள்' என்று நினைத்துக்கொண்டிருந்தேன்? அந்த எண்ணம் தவறா?' ஆச்சரியம் உள்ளுக்குள் கிளை பரப்பி படர்ந்தது.

ஆஸ்பத்திரியைவிட்டு வரும்போது... மறக்காமல் அந்தப் பெண்ணின் முகவரியை வாங்கி இருந்தான் கவுசிக்.

பெயர்கூட... ஏதோ... ஆங்! கமலி! கமலி!

'அழகான பெயர்! ஆளும் அழகாய் இருப்பாளா?' நெஞ்சுக்குள் ஒரு சிலிர்ப்பு பொங்கியது.

'சீச்சீ! என்னது இது? என் மனசு இனம்புரியாமல்... ஏன் இப்படி தவிக்கிறது? இன்றைக்கு அவளைப் பார்த்து... நன்றி தெரிவித்துவிட வேண்டியதுதான்!'

கட்டுப்படுத்த கட்டுப்படுத்த மனம்தாவிக் குதித்தது-அத்துமீறி

ஓடி... மீண்டும் மீண்டும் கமலியின் பெயரையே மந்திரம்போல உச்சரிக்கத் தொடங்கியது.

'தனது நிறுவனத்திற்குச் சென்று முக்கியமான அலுவலை முடித்துவிட்டு... அந்த முகவரிக்குச் சென்று... கமலியைப் பார்த்து நன்றி தெரிவித்துவிட வேண்டியதுதான்!'

முடிவெடுத்ததும் மனதில் ஒருவித பரபரப்பும், மகிழ்ச்சியும் போட்டா போட்டி போட்டுக்கொண்டு வந்து அமர... லேசாக சீட்டியடித்துக்கொண்டே... குளியலறையை நோக்கி நடந்தான், கவுசிக்.

## 6

**வ**ழக்கமாய் அதிகாலை ஐந்து மணிக்கே கமலி கண் விழிப்பவள் என்பதால் தன்னிச்சையாய் இன்றும் விழித்துக் கொண்டாள். இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து, உள்ளங்கையில் முகம் பார்த்தாள்.

புருவ மத்தியில் நினைவை நிறுத்தி பதினைந்து நிமிடங்கள் ஆழ்ந்த தியானம் செய்தாள். சிந்தனைகள் ஒருமுகப்பட்டு, மனம் வெற்றுத்தாளானது.

அக்கா விசாலி நேற்றுதான் குழந்தை தீபிகாவுடன் புக்ககம் கிளம்பி இருந்தாள்.

விசாலியை எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள், கமலி! அவள் எதையும் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

"என்னக்கா, இது? குடிச்சுட்டு வந்து கண்டபடி திட்டுறாரு, அந்த மனுஷன்! பால்காரன், காய்கறிகாரன்கிட்ட பேசினாக்கூட சந்தேகப்பட்டு குதறிடுவாரு... இதெல்லாம் போதாதுன்னு போனசா- அடி- உதை வேற... கண்டிப்பா இந்த மாதிரி ஆளுகூட நீ குடும்பம் நடத்தணுமா? மாமியார்கிட்டேயும் அப்பப்ப மண்டகப்படி வாங்கிக் கட்டிக்கணும். இது தேவையா?



இப்பதான் உனக்கு காய்ச்சல் விட்ருக்கு! மறுபடியும் போய் வதைபடணுமாக்கா? எந்தக் கொடுமை பண்ணினாலும் சகிச்சுக்கிட்டு... திரும்ப திரும்ப அந்த மனுஷன் காலடியிலே போய் நீ விழறதாலதான் அந்தாளுக்கு தெனாவட்டு ரொம்ப அதிகமாயிடுச்சு!" கமலி கோபத்தில் பொரிந்து தள்ளிவிட்டாள்.

"கமலி! உனக்கு உலகம் தெரியாது- நீ சின்னப்பொண்ணு, கொஞ்சம் பேசாம இரு!" அம்மா தேவகி அதட்டினாள்.

"என்னம்மா நீ? அத்தான் தொட்டதுக்கெல்லாம் கைநீட்டுற மனுஷன்! குடிபோதையில மூர்க்கத்தனமா அடிச்சு, அக்காவுக்கு ஏதாச்சும் ஆயிடுச்சுன்னா... என்னாகும்? எ..எனக்கு அதான் பயமா இருக்கு."

தமலிக்கு துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது.

"அதான் மாப்பிள்ளையே வலியவந்து கூப்பிடுறாரே? என் வளையலை அடமானம் வச்சு விசாலிக்கு ஐயாயிரம் ரூபா கொடுத்திருக்கேன்! மாமியார்க்காரி பணத்தைப் பார்த்துட்டா 'கப்'புன்னு வாயை மூடிக்கிட்டு இருப்பா- வாழ்க்கைன்னா அப்படித்தான்! கொஞ்ச நாளானா எல்லாம் சரியாயிடும்."

"இப்படியே சொல்லிட்டிரு! இன்னும் எத்தனை நாளைக்கு அவ தாக்குப்பிடிப்பா? இப்பவே இந்த வீடு அடமானத்துல இருக்கு! என்னவோ செய்யுங்க!"

"இவ வாழாவெட்டியா வந்து உட்கார்ந்தா நீ கரையேற முடியாது. புரிஞ்சுக்கோ."

"வேணாம்! நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லை- அக்காபடுற சித்திரவதையைப் பார்த்து எனக்கு 'அலர்ஜி'யா இருக்கு! தயவுசெஞ்சு அந்தப் பேச்சை இனி எடுக்காதேம்மா!"

அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்த தம்பி பாபு மூவரையும் மிரட்சியுடன் நோக்கினான்.

'பாவம்! 'செமஸ்டர்' பரீட்சைக்கு கட்ட பணம் வேண்டும்





என்று பத்து நாட்களுக்கும் மேலாக ஜாடை மாடையாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.'

வீட்டுக் கடனுக்கு இரண்டு மாதங்களுக்கும் மேலாக வட்டி கட்ட முடியவில்லை!

'யார் எக்கேடு கெட்டுப்போனால் எனக்கென்ன?' என்ற ரீதியில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்த அப்பா நடேசன், 'தேமே' என்று பழைய செய்தித்தாளை அக்கறையுடன் மேய்ந்துகொண்டிருந்தார்.

வீட்டில் அரிசி, பருப்பு இருக்கிறதோ, இல்லையோ... தனது ஆஸ்துமா பிரச்சினைக்குத் தேவையான மருந்து–மாத்திரைகளுக்கான பணத்தை கறந்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார், அப்பா நடேசன்.

பாவம் அம்மா... பொறுப்பற்ற மனிதரைக் கட்டிக்கொண்ட பாவத்திற்கு குடும்ப பாரத்தைச் சுமந்து விழிபிதுங்கித்தான் போனாள்.

மகள் விசாலியாவது அரசாங்க சம்பளக்காரனை மணந்து கொண்டு சுகப்படுவாள் என்று நம்பி இருந்தாள், தேவகி.

மருமகனாக வந்த செந்தில், அந்த குடும்பத்தில் கொஞ்சநஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்த நிம்மதியை வழித்து துடைத்துப் போட்டுவிட்டான்.

சட்டென்று நினைவு கலைந்து எழுந்தாள். அவள் குளித்து முடித்து வெளியில் வரும்போது அம்மா தேவகி வரக் காப்பியை நீட்டினாள்.

"சாரி... சாரிம்மா! நேத்து நான் வேற... உன் மனசை நோகடிச்சுட்டேன். ம..மன்னிச்சுடும்மா!" நா தழுதழுத்தாள், கமலி.

அதன்பின், காலை நேரத்துப் பரபரப்பு தொற்றிக்கொள்ள... கால்களில் சக்கரத்தைக் கட்டிக்கொள்ளாத குறையாக... அவசர கதியில் தயாராகி அலுவலகத்திற்கு ஓடினாள்.

இன்று அவளுக்குள் ஒரு புதிய ரசாயன மாற்றம் ஏற்பட்ப்

போகிறது என்பதை கமலி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அன்று அலுவலகம் வந்தவள் வழக்கம் போல் தனது மேசையைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு கம்ப்யூட்டரை 'ஆன்' செய்தாள்.

மனதைப் பாறாங்கல்லாய் அழுத்திக்கொண்டிருந்த கவலை சட்டென்று மாயமாய் மறைந்தது. அலுவலகத்திற்கு வந்துவிட்டால் கவலை, மன அழுத்தம், சோகம் ஆகியவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு முழு கவனத்துடன் கமலி செயல்படுவாள்.

"கமலி! எம்.டி. இன்னிக்கு வரப்போறாராம்! புராஜெக்டை அவர்கிட்ட காட்டி, விவாதிக்கணும். நீ தயாரா?"

மல்லிகா தகவலை உதிர்த்துவிட்டு, சட்டென்று தனது கேபினுக்குள் புகுந்துகொண்டாள்.

தகவல்களை சரிபார்த்தாள், கமலி.

முதல் முறை அவளுக்காக கொடுக்கப்பட்ட 'புராஜெக்ட்'! இதற்காக அவள் ஏற்கெனவே பெருமளவு நேரத்தை ஒதுக்கி திருப்தியாக தயாரித்திருந்தாள்.

ஆனால், 'எம்.டி.யை இன்று சந்தித்து பேச வேண்டும்' என்ற பயம் உள்ளூர நடுக்கமாய் உடலெங்கும் ஓடியது.

சிறுபிள்ளையின் கையில் அகப்பட்ட தும்பியாய் மனம் சடசடத்தது.

## 7

"மே ஐ கமின் சார்?"

"எஸ்!" சுழல்நாற்காலியில் அமர்ந்திருந்த கவுசிக் நிமிர்ந்தான்.

"குட்மார்னிங் சார்! அயாம் கமலி! இது என்னோட புராஜெக்ட் ரிப்போர்ட்!"

அவனுக்கு தூக்கிவாரிப்போட்டது. 'இவளை இதற்குமுன் எங்கேயோ பார்த்தது போலிருக்கிறதே? பெயர் கமலியா?

ஒருவேளை அந்த 'கமலி'யாக இருக்குமோ? யாரிவள்? இவளே அந்த 'கமலி'யாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' இவளைப் பார்த்த மாத்திரத்தில்... உள்ளுக்குள் பட்டாம்பூச்சி சிறகடிக்கிறதே... அது ஏன்?'

இதழ்க்கடையில் சிறு முறுவல் பூக்க... நின்றிருந்த கமலியைக் கண்டதும், கவுசிக்கின் மனம் பல குட்டிக்கரணங்களைப் போட்டது.

மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தை ஒருமுகப் படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது.

"உட்காருங்க."

அவனிடம் கோப்பினை பவ்வியமாய் நீட்டிய கமலியின் பார்வை, கவுசிக்கின் தலையில் போடப்பட்டிருந்த பாண்டேஜில் தயக்கமாய் படிந்துகொண்டது.

நான்கு விழிகளும் மோதிக்கொண்டன. சட்டென்று பார்வையைத் தழைத்துக்கொண்டாள், கமலி.

மறுகணம் அவன் கோப்பை புரட்டத் தொடங்கினான். விவாதம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

கமலி அளித்த விளக்கம், அவளது அணுகுமுறை, விரல்நுனியில் விவரங்களை அடக்கி இருந்த விதம், அவளது புத்திசாலித்தனம்... இவையெல்லாம் கவுசிக்கை வெகுவாய் கவர்ந்தன.

அவனது முகமெங்கும் திருப்தி ரேகைகள் படர்ந்தன.

கமலியின் திறமையும், புத்திசாலித்தனமும் கவுசிக்கை கொக்கி போட்டு இழுத்தன.

"வெல்டன் மிஸ் கமலி! உங்க திறமைக்கு சீக்கிரம் நீங்க முன்னுக்கு வருவீங்க!"

மனம்திறந்து பாராட்டிவிட்டு மந்தகாசமாய் புன்னகைத்தவனை ஏறிட்டாள், கமலி.

"ந... நன்றி சார்!"

சட்டென்று எழுந்து நின்றாள். அவனையும் அறியாமல் அவனது பார்வை, அவளது காயத்தில் மீண்டும் பதிந்து விலகியது.

'காயத்தைப் பற்றி விசாரிக்கலாமா?' என்று துடித்த மனதை சிரமப்பட்டு அடக்கினான்.

'ஊகூம்! இவன் கோடீஸ்வரன்... முதலாளி! நான் அவனது அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்! அந்த எல்லைக் கோட்டைத் தாண்டி... பார்த்த முதல் நாளிலேயே எப்படி உரிமை எடுத்துக்கொள்ள முடியும்? தவறாக நினைத்துக்கொண்டால்?'

மாசு மருவற்ற வட்ட முகம், வில்லாக வளைந்த புருவங்கள், கூர்மூக்கு, சிவந்த அதரங்கள், அழகான மோவாய் சங்குக் கழுத்து... அந்த மருண்டமான் விழிகளில் ததும்பிய இரக்கமும், பரிதாபமும்...

கவுசிக்கின் இதயத்தை மயிலிறகால் மெல்ல வருடிக் கொடுத்தாற்போலிருந்தது.

அவனுக்கு விபத்து நேர்ந்த செய்தியைக் கேள்விப்பட்டு ஓடோடி அவனைப் பார்க்க வந்திருந்த மானேஜர் வரதராஜனிடம்... கவுசிக் சிரமப்பட்டு கிசுகிசுப்பாக பேசினான்.

"நம்ம ஊழியர்கள் யாருக்கும் இந்த விஷயம் தெரிய வேணாம்! தெரிஞ்சா... மனசு தாங்காம கூட்டம் கூட்டமா பார்க்க வருவாங்க... எதுக்கு வீண் சிரமம்?"

அவனது நிறுவனங்களைச் சார்ந்த ஊழியர்களின் காதுகளுக்கு எட்டாமல்... அந்த விஷயத்தை சாமர்த்தியமாக மூடி மறைத்துவிட்டிருந்தான், கவுசிக்.

கமலி அந்த அறையைவிட்டு வெளியேறியதும்... அறையே இருண்டுவிட்டாற் போலிருந்தது.

அலுவலக ரீதியான பணிகளை மளமளவென்று முடித்துவிட்டு... பேண்ட் பாக்கெட்டிலிருந்த குட்டி டைரியை எடுத்து அந்த முகவரியை மனதில் பதித்துக்கொண்டு... வேகமாக



காரைக் கிளப்பினான், கவுசிக்.

முறத்திலிருந்த அரிசியில் கல் பொறுக்கிக்கொண்டிருந்த தேவகி... வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு, நெற்றி சுருங்க எழுந்து– வெளியில் வந்தாள்.

வாட்டசாட்டமாய், வசீகரமாய் ஒரு இளைஞன் கார் கதவைத் திறந்து வெளிப்பட 'யாரிவர்?' என்று பிரமிப்புடன் பார்த்தாள்.

"வணக்கம்மா... என் பேரு கவுசிக் வர்மா! வர்மா நிறுவனங்கள் பத்தி கேள்விப்பட்டு இருக்கீங்களா? அதோட எம்.டி. நான். மிஸ். கமலி உங்க பொண்ணுதானே?"

பதற்றமானாள் தேவகி.

"வாங்க... உள்ளே வாங்க!"

பார்வையால் ஒருமுறை வீட்டை வலம் வந்தான். எளிமையாய், அடக்கமாய், சுத்தமாய் இருந்தது.

"தம்பி... என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?" என்றவளை ஏறிட்டான், கவுசிக்.

'அலுவலகத்தில் பார்த்த கமலியின் சாயல் இந்த அம்மாவிடம் தெரிகிறதே? ஒருவேளை... அவள்தான் நான் தேடிக்கொண்டிருக்கும் கமலியா?'

நினைக்கும்போதே உள்ளுக்குள் மகிழ்ச்சி ஊற்றெடுத்தது.

"சமீபத்துல என்னோட கார் விபத்துக்குள்ளாயிடுச்சு! உயிருக்குப் போராடிக்கிட்டு இருந்த எனக்கு... தக்க நேரத்துல ரத்தம் கொடுத்து காப்பாத்தினாங்க, மிஸ். கமலி! அவங்களை நேர்ல பார்த்து நன்றி சொல்லிட்டுப் போலாம்னுதான் வந்தேன்!"

"ஓ... நீங்களா? அவ அடிக்கடி ரத்ததானம் பண்ணுறவதான்! மனிதாபிமானத்தின் அடிப்படையில் செய்கிற காரியத்துக்கெல்லாம் நன்றி சொல்லத் தேவையில்லை, தம்பி! தவிர... அவ இப்ப வீட்டுலே இல்ல... வேலைக்குப் போயிருக்கா...

ச்ாயந்தரம்தான் வருவா!"

"நீங்க தப்பா எடுத்துக்கலேன்னா... மிஸ். கமலியோட போன் நம்பர் தரமுடியுமாம்மா? இன்னிக்கு எப்படியும் நன்றி தெரிவிச்சே ஆகணும்கிற முடிவோடு இருக்கேன்!"

தயக்கமாய் கேட்டவனை ஏற இறங்கப் பார்த்தாள், தேவகி.

'இவன் மிகவும், கண்ணியமான இளைஞன்! தாராளமாய் நம்பரைத் தரலாம்.'

அவனது அடக்கமும், மரியாதை பேச்சும்... தேவகிக்கு நல்ல அபிப்பிராயத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருந்தன.

அடுக்களைக்குச் சென்று... கடுகு, இஞ்சி, கறிவேப்பிலை போட்டு தாளித்த மோரை தம்ளரில் நிறைத்துக்கொண்டு, ஒரு துண்டுக் காகிதத்தில் கமலியின் நம்பரைக் குறித்துக் கொண்டு வந்தாள்.

"இந்தாங்க தம்பி!"

துண்டுக் காகிதத்தை வாங்கி சட்டைப் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக்கொண்டான். மோரை வாங்கிப் பருகிவிட்டு, புன்னகையுடன் எழுந்து நின்றான்.

"மோர் நல்லா இருக்கும்மா! நன்றி! நான் இன்னொரு நாள் உங்களை வந்து பார்க்கிறேன்!" தலையாட்டி விடைபெற்றான்.

பத்து நிமிடங்கள் நகங்கி இருக்கும். அதற்குமேல் இருப்புக் கொள்ளாமல் காரை சாலையோரமாய் நிறுத்திவிட்டு... செல்லை எடுத்து அந்த எண்ணை தொடர்புகொண்டான்.

"அலோ! நான் வர்மா பேசுறேன்! நீங்க மிஸ். கமலி?"

"எஸ் சார்... என் புராஜெக்ட் அறிக்கையில் ஏதாச்சும் சந்தேகமா சார்?"

பவ்வியமாய் விசாரித்தரள், கமலி.

"இல்லை! இன்னமும் இருபது நிமிடத்தில் நானே கூப்பிடுறேன் கமலி!" செல்போனை அணைத்தான், கவுசிக்.



"வாரே வா!" முழங்கையை உற்சாகமாய் உயர்த்தி இழுத்தான். மகிழ்ச்சியில் அப்படியே அந்தரத்தில் பறப்பது போலிருந்தது.

## 8

உணவு இடைவேளை! கமலிக்கு முள்ளின் மேல் அமர்ந்திருப்பதைப் போன்று உள்ளூர அவதியாக இருந்தது.

பாபுவுக்கு 'செமஸ்டர்' பரீட்சைக்கு பணம் கட்டவேண்டும். அப்பாவுக்கு இருமல் மாத்திரை, டானிக் தீர்ந்துவிட்டிருந்த தால்... மனிதர் இரவெல்லாம் நெஞ்சு வெடிக்குமளவுக்கு இருமிக்கொண்டிருந்தார்.

அடுக்களை அஞ்சறைப்பெட்டியில் மருந்துக்குகூட கடுகு, சீரகம் இல்லை. எல்லாம் துடைத்து வைத்தாற்போன்று காலியாகி இருந்தன.

வீட்டுச் செலவுக்கு காசு இல்லாமல் அம்மா தேவகி கையைப் பிசைந்துகொண்டிருப்பது... கமலியின் மனக்கண்ணில் வந்து வந்து போனது.

முதல் மாதச் சம்பளம் கைக்கு வரும்வரை நிலைமையை சமாளிக்க முடியுமா?

பஸ்சுக்குக்கூட பைசா இல்லையே? சம்பளம் வருவதற்குள் விழி பிதுங்கி, நாக்குத் தள்ளிவிடும். அதுவரை தாக்குப்பிடிக்கவே முடியாதோ?

கமலி யோசனையில் மூழ்கியிருந்தாள். அவளது வலக்கை ஆட்காட்டி விரல் மெதுவாக கழுத்திலிருந்த மெல்லிய நகையை நிரடியது.

சட்டென்று மின்னல் வெட்டியதைப் போன்று ஒரு யோசனை உள்ளுக்குள் உதித்தது.

அதற்கு மேல் மோர் சோறும், மாவடுவும் அவளது

தொண்டைக்குள் இறங்க மறுத்தன. டிபன் பாக்சை மூடி வைத்துவிட்டு எழுந்தாள், கமலி.

அலுவலகத்தைவிட்டு வெளியே வந்து, தயங்கி நின்றாள். சாலையின் எதிர்ப்புறத்தே இருந்த அந்தக் கடையின் போர்டை பார்வையால் கழுவினாள், கமலி.

அது நகை அடகுக்கடை அடுத்த பத்தாவது நிமிடத்தில்... அவளது கழுத்தில் கிடந்த நகை, அந்த அடகுக்கடையில் தஞ்சம் புகுந்தது.

அவளிடம் ஏழாயிரம் ரூபாய் அடைக்கலம் ஆனது. பேக்கை ஜாக்கிரதையாக இறுகப் பற்றியபடி சாலையைக் கடந்து சென்று, பிரமாண்டமான அலுவலகத்திற்குள் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டாள்.

கவுசிக்கின் கார் அந்தப்பக்கம் சமீபித்துக் கொண்டிருந்தது.

கமலி அந்த அடகுக்கடையில் இருந்து வெளிப்பட்டபோது காரை ஓட்டுக் கொண்டிருந்த கவுசிக்கின் விழிகளில் அகப்பட்டு விட்டாள்.

யோசனையில் ஒரு கணம் அவனது புருவங்கள் நெளிந்தன. பச்சாதாபத்தில் மனம் மெழுகாய் உருகியது.

தனது அறைக்குள் வந்து அமர்ந்ததும்... கவுசிக்கின் வலக்கரம் மேசை மேலிருந்த அந்த புராஜெட் கோப்பினை அனிச்சையாய் வருடியது. மெதுவாகப் புரட்டினான்.

ஆதியோடு அந்தமாக மீண்டும் அவனது கண்கள் அதில் ஆவலோடு மேய்ந்தன.

உணவு இடைவேளை முடிந்ததும்... கமலிக்கு அவனிடமிருந்து அழைப்பு வந்தது.

தயங்கி உள்ளே வந்தாள், கமலி.

'எதற்காக அழைத்திருக்கிறான் ?' அவளது முகத்தில் ஒரு கேள்விக்குறி தொக்கி நின்றது.

பிளீஸ் உட்காருங்க. மிஸ் கமலி! சரியான நேரத்தில் கிடைத்த



உங்க உதவிக்கு நன்றி. உங்க தயவால்தான் நான் இன்னிக்கு உயிரோடு நடமாடிட்டு இருக்கேன்.

கமலியின் முகத்தில் குழப்ப ரேகைகள் படர்ந்தன. "என்னது சார்? விபத்தில் சிக்கி, வீ.ஆர். ஆஸ்பத்திரியில் இருந்தது நீங்கதானா? கடவுளே! இ...இப்போ வலி குறைஞ் சிருக்கா சார்?"

முகத்தில் ஆயிரம் 'வாட்ஸ்' வெளிச்சம் பரவ... ஆர்வம் தாளாமல் படபடத்தாள், கமலி.

"உம்! வலி இப்போ தேவலாம்... உங்க முகவரியை நான் கண்டு பிடிச்சி வச்சிருந்தேன். இன்னிக்கு எப்படியாவது நேர நன்றி தெரிவிச்சுடலாம்னு உங்க வீட்டுக்குப் போயிருந்தேன்.

வீட்டுலே அம்மாவோட முகத்தைப் பார்த்ததுமே... அந்த கமலி நீங்களாகத்தான் இருப்பீங்கன்னு புரிஞ்சுகிட்டேன் நான் தேடின கமலி இந்த அலுவலகத்தில் வேலை பார்க்கிறதை நினைச்சா... எனக்கு ரொம்பவே சந்தோஷமா இருக்கு! ரொ... ரொம்ப நன்றி கமலி."

குரல் உணர்ச்சி வசத்தில் லேசாகப் பிசிறடித்தது.

"நன்றியெல்லாம் எதுக்கு சார்? மனுஷருக்கு மனுசர் இதைக் கூட செய்யலைன்னா... இந்த பூமியில நாம் பிறந்ததுக்கே அர்த்தமில்லாம போயிடுமே சார்? பல குடும்பங்களுக்குப் படியளக்கிற திறமை வாய்ந்த முதலாளியைக் காப்பாத்தின புண்ணியம் எனக்கு கிடைச்சிருக்கே? அதுக்கு நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும். எனக்கும் ரொம்ப மகிழ்ச்சிதான்!

இதுக்குத்தான் கூப்பிட்டீங்களா? நான் போகலாமா சார்?"

இதழ்க்கடையில் குறுநகை தவழ... சட்டென்று எழுந்து கொண்டாள், கமலி.

பெரிய பெரிய நிறுவனங்களைக்கட்டி ஆளும் பரம்பரை பணக்காரன். பெரிய புத்திசாலி... கொஞ்சம்கூட பந்தா இல்லாமல் இருக்கிறானே?'

திறமை கண்களில் பட்டுவிட்டால்.. மனம் திறந்து பாராட்டும் அவனது மனப்பான்மை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவன் விழிகளில் பணக்கார வர்க்கத்தினருக்கே உரிய அலட்டலோ, அலட்சியமோ சிறிதும் தென்படவில்லை?

மாறாக.. கனிவும், மரியாதையும்தானே ததும்புகின்றன.

"ஒரு நிமிடம் மிஸ், கமலி!" நகர எத்தனித்தவளை அவனது குரல் தடுத்து நிறுத்தியது.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா.. இ.. இந்தாங்க இதை வாங்கிக்கோங்க! நான் உங்களுக்கு எவ்வளவோ கடன்பட்டிருக்கேன். இந்த உயிரே நீங்க போட்ட பிச்சைதான்.. ரொம்ப இக்கட்டாக பண நெருக்கடியில் நீங்க மாட்டிட்டு தத்தளிக்கிறீங்கன்னு.. நான் புரிஞ்சுகிட்டேன். இதை மறுக்காம நீங்க வாங்கிக்கிட்டா நான் ரொம்பவே சந்தோஷப்படுவேன்."

வார்த்தைகளை மெல்ல உதிர்த்தபடியே தயக்கமாய் ஐம்பதாயிரத்துக்கான காசோலையை அவளிடம் நீட்டினான்.

அவனது பார்வை கமலியின் வெறுங்கழுத்தை பரிவுடன் பதம் பார்த்துவிட்டு.. அவளது விழிகளில் நிலைத்தது.

இருவர் விழிகளும் ஒரு கணம் மோதிக்கொண்டபோது, மின்னல் வெட்டியது.

கமலிக்கு 'சுரீர்' என்றது. நெஞ்சில் நெருஞ்சி முள் குத்தியது போலிருந்தது.

கண்களில் 'குபுக்' என்று கண்ணீர் எட்டிப்பார்த்தது. 'நான் ஏழையாக இருப்பதால்தானே... செய்த உதவிக்கு 'செக்'கை நீட்டுகிறான். எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் செய்த உதவியை.. கொச்சைப்படுத்திவிட்டானே?'

ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது.

மலர்ந்த முகம் திடுதிப்பென்று அனிச்ச மலராய் சட்டென்று சுருங்கி வாடியதைக் கண்டதும்.. கவுசிக் உள்ளூர பதறித்தான் போனான்.



"உ... உங்களுக்கு இதுல உடன்பாடு இல்லைன்னா.. இதை ஒரு முன்பணமா நெனச்சு வாங்கிக்கலாம். மாசா மாசம் உங்க சம்பளத்தில் இதை கழிச்சிக்கலாம்."

லேசாக நடுங்கித் துடித்த கீழுதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள், கமலி.

மறுகணம் இறுகிய முகத்தோடு அவனை ஏறிட்டவள்.. அந்த 'செக்'கை கை நீட்டி வாங்கிக்கொண்டு–

"நன்றி சார்!" என்று முணுமுணுத்துவிட்டு விருட்டென்று வெளியேறினாள்.

மறுவாரம்... கவுசிக் சற்றும் எதிர்பார்க்காத சம்பவம் நடந்தபோது, அதிர்ச்சியில் ஸ்தம்பித்துப் போனான்.

அவனது இதயம் எம்பிக் குதித்தது.

## 9

கவுசிக் பூரிப்பில் மூழ்கி திக்குமுக்காடித்தான் போனான்.

அந்தத் திட்டம் 'கிளிக்' ஆகி பலத்த வரவேற்பை பெற்றதுமல்லாமல்.. பெருமளவு லாபத்தை அள்ளிக் குவித்தது.

கவுசிக் மனதில் இடம் பெற்றிருந்த கமலி 'மளமள'வென்று வளர்ந்துகொண்டே போய்.. மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தாள்.

அவளது அபார திறமையும், பொறுமையும், குணமும் அழகும் கவுசிக்கை ஆட்டிப் படைத்தன.

அவளைச் சந்தித்து மூன்று வாரங்கள் நகர்ந்திருக்கும். இதுவரை இயந்திரத்தனமாய் நாட்களை ஓட்டிக்கொண்டு இருந்தவனுக்கு... சமீப காலமாக வாழ்க்கையே வண்ணமயமாய் மாறிவிட்டிருந்தது உண்மை!

அவனது முகத்தில் முன்பிருந்த இறுக்கம் தளர்ந்து மலர்ச்சியும்,

புத்துணர்வும், பொலிவும் குடிகொண்டன.

"சார்! உங்களைப் பார்க்க ஒரு அம்மா வந்திருக்காங்க. நேர்ல பார்த்து நன்றி தெரிவிக்கணுமாம். அனுப்பட்டுமா சார்?" வரவேற்புப் பெண் அவனைத் தொடர்பு கொண்டு கேட்டாள்.

"யார்? எதுக்கு நன்றி தெரிவிக்கணும்?" அவனுக்கு தலையும் புரியவில்லை... வாலும் புரியவில்லை. எனினும், துணிந்து அனுப்ப சொல்லிவிட்டான்.

நிர்மலமான நெற்றியுடன் நாற்பது வயது மதிக்கத் தக்க பெண்மணி ஒருத்தியும், பத்து வயது சிறுவனும் தயக்கமாய் உள்ளே புகுந்தனர்.

"நீங்க யாரும்மா? எனக்கு நன்றி தெரிவிக்கணும்னு சொன்னீங்களாம். என்னத்துக்காக? எனக்கு ஒண்ணும் புரியலையே?"

"வயசுல சின்னவரா இருந்தாலும், விசாலமான மனசு உள்ளவரு நீங்க! புருஷனை இழந்து இந்த புள்ளையே கதின்னு இருக்கிறவ, நான்... இவனுக்கு இதய நோய்னு தெரிஞ்சதும் இடிஞ்சே போயிட்டேன். ஆபரேஷனுக்கு நகை நட்டை வித்து பணத்தைத் தயார் பண்ணினேன். அதுவும் பத்தலை. இன்னமும் அம்பதாயிரம் தேவைப்பட்டுச்சு! என்ன செய்யறதுன்னு கையைப் பிசைஞ்சுட்டு நின்னப்போ... நீங்க தெய்வமா வந்து குடுத்து உதவி இருக்கீங்க... உங்க புண்ணியத்துல 'ஆபரேஷன்' நல்லபடியா முடிஞ்சு என் பிள்ளை பிழைச்சு வந்துட்டான்யா! நீங்க நூறு ஆண்டு நோய் நொடி இல்லாம வாழணும். ரொம்ப நன்றிங்க"- என்றவள் மகனிடம் திரும்பி, டேய்! ஐயா கால்லே விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்க" என்றபடி கை கூப்பி வணங்கினாள்.

கவுசிக்கிற்கு எங்கேயோ பொறி தட்டியது. அந்தப் பணம் உங்களுக்கு யார் மூலமா கிடைச்சது?"

"கமலின்னு சொன்னாங்க. நீங்க கொடுத்து உதவினதா சொல்லி தந்தாங்க. அவங்க வீட்டுக்குப் பக்கமாதான் எங்க வீடும் இருக்கு! தக்க நேரத்துல உதவினீங்க தம்பி... வாழையடி வாழையா உங்க வம்சமே நல்லா தழைக்கும்!"



நா தழுதழுத்தபடி மனதார வாழ்த்தினாள், அந்த பிதவைத் தாய்.

அவனையும் அறியாமல் கை கூப்பி வணங்கினான், கவுசிக். அவர்கள் விடைபெற்றுச் சென்றுவிட்டனர்.

அவனது மறைந்த தாயாரே நேரில் வந்து அவனை மனதார வாழ்த்தியது போலிருந்தது.

மகிழ்ச்சியிலும், ஆத்ம திருப்தியிலும் அவனது மனமே நிறைந்துவிட்டது போலிருந்தது.

ஆனந்த மிகுதியில் அவனது கண்கள் பனித்தன. அன்று கமலி அந்த 'செக்'கைப் பெற்றுக் கொண்டபோது- இந்த விஷயத்தைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லையே?

'கஷ்ட ஜீவனம்... கழுத்திலிருந்த நகையை அடமானம் வைக்கும் நிலைமை... இந்த இக்கட்டிலும் வலிய வந்த பெருந்தொகையை பயன்படுத்திக் கொள்ளவில்லை. கடனாகக் கூட அதை அங்கீகரிக்கவில்லை.

உயிருக்குப் போராடும் ஒரு சிறுவனின் உயிரைக் காக்க அந்த 'செக்'கை பயன்படுத்தி இருக்கிறாள். அதுவும் அவனே கொடுத்ததாக சொல்லி... ஒரு பெரும் புண்ணியத்தைத் தேடித் தந்துவிட்டாளே? அளப்பரிய மகிழ்ச்சியை அள்ளித்தந்து விட்டாளே?

இண்டர்காமில் கமலியை அழைத்தான்.

உள்ளே வந்து, பவ்வியமாய் ஏறிட்டவளை விழிகள் விரியப் பார்த்தான்.

"நீங்க முதன்முதலா தயாரிச்ச 'ப்ராஜெக்ட்' நம்ம கம்பெனியை எங்கேயோ கொண்டு போயிடுச்சு! எக்கச்சக்க லாபம்..."

"சார்... இதை நிறைய தடவை சொல்லி பாராட்டிட்டீங்க இது என்னோட கடமை" தன்னடக்கத்துடன் புன்னகைத்தாள், கமலி.

"நானும் எங்கம்மா பேரில் அறக்கட்டளை ஒண்ணு

ஆரம்பிச்சிருக்கேன். ஏழை, அநாதைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமணச் செலவுன்னு... ஏதோ என்னால முடிஞ்சதை செய்துட்டுத்தான் இருக்கேன். அப்போ எல்லாம் ஏற்படாத மனநிறைவும், ஆத்ம திருப்தியும்.. எனக்கு உங்களால் கிடைச்சிருக்கு! அந்த சின்னப் பையனோட ஆபரேஷனுக்கு ஐம்பதாயிரத்தைக் கொடுத்து எனக்கு புண்ணியம் தேடித் தந்துட்டீங்களே..

நீங்க என் உயிரைக் காப்பாத்தினதுக்கு நன்றிக்கடனா அந்த 'செக்'கை நான் கொடுத்தது தப்புதான்! அது உங்க மனசைக் காயப்படுத்தி இருந்தா.. மனப்பூர்வமா மன்னிப்பு கேட்டுக்கிறேன். என் உயிரைக் காப்பாத்தி இருக்கீங்க.. கம்பெனிக்கு உங்களால நல்ல லாபம் வந்து இருக்கு.. ஒரு தாய் நேரில் வந்து மனசார வாழ்த்தி இருக்காங்க.. இன்னமும் ஒரு உதவி எனக்கு பண்ண முடியுமா கமலி?"

"நீங்க என்னோட முதலாளி! உத்தரவு போடுங்க... நான் என்ன செய்யணும்?"

"உன்னோட இதயத்துல எனக்கு இடம் தருவியா, கமலி? உன்னைப் பார்த்ததிலிருந்து நான்... நானாவே இல்லை. பணத்து மேல ஆசையே இல்லாத நல்ல உள்ளமும், உயர்ந்த குணமும், நேர்மையும், திறமையும்... என்னை ரொம்பவே கவர்ந்திடுச்சு, கமலி! கோடி கோடியா சொத்து இருந்தும் சொந்த பந்தம் இருந்தும் இதுவரைக்கும்... பாசத்துக்கு ஏங்குகிற அநாதையாகத்தான் இருக்கேன்.

இதுவரைக்கும் எனக்கு உலகம்னா.. ஒரு வறண்ட பாலைவனமாகத்தான் இருந்துச்சு! உன்னைப் பார்த்த பின்னாடி அது சோலைவனமா... பசுமையா மாறிடுச்சு! உன்கூட கை கோர்த்துக்கிட்டு, தொழிலில் பல சிகரங்களைத் தொடணும்... பல நல்ல காரியங்கள் செய்யணும்னு துடிக்கிறேன். உன் தயவால் தான் நான் உயிரோடு நடமாடிட்டிருக்கேன். நான் நல்லா நடமாடுவேனாங்கிறதும், நடைப்பிணமா ஆவேனாங்கிறதும்... நீ சொல்லப் போற பதில்லேதான் இருக்கு, கமலி!"



அவன் தொடர்ந்து ஒருமையில் பேசினான்.

"நல்லா யோசிச்சு பதில் சொல் கமலி."

அத்தான் செந்திலின் அடாவடித் தனத்தால்.. நேற்றுவரை ஆண்கள் என்றாலே கமலிக்கு அலர்ஜிதான்! 'கல்யாணம்' என்ற சொல்லைக் கேட்டாலே.. காத தூரம் ஓடியவள்தான்!

ஆனால் இன்றோ...?

விக்கித்துப் போனாள், கமலி.

அதற்கு மேல் அவளுக்கு வேலையே ஓடவில்லை. மனம் எதிலும் லயிக்கவில்லை.

'என்ன சொல்லப் போகிறேன்?'

சிந்தனையின் வலைப் பின்னலில் சிலந்தியாய் மனம் சிக்கிக்கொண்டு தவித்தது.

## 10

அந்தி சாயும் பொழுது என்பதால், காற்று காதலுடன் சிலுசிலுவென வந்து தழுவியது. சூரியன் தனது பொற்கதிர்களால் கமலியின் தாழம்பூ நிற மேனியை, பொன்னிறமாய் மாற்ற முயற்சித்துக்கொண்டிருந்தான்.

தோட்டத்தில் கம்பி பந்தலில் படர்ந்திருந்த மல்லிகைக் கொடியிலிருந்து மொட்டுகளைக் கிள்ளிக்கொண்டிருந்தாள், கமலி.

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாட்களில், தானே பூக்களைப் பறித்து தொடுத்து, சாமி படங்களுக்கு போடுவது அவளுடைய பழக்கம்.

நேற்று அலுவலகத்தில், கவுசிக் மனம்திறந்து பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளது காதுகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக்கொண்டுதான் இருந்தன.

அவனது குடும்பச் சூழலுக்கும், கவுசிக்கின் அந்தஸ்திற்கு ஏணி வைத்தாலும் எட்டாதே?

அவன் அவளை விரும்பலாம். ஆனால், அவனு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தகுதி பேதம் காட்டி— கமலியி குடும்பத்தினரை அவமதித்துவிட்டால்?

பணக்காரக் குடும்பத்து சம்மந்தம் சரிப்பட்டு வருமா?

'ஊகூம்! இது ஒத்துவராது' –ஒரு கணம் முடிவு எடுப்பா கமலி.

மறுகணம்... உள்ளுக்குள் எதுவோ உடைந்த போலிருக்கும்.

கட்டுப்படுத்த கட்டுப்படுத்த மனம் தாவி ஓடியது அத்துமீறிக் குதித்தது.

சில உணர்வுகளுக்குத் தடை போடவே முடியாது. தடுக் முயன்றால்தான் அது மென்மேலும் பொங்கிப்- பெரு வெளிப்படும்.

செந்தில் அத்தானைப் போன்று மோசமானவனா, கவுசிக் இல்லையே!

அவனுக்கு இருக்கும் வசதிக்கும், அந்தஸ்துக்கும் வசதியான அழகான இளம்பெண்கள் கிடைக்காமலா போய்விட்டார்கள்! இவ்வளவு ஏன்... அவனது நிறுவனத்தில் வேலை பார்க்கும் வரவேற்புப் பெண் நிகரற்ற பேரழகிதானே?

கம்ப்யூட்டர் என்ஜினீயர்கள் கல்பனா, வசுந்தரா இவர்கள் எல்லாம் சொக்க வைக்கும் அழகுப் பாவைகள்தானே?

ஆனால், யாரையும் ஏறிட்டுப் பார்க்காதவன், அவன்! அவளை மனப்பூர்வமாக நேசிக்கிறான். கண்ணியம், நேர்மை, திறமை... இவற்றின் மொத்த இருப்பிடம், அவன்!

அவனை நிராகரிப்பதற்கு வலுவான ஒரு காரணம் இருக்கிறதா?

அவளுடைய மனதில் ஒரு பெரிய தர்க்கமே நடந்து



கொண்டிருந்தது.

அக்கா விசாலி, குழந்தை தீபிகாவுடன் இரு தினங்களுக்கு முன்புதான் இங்கு வந்திருந்தாள்.

நேற்று சாயந்தரம் கமலி வாடிப்போன முகத்துடன் வந்ததுமே அக்கா விசாலி எதையோ ஊகித்துவிட்டிருந்தாள்.

இரவு எட்டரை மணிக்கு அனைவரும் சாப்பிட்டு முடித்து விட்டு டி.வி.யில் மூழ்கப்போன தருணத்தில், விசாலி அவளது தோளைத் தொட்டு எழுப்பினாள்.

"வா.. மொட்டை மாடிக்குப் போலாம். கொஞ்சம் உன்கிட்ட பேசணும், கமலி."

மொட்டை மாடியின் விளிம்புச் சுவரில் தென்னைமரக் கீற்றோலை செல்லமாய் புரண்டுகொண்டிருந்தது.

"என்னாச்சு கமலி? உன் முகமே சரியில்லை... ஆபீசில் ஏதாச்சும் பிரச்சினையா?"

குரலில் கரிசனம் வழிந்தோட— கவலை தோய்ந்த முகத்துடன் கேட்டவளை மெல்ல ஏறிட்டாள், கமலி.

அதுவரை மனதை அரித்துக்கொண்டிருந்த விஷயத்தை அக்காளிடம் கொட்டித் தீர்த்துவிட்டாள்.

"கமலி! அடாவடித்தனமான அத்தான் வாய்ச்சுட்டாரு! அது என்னோட விதி. அதுக்காக ஒட்டுமொத்த ஆண் வர்க்கத்தையே சந்தேகக் கண்ணோடு பார்க்கிறது தப்புடா. என்னோட வாழ்க்கை இப்படி ஆயிடுச்சேங்கிறதுக்காக நீ கல்யாணம் வேண்டாம்னு சொல்றது நல்லாயில்லை... அன்னிக்கு அம்மா எவ்ளோ வருத்தப்பட்டாங்க தெரியுமா?

பணக்காரரா இருந்தாலும் கவுசிக் நேர்மையானவருன்னு என் மனசுக்குப்படுது. நல்ல பதவி, கைநிறைய சம்பாதிக்கிறே. உன்னால் இந்த குடும்பமே நிமிர்ந்து நிக்குது! அது உன்னோட திறமைக்கு கிடைச்ச அங்கீகாரம்!

உன்னோட நல்ல மனசுக்கும், குணத்துக்கும் கிடைச்ச





வரமா கவுசிக்கோட காதலை ஏத்துக்கிறதுதான் புத்திசாலித்தனம்!

உன்னை உண்மையா நேசிக்கிறவரோடு நீ சந்தோஷமா குடும்பம் நடத்துறதை நாங்க பார்த்து திருப்தியடையணும். உன் வாழ்க்கையாவது சீரும் சிறப்புமா அமையணும், கமலி! நீ படிச்சவ... புத்திசாலி! நல்ல முடிவு எடும்மா."

விசாலியின் விழிகளில் நீர்த்திவலைகள் உருண்டு கொண்டிருந்தன. அவளது முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு சட்டென்று படி இறங்கிப் போய்விட்டாள்.


ராணி முத்து

## சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

### வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.


வெகுநேரம் வரை யோசனையில் ஆழ்ந்திருந்தாள், கமலி.

"தித்தீ... தித்தீ..." குழந்தை தீபிகாவின் மழலைக் குரல், கமலியைக் கலைத்தது.

மல்லிகை மொட்டுகளைக் பறித்துக்கொண்டிருந்தவள் சட்டென்று திரும்பினாள்.

"அங்கேயே இருடா செல்லம்! தோட்டத்துல பூச்சி பொட்டு இருக்கும். சித்தி இதோ வந்துட்டேன்" குரல் கொடுத்தபடி வேகமாய் விரைந்தாள்.

மறுநாள் காலை எழுந்தபோது மனதிலுள்ள குழப்பமெல்லாம் வடிந்துபோய் ஒரு தெளிவான முடிவுக்கு வந்தாள், கமலி.

"அம்மா! இன்னைக்கு பரீட்சை... எட்டே முக்காலுக்கு நான் காலேஜிலே இருந்தாகணும். ஆபீசுக்கு ஒரு வாரம் விடுப்பு போடப்போறேன். போற வழியிலே கடிதம் கொடுத்துட்டுப்

போயிடுறேன்."

தேவகி, சப்பாத்தியை தணலில் வாட்டியபடியே மெல்ல ஏறிட்டாள்.

"ஆபீசுக்கு ஒரு வாரம் லீவு போட்டுட்டுப் போய் எழுதணுமா? அதுவும் சேர்ந்து ரெண்டு மாசம்கூட இன்னமும் ஆகலை. அதுக்குள்ளே லீவு போட்டா நல்லாவா இருக்கு?"

"ஏன் போடக்கூடாதா? இந்த உலகத்தைப் பார்க்கவே முடியாத பார்வையில்லாத மாணவர்களுக்காக எழுதுகிற பரீட்சை, எப்படிம்மா ஒதுக்கி வைப்பேன்? நான் படிச்சு பட்டம் வாங்கினப்போகூட கிடைக்காத சந்தோஷம், இப்ப கிடைக்குதும்மா!

மனுஷனா பொறந்த ஒவ்வொருத்தரும் தன்னை ஏதாவதொரு பொதுநல சேவையில ஈடுபடுத்திக்கணும். தனக்காக செலவழிக்கிற நேரத்துல ஒரு சிறு பகுதியை மத்தவங்களுக்காகவும் செலவழிக்கணும். இயலாதவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கணும்ங்கிற மனசு இருக்கு. ஆனா, கொடுக்கிறதுக்கு நம்மகிட்ட வசதியில்லை. அதனாலதான் சரீரத்தால் முடிஞ்ச உதவியை செய்துட்டிருக்கேன்.

அதிலும், பார்வை இல்லாதவங்களுக்காக பரீட்சை எழுதறப்ப எனக்கு கிடைக்கிற சந்தோஷமும், திருப்தியும் கொஞ்சநஞ்சமல்ல! லீவு எடுத்ததுக்காக என்னை 'டிஸ்மிஸ்' பண்ணினாக்கூட நான் கவலைப்படவே மாட்டேம்மா... இதிலே கிடைக்கிற திருப்தியைவிட வேலை எனக்குப் பெரிசில்லேம்மா" என்றவள், அதற்குமேலும் அங்கு நிற்க விரும்பாமல், குளியலறைக்குள் புகுந்துகொண்டாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் தயாராகி, புறப்பட்டாள்.

"அம்மா! டிபன் சாப்பிட நேரமில்லைம்மா... ஆபீசுக்குப் போய் லீவு லெட்டரைக் கொடுத்துட்டு, நான் காலேஜுக்குப் போகணும். அக்கா... போயிட்டு வரேன்." விசாலியை அர்த்த பாவனையுடன் ஏறிட்டுவிட்டு வேகமாய்



நடந்தாள், கமலி.

"டிபன் தயாராயிடுச்சு! வயசுப்பொண்ணு வயித்தைக் காயப்போட்டா எப்படிம்மா?" அம்மா தேவகி புலம்புவது சன்னமாய் காதில் விழ... இலேசாக கையசைத்துவிட்டு தெருவில் இறங்கி நடந்தாள், கமலி.

இந்த பிரிவு... கவுசிக்கை படாதபாடுபடுத்தும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

## 11

தோட்டத்து புல்வெளியில் போடப்பட்டிருந்த அலங்கார ஊஞ்சலில் ஒய்யாரமாக கால் மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தாள், மரகதம்.

தோட்டத்தின் நடுவே இருந்த பிரமாண்டமான குளத்தில் நீந்திக்கொண்டிருந்த செயற்கை அன்னத்தின் மீது பார்வையை அவள் பதித்திருந்தாள்.

உள்ளுக்குள் உலை கொதித்துக்கொண்டிருந்தது. அவளது மனம் கவுசிக்கை நினைத்துப் பார்த்து எரிமலையாய் குமுறியது.

பொறாமையால் அவளது அடிவயிறு தகித்தது.

'அந்த வரலட்சுமிக்கு பொறந்த பயல் கவுசிக்... அவன் தொட்டதெல்லாம் பொன்னாகிக் கொண்டிருக்கிறதே? என் வயித்திலேயும் வந்து பொறந்திருக்கே தீபக்... தடிமாடு எதுக்கும் லாயக்கில்லே... தாம் தூம்னு ஆட்டம் போடத் தெரியுது.

எத்தனை அசையா சொத்து... எத்தனை கம்பெனிகள்... அத்தனையும் செத்துப்போனவளோட பேர்லேயும், அவ புள்ளை கவுசிக் பேர்லேயுமா இருக்கு. எனக்கும், என் புள்ளைக்கும் ஒரு பங்களாவும், ஒரு கம்பெனியும்தான் தேறும் போலிருக்கே...

தீபக் போடுற ஆட்டத்துக்கு இதெல்லாம் எத்தனை நாளைக்கு தாக்குப்பிடிக்கும்?

இந்த மனுசருக்கு ஒரு கையும், காலும் விளங்காம... வீட்டோட முடங்கிப்போனதும், மூத்த தாரத்துப் புள்ளை மேல பாசம் பொத்துக்கிட்டு வந்துடுச்சு! என்னையும் தீபக்கையும் ஒரு பொருட்டாவே மதிக்கிறதில்லை. சதா கவுசிக், கவுசிக்ன்னு உருக ஆரம்பிச்சுட்டார்.

அவர் போற போக்குல தன் பேர்ல உள்ள பங்களாவையும் 'வர்மா அட்வர்டைசிங் கம்பெனி'யையும் கவுசிக் பேர்லே எழுதி வைச்சிடுவார் போலிருக்கே.. இதுவரைக்கும் ராஜபோகமா வாழ்ந்துட்டு கடைசியில நாங்க தெருவுல நிக்கணுமா?

என்னதான் பாசமா இருக்கிற மாதிரி நடிச்சாலும், கவுசிக் பயல் நம்மை நம்பவேமாட்டேங்கிறான். அந்த மெக்கானிக் கிட்டே பணத்தைக் கொடுத்து ரகசியமா பண்ணின ஏற்பாடும் ஏமாற்றமா முடிஞ்சுபோச்சே? அந்த விபத்துல அப்படியே போய் தொலைஞ்சுடுவான்னு நம்பிகிட்டு இருந்தேன்.

எவளோ ஒருத்தி முளைச்சு வந்து ரத்தம் கொடுத்து அவனை காப்பாத்தி எழுப்பி நடமாட வச்சுட்டாளே? கவுசிக் ஒரேயடியா அழியணும்.. ஒழியணும். அத்தனை சொத்துக்கும் என் மகன் தீபக் ஏகபோக வாரிசாகணும்.

கவுசிக் காதல், கல்யாணம்னு எவளையாவது இழுத்துக் கிட்டு வந்துட்டா சட்ட சிக்கலாயிடும். சொத்து எவளுக்கோ போயிடும்.. கூடாது! அதுக்குள்ளே பக்காவா திட்டம் போட்டு அவனை பரலோகத்துக்கு அனுப்பிடணும்! சமீபத்துல ஒரு விபத்து நடந்திருக்கு- அதனால யாருக்கும் எந்த சந்தேகமும் முளைவிடாம கச்சிதமா காரியத்தை முடிக்கணுமே?'

மரகதத்தின் மூளை நரித்தனமாக யோசிக்க ஆரம்பித்தது.

விஷ்ணுவர்மன் கட்டிலில் படுத்திருந்தார். அவரது விழிகளில் இருந்து வழிந்த கண்ணீர் கோடு போட்டுக்கொண்டுபோய்.. தலையணையை நனைத்தது.



பால்கனியின் அருகே போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலி யில் அமர்ந்திருந்த நர்ஸ், நகத்தைக் கடித்தபடியே ஏதோவொரு கதைப் புத்தகத்தில் மூழ்கி இருந்தாள்.

சகதர்மிணி மரகதத்தை நினைத்து... உள்ளுக்குள் கொந்தளித்துக் கொண்டிருந்தார், விஷ்ணுவர்மன்.

காலை, மாலை என இரு வேளைகள் மட்டும் மரகதம் எட்டிப் பார்த்துவிட்டு நர்சை அழைத்து அவரது உடல்நிலை பற்றி விசாரிப்பாள்.

அத்தோடு சரி! விதவிதமாய் பட்டுச்சேலை உடுத்தி, நகை களை அள்ளிப் பூட்டிக்கொண்டு அலங்காரமாய் வெளியில் கிளம்பிவிடுவாள்.

சதா மாதர் சங்கம் என்று வெளியில் அலைபவளுக்கு, கணவர் விஷ்ணுவர்மனைப் பற்றி கவலையே கிடையாது.

மறைந்த மூத்த மனைவி வரலட்சுமி, குணத்தில் குத்துவிளக்கு! எப்பேர்பட்ட உத்தமி! சாதாரண வேலைக்காரிக்கு உடம்பு முடியவில்லை என்றாலே கலங்கிப்போவாளே?

அப்படிப்பட்ட மாதர்குல மாணிக்கம் அமர்ந்திருந்த இடத்தில் ஒரு தரங்கெட்ட பெண்மணியை உட்கார வைத்து விட்டேனே?

உள்ளூர புழுவாய் துடிதுடித்துப் போனார், விஷ்ணு வர்மன்.

மனைவி வரலட்சுமி ஒரு பரம்பரை பணக்காரி. ஆண் வாரிசே இல்லாத குடும்பத்தில் ஒரே பெண்ணாய் பிறந்தவள்.

அவளைக் கைப்பிடித்த பின்புதான் விஷ்ணுவர்மனுக்கு சமுதாயத்தில் 'ஒரு பெரும்புள்ளி' என்ற அந்தஸ்தும், கவுரவமும் கிடைத்தன.

சகலத்தையும் நினைத்துப் பார்க்காமல், துணி கொண்டு துடைத்துவிட்ட தினுசில் மறந்துவிட்டு- ஏழையும், விதவையும், அனாதையுமாய் நின்ற மரகதத்திடம் மயங்கி- மனதைப் பறிகொடுத்து- அவளை மனைவியாகவே ஆக்கிக்கொண்டது

## முத்திரை வரிகள்

"விதைத்தவன்
உறங்கிடுவான்
விதைகள்
உறங்குவதில்லை"

"எண்ணியவன்
உறங்கிடுவான்
எண்ணங்கள்
உறங்குவதில்லை"

கோவை நகரில் கண்ட வாசகங்கள், இவை.

–டி. ஜெய்சிங், கோவை.

எவ்வளவு பெரிய தவறு!

தவறு மட்டுமா? சிறுவன் கவுசிக் இதனால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டு... கண்களில் சதா சோகத்துடன் வளைய வந்தானே?

அவனுக்கு எவ்வளவு பெரிய துரோகம் இழைத்திருக்கிறேன்?

மரகதத்தை மணந்தது மகா தப்பு... அவளால் ஒரு குழந்தையைப் பெற்றது அதைவிட பெரிய தப்பு!

'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' செய்துதான் என்ன பயன்?

செய்த தவறுக்கும், துரோகத்திற்கும் சேர்த்து வைத்துதான் பகவான் மிகப்பெரிய தண்டனையைக்கொடுத்துவிட்டாரே?'

அதிலும் இளைய மகன் தீபக்வர்மாவை நினைத்தாலே அவரது ரத்தம் தளதளவென்று கொதிக்க ஆரம்பித்தது.

திமிர், அகம்பாவம், கர்வம், அடாவடித்தனம், பொறாமை ஆகிய குணங்களை மொத்தமாகக் கலந்து, கடவுள் படைத்த உருவத்திற்குப் பெயர்தான் தீபக்வர்மா!

சதா 'சூயிங்கம்' மென்றுகொண்டு அலட்சியம் மிதக்கும் விழிகளோடு திரிபவனைக் கண்டாலே விஷ்ணுவர்மனுக்கு ஆத்திரம் மண்டிக்கொண்டு வரும்.

உலகில் அவருக்கு இருக்கும் ஒரே ஆறுதல் கவுசிக் வர்மாதான்!

பாராமுகமாய் இருக்கும் கவுசிக்கிடம் பாவமன்னிப்பு கேட்டு, பாசமழை பொழியத் துடித்தார்.



அந்திம காலத்திலேயாவது ஒரு நல்ல தந்தையாக நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார்.

கவுசிக் விபத்தில் மாட்டிக்கொண்டபோது பதறி பரிதவித்துப்போனார்.

'தீபக்கும், மரகதமும் ஏதேனும் சதி செய்திருப்பார்களோ?' உள்ளூர சந்தேக விதை ஊன்றி முளைவிட்டு வளரத் தொடங்கியது. சமீபகாலமாக மரகதம் மற்றும் தீபக்கின் விழிகளில் கபடத்தனம் மின்னுகிறதே!

'சொத்துக்கு ஆசைப்பட்டு இவர்கள் இருவரும் கவுசிக்கின் உயிருக்கே உலை வைத்துவிடுவார்கள்' என்று அவரது உள்மனம் எச்சரித்தது. உடலெங்கும் பயமும், நடுக்கமும் பரவின.

'பகவானே! இந்தப் பாவிகளிடமிருந்து என் மகன் கவுசிக்கை காப்பாத்தும்...' கண்கள் ஊற்றெடுத்து கசிய... பொங்கிவந்த விம்மலை அடக்கியவண்ணம் மனமுருக வேண்டிக்கொண்டார், விஷ்ணுவர்மன்.

தனது மனதில் துளிர்த்த சந்தேகத்தை கவுசிக்கிடம் வெளிப்படுத்திவிட வேண்டும் என்று அவரது உள்மனம் துடித்தது.

'பக்கவாதம் வந்து படுக்கையில் படுத்தபின்தான் இரண்டாம் தாரமாக வந்து இரண்டகம் செய்கிறவளைப் பற்றி புரிந்துகொள்ள முடிந்ததா?' என்று கவுசிக் கேட்டுவிட்டால்?

'அவனிடம் இதைப்பற்றி சொல்லுவது சரியா? தப்பா?'

அவரது மனதில் ஒரு பெரிய பட்டிமன்றம் நடந்து கொண்டிருந்தது.

இந்த விஷயத்தை அவன் காதில் போட்டு வைப்பதுதான் சிறந்தது.

மனதில் உள்ளதைக் கொட்டித் தீர்த்து– மன்னிப்பு கேட்டு கவுசிக்கை எச்சரிக்கையாக இருக்கச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்.

## 12

அந்த பன்னீர் ரோஜாப்பூவை இலையோடு சேர்த்து மெல்ல கிள்ளி எடுத்தாள், கமலி.

அதன் ஒவ்வொரு இதழின் இடுக்கிலும் முத்துக்களை ஒளித்து வைத்ததைப் போன்று பனித்துளிகள் திரண்டிருந்தன.

விரல் நுனியால் பனித்துளியை உடைத்துவிட்டு, அந்த பன்னீர் ரோஜாவைக் காதோரமாய் சொருகிக்கொண்டாள்.

அவள் அலுவலகத்துக்கு விடுப்பு போட்டு இன்றோடு மூன்று நாட்களாகி இருந்தன.

இன்று நான்காம் நாளாக தேர்வு எழுதச் செல்ல வேண்டும்.

கவுசிக்கை பார்க்க வேண்டும் என்றால் இன்னமும் நான்கு நாட்களை நகர்த்த வேண்டும் என்று எண்ணும்போதே கமலிக்கு மலைப்பாக இருந்தது.

கவுசிக்கை சந்திக்கும்போது ஒரு விஷயத்தை வெளிப்படையாக, உடைத்துப் பேசிவிட வேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்புதான் முடிவு எடுத்திருந்தாள்.

'என் குடும்பம் இப்ப இருக்கிற சூழ்நிலையில்... நான் காதலைப் பத்தி யோசிச்சுப் பார்க்கவே முடியாது. அக்காவோட வாழ்க்கை அந்தரத்துல ஊசலாடுது! தம்பியோட படிப்பு முடியணும். அவன் நல்ல வேலையில் உட்காரணும்!

வீட்டு மேல வாங்கின கடனை அடைக்கணும். இன்னும் இரண்டு ஆண்டில் என்னோட கடமைகள் நிறைவேறினதும் தான் நான் எதைப்பத்தியும் நிதானமா யோசிக்க முடியும்.

என்னோட பொருளாதார பிரச்சினையை ஒரு நொடியில் நீங்க தீர்த்து வைக்க முடியும். ஆனா... அதை வாங்கிக்க என் சுயகவுரவம் இடம் தராதே?

இந்த இரண்டு ஆண்டு இடைவெளியில்... நீங்களும் ஒரு



லட்சிய வெறியோடு செயல்பட்டு, தொழிலில் பல சிகரங்களைத் தொட்டு சாதிக்கலாம்! அதுவரை நமக்குள்ளே எந்தவித சிந்தனையும் இருக்கக்கூடாது. அவரவர் கடமை முடிஞ்சதும்... காதலைப் பத்தி சிந்திக்கலாமே!

நாம் 'டீன் ஏஜை' கடந்தவர்கள். நமக்கு பக்குவம் இருக்கு. நம்ம கடமை முடிகிறவரைக்கும்... நாம நாமளாவே இருந்துவிடலாமே!' இவ்வாறு கவுசிக்கிடம் கூற வேண்டும் என்றுதான் தீர்மானித்திருந்தாள், கமலி.

ஆனால் அவளுக்குள் வேறுவிதமான ரசாயன மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்தது.

அவளது வீட்டுத் தோட்டத்தில் ரோஜா பூக்கள் பூத்துக் குலுங்கும் தருணங்களில்... அவள் அவற்றை பறிக்காமல் செடியிலேயே வைத்து அழகு பார்ப்பாள்.

சில நேரங்களில் அவற்றைப் பறித்து சாமி படங்களுக்குச் சூட்டுவாள்.

ஆனால்... பூவைப் பறித்து கூந்தலில் சூடிக்கொள்ள வேண்டுமென்ற ஆசை ஒருபோதும் கமலிக்கு எழுந்ததே இல்லை.

இன்றைக்கு அந்த ஆசை எழுந்திருக்கிறதே... அது ஏன்?

சுவரில் மாட்டி இருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள். அந்த பன்னீர்ரோஜா அவளது அடர்ந்த நீண்ட கூந்தலில் இடம் பெற்றதால்... இன்னமும் பொலிவாய் மாறியிருந்தது.

கமலியின் இதழ்களில் ஒரு குட்டி முறுவல் வந்து குந்தியது.

"கமலி..."

அவளது முதுகுக்குப் பின்னால் வந்து நின்றாள், விசாலி.

"என்னக்கா?" சடாரென்று திரும்பினாள், கமலி.

"இரண்டு நாளா உன்கிட்ட நல்ல மாற்றம் தெரியுதடி! நல்ல முடிவாத்தான் எடுத்திருப்பேன்னு தோணுது. குடும்பக் கஷ்டத்தை சதா பார்த்து பார்த்து... உன் முகத்துல

எப்பவும் ஒரு விரக்தியும், வேதனையும்தான் படர்ந்திருக்கும். அது இப்போ 'மிஸ்சிங்!' முகத்துல ஒரு பூரிப்பும், மலர்ச்சியும் வந்துட்டதால... முன்னைவிட அழகா, களையா இருக்கே, கமலி."

அவளது கன்னத்தைப் பாசத்துடன் வருடிவிட்டு... சமையலறை நோக்கி நகர்ந்தாள், விசாலி.

கமலிக்கு சற்றே சங்கோஜமாக இருந்தது.

'அக்கா சொல்வது உண்மைதான்! என்னுள் ஏதோ மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் மறுக்க முடியுமா?

என்னை நானே ரசிக்கத் தொடங்கிவிட்டேன். ஒவ்வொரு நாளும் புதிதாய் விடிந்ததைப் போல... புதிதாய் பிறந்ததைப் போல... புத்துணர்ச்சியோடு இருக்கிறதே!

கமலியின் கண்களுக்குள் கவுசிக் வந்து வந்து போனான்.

விடுப்பு முடிந்து கவுசிக்கை சீக்கிரமாய் காணவேண்டும் என்று அவளது மனம் தவியாய் தவித்தது.

'எப்போதும் கவுசிக்கின் நினைப்பாகவே இருக்கிறதே!'

இரண்டு ஆண்டு தீர்மானத்தைப் பற்றி அவனிடம் சொல்ல வேண்டும் என்று காத்திருந்தவளுக்கு... உள்ளுக்குள் முதல் முறையாக உதறல் எடுத்தது.

அவள் எடுத்த அந்த முடிவு... வலுவிழந்துகொண்டே இருந்தது. அதை அவளால் நன்கு உணர முடிந்தது.

வலுக்கட்டாயமாக, பிடிவாதமாக தன் கொள்கையை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள... உள்ளுக்குள் போராடித்தான் பார்த்தாள்.

ஆனால், கடைசியில்... தோல்வியைத்தான் தழுவி நின்றாள், கமலி.

'ஊகூம்! நா...நான் கவுசிக்கை மனப்பூர்வமாக காதலிக்கத் தொடங்கிவிட்டேன்.'

காதல்வயப்பட்ட மனம்... கமலியை தன் வசப்படுத்தி



களிப்படைந்தது.

செருப்புகளை அவசரமாய் கால்களில் திணித்துக்கொண்டு புறப்பட்டாள், கமலி.

"கமலி! ஒரு நிமிடம் இரும்மா" என்ற தேவகி தயக்கத்துடன்... விசாலியின் தலை தென்படுகின்றதா என்று பின்னால் திரும்பி, கூடத்தைப் பார்வையால் துழாவினாள்.

"விசாலி... இந்தவாட்டியும் ஏதோ பிரச்சினையோடுதான் அவ வந்திருக்கான்னு நெனைக்கிறேன். ஆனா... அவ வாயையே திறக்கமாட்டேங்கிறா... என்ன ஏதுன்னு விசாரிச்சு நாமதான் சரிக்கட்டி அனுப்பணும். என்ன சொல்றே, கமலி?"

நின்று நிதானமாக தாயின் சோகம் சூழ்ந்த முகத்தை உற்றுநோக்கினாள், கமலி.

"இந்தவாட்டி சரிக்கட்டுறதுக்கு எவ்வளவு தேவைப்படும்னு சொல்லும்மா?"

"எ...என்ன கமலி, இப்படி பேசுறே?" தேவகியின் முகம் கூம்பிப் போனது.

"பின்னே எப்படிம்மா பேசச் சொல்றே? சரி... நான் புரியாம தான் கேட்கிறேன். சரிக்கட்டி அனுப்பணும்னு சொன்னியே... அதுக்கு என்ன அர்த்தம்னு சொல்லு, தெரிஞ்சுக்கிறேன்."

"சரி... நீ அவசரமா கிளம்புற நேரத்துல எதுக்கு வியாக்கியானம்? பண்டிகை நெருங்கிட்டு வருது... மாப்பிள்ளைக்கும், விசாலிக்கும், பாப்பாவுக்கும் நல்லதா துணிமணி எடுத்துக் கொடுத்துடணும்..." தயங்கி நிறுத்தினாள், தேவகி.

"அப்புறம்...? அவ கிளம்பிப் போறப்போ கையில பணத்தையும் கொடுத்து அனுப்பணும். அவ்வளவுதானேம்மா? செஞ்சுடலாம்... சம்பளம் வரட்டும்... அப்படியே உன் கையில கொடுத்துடுறேன். இருப்தியா அக்காவுக்கு சீர்செனத்தி செய்து அனுப்பு!" முறுவலித்துவிட்டு நகர எத்தனித்தாள், கமலி.

"க...கமலி! போன மாச சம்பளத்துலேயே... உன்னோட

கழுத்துச் செயினை திருப்பிட்டு வரச்சொன்னேன். 'அடுத்த வாட்டி பார்த்துக்கலாம்'னு நீ சொல்லிட்டே...

வயசுப்பொண்ணு... அதுவும் பெரிய நிறுவனத்தில் நல்ல பதவியில் வேலை பார்க்கிறவ... கழுத்துல வெறும் கருகமணி பாசியோடு இருந்தா... பார்க்க நல்லாவா இருக்கும்? உன்னை இந்தக் கோலத்துல பார்க்கவே எனக்கு சங்கடமா இருக்குடா... மற்றவங்க என்ன நினைப்பாங்க?

இந்த மாச சம்பளத்துலேயாவது... செயினை திருப்பிட்டு வந்துடு... வீட்டுச் செலவை பார்த்து சமாளிச்சுக்கலாம். சரியா?"

தாயின் விழிகள் துளிர்க்கத் தொடங்கியதும்... கமலிக்குள் பச்சாதாபம் சுரந்தது.

"ஐயோ... என் செல்ல அம்மாவே! நாம நமக்காக மட்டும்தான் வாழணும். அடுத்தவங்க என்ன நினைப்பாங்க? எப்படி இப்படின்னு கவலைப்பட்டுக்கிட்டு இருந்தா... வேதனைதான் மிஞ்சும். கண்ட நோயையும் நாமே இழுத்துவிட்டுட்டு அவதிப்பட வேண்டியதுதான்.

உனக்கு ரத்த அழுத்தம், சர்க்கரைநோய் இருக்கு! இந்த மாசம் மருந்து- மாத்திரை வாங்கணும். அப்பாவுக்கு டானிக், மாத்திரை தீர்ந்துபோச்சு! பாபுவுக்கு நல்லதா மூணு செட் துணி எடுக்கணும்.

ஏற்கெனவே இருக்கிற துணி எல்லாம் அரதப் பழசா போயிடுச்சு! பாவம்... காலேஜுக்குப் போற பையன்... கேட்கிறதுக்கு சங்கடப்பட்டுட்டு இருக்கான். கடனுக்கு வட்டி கட்டணும்... வீட்டுச் செலவு வேற இருக்கே...!

பண்டிகை வேற வரப்போகுது... அக்காவை வேற சரிக்கட்டி அனுப்பணும். வீட்டோட மேல்தளம் பழுதடைஞ்சு இருக்கே... மழை பெஞ்சா ஒழுகுது!

மழைக்காலம் வர்றதுக்குள்ளே பழுது பார்த்து வச்சுக்கணும். நம்ம சிவராமன் மாமாவோட பொண்ணுக்கு அடுத்த வாரம்



கல்யாணம்... மாமா நமக்காக எவ்வளவோ செய்திருக்காரு! அவரோட பொண்ணுக்கு நம்ம கவுரத்தை விட்டுக் கொடுக்காம, ஏதாச்சும் நல்லா செய்ய வேணாமா?

இத்தனை செலவும் வரிசையில் காத்திருக்கும்போது... என் கழுத்துச் செயினுக்கு என்னம்மா அவசரம் வந்துச்சு?"

"இல்ல கமலி! வந்து..."

"சும்மா இரும்மா! கொஞ்ச நாளைக்கு செயின் அடகுக் கடையில பத்திரமா இருக்கட்டும். நான் வர்றேன்மா... நேரமாச்சு!"

ஓட்டமும், நடையுமாக பஸ் நிறுத்தத்தை நோக்கி விரைந்தாள், கமலி.

'பாவம் அக்கா! அடிக்கடி பிறந்தகத்திற்கு வந்து தொந்தரவு செய்கிறோம் என்று. உள்ளூர சங்கடப்பட்டுக்கொண்டு... சமீபகாலமாக அவள் படும் வேதனையை வெளிக்காட்டாமல்... தனக்குள்ளேயே போட்டுப் புதைத்து விடுகிறாள்.

செந்தில் அத்தான் வருங்காலத்தில் திருந்தி, அவளிடம் அனுசரணையாக நடந்துகொள்வாரா என்பது மிகப்பெரிய கேள்விக்குறிதான்!

அவர் எப்படியோ போகட்டும்! ஆனால், அக்கா விசாலியை யும், குழந்தை தீபிகாவையும் காலமெல்லாம் கண்கலங்காமல் ஆதரித்துக் காப்பாற்ற வேண்டியது என் கடமை!'

பொங்கி வந்த கண்ணீரை சிரமப்பட்டு உள்ளிழுத்துக் கொண்டாள், கமலி.

அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பஸ், பெருங்குலுக் கலுடன் வந்து சேர்ந்தது. உள்ளே பெரும் கும்பல் இருந்தது. கூட்டத்தில் எப்படியோ முண்டியடித்து தன்னைத் திணித்துக்கொண்டாள்.

மீண்டும் கவுசிக்கின் ஞாபகம் மெல்ல தலைகாட்டியது.

'இடுகிடு'வென்று விஸ்வரூபம் எடுத்து வளர்ந்து அவளது மனமெங்கும் வியாபித்து- ஆட்டிப்படைத்தது!

## 13

கமலியின் விடுமுறைக் கடிதத்தைக் கண்டதுமே... கவுசிக் அதிர்ந்துபோய்விட்டான்.

'உடல்நலமில்லை என்று கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாள். உண்மையாகவே அவளுக்கு உடம்பு சரியில்லையா?

மனம் திறந்து... அவளை நான் நேசிப்பதை சொன்னேனே? அது பிடிக்கவில்லையா? அவளுக்கு விருப்பமில்லை என்றால்... நேரடியாக சொல்வதில் என்ன தயக்கம்?

ஒருவேளை... மனதிற்குள்ளேயே இந்த விஷயத்தைப் போட்டுக் குழப்பி... கலங்கி- அதனால் காய்ச்சல் ஏதும் வந்துவிட்டதா?

அவளது 'செல்'லுக்கு முயற்சித்துப் பார்க்கலாமா? ஒருவேளை என்னைப் பார்க்கவே பிடிக்காமல் விடுப்பு போட்டிருந்தால்?

வேண்டாம்! போன் செய்து மனரீதியாக மேலும் அவளுக்கு எந்தவித சங்கடத்தையும் ஏற்படுத்த வேண்டாம்!

ஒருவேளை... அவளுக்கு உண்மையாகவே உடல்நிலை சரியில்லையோ? வீட்டுக்குச் சென்று பார்க்கலாமா?

வே...வேண்டாம்! அவளுக்கு வீண் நெருக்கடி தரவேண்டாம். அவள் நன்கு யோசிக்கட்டும்.'

கமலியைக் கண்ட நாள் முதல்... கவுசிக், நிறுவனத்திற்காக... அதிக நேரத்தை செலவழித்தான்.

கண்ணுக்கினிய காதலி இங்குதானே வேலை பார்க்கிறாள்! அவளது பூ முகத்தை அடிக்கடி தரிசிக்கும் பாக்கியம் இங்கே



கிடைக்கிறதே!

இப்போது, கமலி இல்லாத அலுவலகத்திற்கு வரவே அவனுக்குப் பிடிக்கவில்லை. வந்தால் இருப்புக்கொள்ள வில்லை!

ஒப்புக்கு ஒரு அரை மணி நேரம் வந்திருந்துவிட்டு- மற்ற நிறுவனங்களை கவனிக்கச் சென்றுவிடுவான்.

அவன் உடம்பிலிருந்து உயிரே பிரிந்து சென்றுவிட்டதைப போல் உணர்ந்தான்.

"எக்ஸ்கியூஸ் மீ சார்! மே ஐ கமின்!"

"எஸ்!"

படபடக்கும் இதயத்துடன் நின்ற கமலியைப் பரிதாபமாக ஏறிட்டான், கவுசிக்.

கோப்பு ஒன்றை கொடுத்துவிட்டு, பார்வையைத் தழைத்துக் கொண்டிருந்தவளை ஏறிட்டான், கவுசிக்.

முகம் குங்குமமாய் சிவந்திருக்க... கன்னங்கள் கண்ணாடி யாக பளபளத்தன.

'அன்று நான் கேட்ட கேள்விக்கு- இன்னமும் பதில் சொல்ல வில்லை! இங்கு அதைப் பற்றிப் பேசுவதற்கு தயங்குகிறாளோ?'

"மிஸ். கமலி! ஜப்பானிலிருந்து உதிரிபாகங்கள் இறக்குமதி செய்யலாம்னு இருக்கேன். மறைமலைநகர்லே இருக்கிற கார் தொழிற்சாலையில் ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்ட உதிரிபாகங்களை இன்னிக்கு கணக்கெடுக்கச் சொல்லி இருக்கேன் நீங்க கிட்ட இருந்து மேற்பார்வை பார்த்துட்டா- நல்லா இருக்கும்!"

"சரி சார்! நா இப்பவே கிளம்பிப் போறேன்."

அவளிடம் பரபரப்பும், ஆர்வமும் தொற்றிக்கொண்டன.

"எனக்கும் அங்கே ஒரு வேலை இருக்கு! ஆட்சேபனை இல்லைன்னா, நீங்க என்கூடவே காரில் வரலாம்."

"நா... நா வரேன் சார்!"

மெல்லிய குரலில் பதிலளித்த கமலி, தற்செயலாய் பக்கவாட்டில் திரும்பினாள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கவுசிக்கின் தாயாரின் புகைப்படத்திற்கு வழக்கத்திற்கு மாறாக பிரமாண்ட ரோஜா மாலை அணிவிக்கப்பட்டு இருந்தது.

கார் தாம்பரத்தைக் கடந்து சென்றதும், தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான், கவுசிக்.

"கமலி! நான் கேட்டதுக்கு இன்னமும் பதிலையே காணோமே?"

முன் இருக்கையில் அமர்ந்திருந்தவளின் முகத்தை ஊன்றிப் பார்த்துவிட்டு, மீண்டும் சாலையில் பார்வையைப் பதித்தபடி காரை ஓட்டினான்.

"எனக்கு சில கடமைகள் இருக்கு. அது முடிகிறவரைக்கும்... ரெண்டு வருடத்துக்கு காதலை ஒத்தி வைக்கலாம்னு முடிவெடுத்தேன். ஆனா, தோத்துட்டேன். காதல் புனிதமானதுன்னு கேள்விப்பட்டு இருக்கேன். ஆனா... அது... இவ்ளோ சக்திவாய்ந்ததுன்னு இப்போதான் புரிஞ்சுகிட்டேன்.

நானும் உங்களை மனப்பூர்வமா நேசிக்கிறேன், கவுசிக். ஒரு அற்புதமான மனிதரை மறுக்க யாருக்கு மனசு வரும்?"

பளபளவென்று மெருகேறி இருந்த கமலியின் முகத்தைப் பார்த்து... ஓரளவு எதிர்பார்த்தாலும்... அவள் உடைத்துப் பேசியபோது, கவுசிக் ஆனந்தத்தில் திக்குமுக்காடித்தான் போனான்.

"என்ன சொன்னே? மறுபடி சொல்லு!" என்றவனின் முகம் பிரகாசமானது.

"ஒரு அற்புதமான..."

"இல்லை... அதில்லே... என்னை எப்படி கூப்பிட்டே?"

"கவுசிக்!" என்றாள், வெட்கத்துடன்.



"மறுபடி சொல்லு!"

"ஊகூம்" தலைகவிழ்ந்தாள்.

காரை சாலையோரமாக ஒரு மரத்தடியில் சட்டென்று நிறுத்தினான்.

ஒற்றைவிரலால் அவளது தாடையை தொட்டு நிமிர்த்தினான்.

"இந்த பதிலை சொல்றதுக்கு ஒரு வாரம் லீவு போட்டுட்டு வீட்டுலே உட்கார்ந்து யோசிச்சியாக்கும்?" அவளது கன்னத்தை இதமாய் தட்டினான்.

"பார்வையற்ற இளைஞர்களுக்காக ஒரு பரீட்சை எழுதப் போனேன். அதான்..."

இதைக் கேட்டதும் அவனுக்கு செவிகளில் தேனோடை பாய்ந்தது போலிருந்தது.

"இந்த குணம்தானே காந்தமா ஈர்த்துடுச்சு!"

சட்டென்று அவளது வலது கரத்தைப் பற்றி இதழ் பதித்தான். நாணத்தில் அவளது முகம் சிவந்தது.

"கையில முத்தம் தந்ததுக்கே இவ்ளோ வெட்கப்பட்டா எப்படி?" கண்களில் குறும்புத்தனம் மின்ன நகைத்தவனைக் கண்டதும், கமலி பொய்க் கோபத்துடன் கையிலிருந்த சிறு டைரியை நன்கு இடுக்கியபடி ஏறிட்டாள்.

"நான் இங்கேயே இறங்கி பஸ் பிடிச்சு மறைமலை நகருக்கு வந்துடுறேன். நீங்க கார்லே வாங்க சார்!"

"கடவுளே! நீ செஞ்சாலும் செய்வே... நான் சமர்த்தா இருக்கேன். போதுமா?" போலி பவ்வியத்துடன் லேசாய் தலைகுனிந்து நிமிர்ந்தவனைக் கண்டதும் களீர்' என்று சிரித்துவிட்டாள், கமலி.

அவளுடன் சேர்ந்து சிரித்த கவுசிக், உரிமையுடன் அவளை இதமாய் தன் தோளில் சாய்த்துக்கொண்டான்.

இருவருக்குமே கூடை நிறைய பூக்களை வாரி இறைப்பது

போலிருந்தது.

அந்த ஒரு கணத்தில்... இரு இளம் உள்ளங்களும் விழிகளை மூடி... இந்த உலகையே மறந்திருந்தனர்.

## 14

**போ**ன காரியம் எளிதாக முடிந்துவிட... முகத்தில் மகிழ்ச்சி மலர... காரில் சென்னைக்கு திரும்பிக்கொண்டிருந்தனர், கவுசிக்கும், கமலியும்!

"கவுசிக்! அம்மாவோட படத்துக்கு வழக்கத்துக்கு மாறாக இன்னிக்கு பெரிய ரோஜா மாலை சாத்தி இருந்திங்களே என்ன விசேஷம்?"

"நானே சொல்லணும்னு நெனச்சுட்டிருந்தேன். இன்னிக்கு அம்மாவோட நினைவு நாள். ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளிலே அனாதை குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் விருந்துக்கு ஏற்பாடு பண்ணி, அதுலே நானும் கலந்துப்பேன்.

இப்போ நாம அங்கேதான் போயிட்டிருக்கோம்! உனக்கு அதிர்ச்சியா இருக்கட்டும்னு இதை சொல்லாம இருந்தேன். நீயே கேட்டுட்டே! அம்மா மறைந்த நாளில் நம்ம காதல் மொட்டவிழ்ந்து மலர்ந்திருக்கு பார்த்தியா?"

அவன் விழிகளில் நீர்த்திரையிட்டது.

அவனது ஏக்கங்கள், குடும்பத்தைப் பற்றிய விவரங்கள், அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவளிடம் கொட்டித் தீர்த்தான், கவுசிக்.

பெரும் பணக்காரனாக இருந்தாலும், பாசத்துக்கும், அன்புக்கும் ஏங்கித் தவித்துவந்த அவனது கதையைக் கேட்டு நெக்குருகிப்போனாள், கமலி. அவளது மனம் பாகாய் கரைந்தது.



'உங்களுக்கு நான் இருக்கிறேன்' என்ற ரீதியில் அவனது கரத்தைப் பற்றி... தனது கன்னத்தில் பொருத்திக்கொண்டாள்

**அ**னாதை குழந்தைகளுடனும், முதியவர்களுடனும் விருந்தில் கலந்துகொண்டு சாப்பிட்டு, சிறிது நேரம் அளவளாவிவிட்டு காரில் ஏறியபோது, மணி மூன்றரையைத் தொட்டிருந்தது.

சீரான வேகத்தில் காரைச் செலுத்தினான், கவுசிக்.

புறப்படும்போது தூறலாக பொழிந்த மழை, இப்போது நன்கு வலுத்திருந்தது. பாதை தெரியாத அளவுக்கு சாலைகளில் தண்ணீர் ஓடியது.

ஒரு சோதனை சாவடியில் கார் மறிக்கப்பட்டது. "இந்தப் பாதை வழியாகச் செல்ல முடியாது. மரங்கள் சாய்ந்து தடைபட்டு இருக்கிறது. பின்னோக்கிச் சென்றால், இடப்பக்கமாய் ஒரு பாதை வரும்! அந்த வழியே செல்லுங்கள்!" என்றார், காவலர்.

சிரமத்துடன் பின்னோக்கிச் சென்று, இடப்பக்கப் பாதை வழியே காரை செலுத்தினான், கவுசிக். அந்தப் பாதை குண்டும், குழியுமாக தேங்கி நின்றிருக்க... ஒருமுறை ஏறி இறங்கி வண்டி குலுங்கியது.

கவுசிக் திடுக்கிட்டான். கமலியின் முகமும் வெளிறிப் போனது.

ஒரு மரத்தடியில் குடும்பத்துடன் ஒடுங்கி நின்றிருந்த நடுத்தர வயதுக்காரரிடம் தலைநீட்டி விசாரித்தான்.

"வலப்பக்கமாய் குறுகலான பாதை ஒன்று இருக்கு சார்! ஆனால், சுற்றுவழி... போய்ச் சேர்றதுக்கு ஒரு மணி நேரமாவது தாமதமாகும். யோசிச்சுக்கோங்க" என்றார்.

"பரவாயில்லை... பத்திரமா போய் சேர்ந்தா போதும்! கமலி, கொஞ்சம் தாமதமாகும் பரவாயில்லையா?"

"பரவாயில்லை! இதைத் தவிர வேறு வழியில்லையே நமக்கு!"

கருமேகங்கள் ஆவேசத்துடன் குமுறிக்கொண்டிருந்ததால், இருட்டு வெகு சீக்கிரமாய் கவிழத் தொடங்கியது.

அந்தப் பாதை குறுகலாகவும், இருட்டாகவும் இருந்தது. காரின் முகப்பு வெளிச்சத்தில்தான் ஓட்டவேண்டிய கட்டாயம்!

இடியுடன்கூடிய மின்னல்கீற்றுகள் அவர்களை ஏகத்திற்கும் அச்சுறுத்தின.

அரை மணி நேரம் சென்றிருக்கும். கார் 'படார்' என்ற சத்தத்துடன் முன்புறம் சாய்ந்துவிட்டது.

"ஐயோ... என்னாச்சு?" திகிலில் கவுசிக்கின் தோளைப் பற்றிக்கொண்டாள், கமலி.

சட்டென்று அவன் திரும்ப... தன்னிலை உணர்ந்தவளாய் உடனே கையை இழுத்துக்கொண்டாள், கமலி.

"தைரியமா இரு! நான் இருக்கேன்லே... மெல்ல இறங்கு கமலி" சற்றே குனிந்து கார் கதவைத் திறந்துவிட்டான்.

பெரிய பள்ளத்தில் காரின் முன்சக்கரம் இறங்கிவிட்டதோடு 'பஞ்சர்' ஆகி இருந்தது.

இருவரும் வெகு ஜாக்கிரதையாக இறங்கியாக வேண்டிய கட்டாயம்! இல்லாவிட்டால், கார் முழுக்கவே பள்ளத்தில் இறங்கிவிடும்.

கொட்டும் மழையில் கவுசிக்கும், கமலியும் வெடவெடத்தனர். மரத்தின் அடியில் ஒதுங்கினாலும், சாரல் நனைத்தது.

கவுசிக் செல்போனில் தாம்பரத்தில் இருந்த ஒரு நண்பனுடன் தொடர்புகொண்டு 'மெக்கானிக்'கை உடனடியாக அழைத்து வரச் சொன்னான்.

கால்டாக்சிக்கு போன் செய்து, தாங்கள் நின்றுகொண்டிருந்த புறநகர்ப் பகுதியின் அடையாளத்தை விவரித்துச் சொல்வதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் கழித்தே அவர்கள் அந்த



இடத்தைவிட்டு நகர முடிந்தது.

பத்திரமாக செல்ல வேண்டுமே என்ற பதைப்பு ஒருபுறம் இருந்தாலும், ஆள் அரவமற்ற இடத்தில் தனிமையில் மழையில் நனைந்த 'திரில்'லான அனுபவத்தை நினைத்து காதலர்கள் உள்ளூர ஆனந்திக்கவே செய்தனர்.

"சென்ற மாத சம்பளம் கைக்கு வந்ததுமே வீட்டு உபயோகத்திற்கு ஒரு செல்போன் வாங்கி இருந்தாள், கமலி.

அம்மாவுடன் அதில் தொடர்புகொண்டு 'வீட்டுக்கு வரத் தாமதமாகும்' என்று சுருக்கமாக சொல்லி இருந்தாள்.

அவள் வரும்போது கிட்டத்தட்ட மணி எட்டாகி இருந்தது. தெருமுனையில் அவளை இறக்கிவிட்டு, கையசைத்து விடைபெற்றான், கவுசிக்.

வானம் தூறிக்கொண்டிருந்தது.

வீடு வந்து உடை மாற்றியும், வெகுநேரம் கமலிக்கு வெடவெடத்தது.

தலை பாரமாய் கனத்தது! அம்மா தேவகி பதறிப்போய் சுக்கும், மிளகும், துளசியும் இடித்து கசாயம் வைத்துக் கொடுத்தாள்.

தலைவலி தைலத்தை தடவிய கமலி, இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டாள்.

## 15

மறுநாள் அலுவலகத்திற்குள் நுழைந்ததும், கமலிக்கு தலைக்குமேல் வேலைகள் குவிந்து கிடந்தன.

முக்கிய அதிகாரிகளை அறைக்கு வரச்சொல்லி, எந்தெந்த உதிரிபாகங்கள் எவ்வளவு உள்ளது? எது நிறைய விற்பனையாகிறது? அவசர 'ஸ்டாக்' எது? என்று கணக்கெடுத்து இரு நாட்களுக்குள் முழு விவரம் தயார் செய்யச் சொன்னாள்.

கணினி முன் அமர்ந்து கவனமாக குறிப்புகள் எழுதி வைத்தாள். புதிதாக இன்னொரு திட்டத்தை தயார் செய்தாள்.

அன்றும், அதற்கு மறுநாளும் கவுசிக் வரவே இல்லை. மூன்றாம் நாள்! அவனுடன் முக்கிய கலந்துரையாடல் செய்யவேண்டி இருந்தது.

'இன்றாவது கவுசிக் வருவாரா?' ஏக்கம் தலைகாட்டியது.

காலையில் இருந்தே அதற்கான விவரங்களை எல்லாம் எழுதிப் படித்து, அவனுடன் பகிர்ந்துகொள்ளும் விதமாக தன்னை தயார்படுத்தி இருந்தாள், கமலி.

மதியம் இரண்டு மணிவாக்கில் செல்போன் சிணுங்க... திரையில் அவனது பெயர் மின்னி மின்னிச் சிரித்தது.

பெயரைப் பார்த்ததுமே அவளது மனம் லேசாகிப் பறக்கத் தொடங்கியது.

"கமலி! மூணு நாளா எனக்கு சரியான காய்ச்சல்! இன்னிக்கு நாம பேசவேண்டி இருக்கு இல்லையா? நீ நம்ம ஆபீஸ் கார்லே எங்க வீட்டுக்கு வந்துடு... ஆலோசனையை முடிச்சுட்டு நான் உடனடியா கொரியாவுக்கு 'பேக்ஸ்' அனுப்பியாகணும்! தாமதிச்சா 'ஆர்டர்' கைவிட்டுப்போகும். அதான்."

"நா... நான் வந்தா... உங்க சித்தி ஏதாச்சும்?" தயங்கி நிறுத்தினாள், கமலி.

"அவங்க பெங்களூருக்கு சுற்றுலா போயிருக்காங்க. வர ஒரு வாரம் ஆகும்'னு வேலைக்காரி சொல்றா. வீட்டுல நானும், அப்பாவும்தான் இருக்கோம். தயங்காம கிளம்பி வா கமலி!

நீ யாருக்கும் பயப்பட தேவையில்லைடா! கூடியசீக்கிரம் 'திருமதி கமலி கவுசிக்' ஆகப்போறவ நீ! எந்த ஒளிவு மறைவும் இதுலே கிடையாது. புரியுதா?" அன்புடன் அதட்டினான், கவுசிக்.

அழகான பசுமையான தோட்டத்துக்கு மத்தியில் ஒவ்வொரு அங்குலமும் பணத்தால் இழைத்து கட்டப்பட்டிருந்தது, அந்த பிரமாண்டமான பங்களா.



கோப்பினை மார்போடு அணைத்தபடி தயக்கமாய் உள்ளே புகுந்தாள், கமலி.

"அம்மா! கவுசிக் ஐயாவோட அறை, மாடியில வலப்பக்கமா இருக்குது" -சொன்ன வேலைக்காரி, கண்கள் மினுங்க... கமலியை ஏற இறங்கப் பார்த்தாள்.

புன்னகைத்து தலையசைத்துவிட்டு கவுசிக்கின் அறையை நாடிப்போனாள், கமலி.

மூன்று நாட்களில் கவுசிக் அடித்துப்போட்டாற்போல துவண்டுபோயிருந்தான்... கணினி முன் அமர்ந்திருந்தான். கண்கள் கோவைப்பழமாய் சிவந்திருந்தன.

"டாக்டர்கிட்டே காண்பிச்சீங்களா? தொடர்ந்து மாத்திரை-மருந்து சாப்பிடுறீங்களா? கிட்ட இருந்து கவனிக்க ஆள் இல்லைன்னு மாத்திரை போட்டுக்காம இருந்துட்டீங்களா? ஓய்வு எடுத்துக்காம வேலையில் உட்கார்ந்துட்டீங்க?"

மனதின் வலி, அவளது விசாலமான விழிகளில் வெப்ப நீர் ஊற்றை உருவாக்கியது. கரிசனத்துடன் அவனது நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"எனக்காக கண்ணீர்விடுறதுக்கு ஒரு ஜீவன் இருக்குன்னு நினைக்கிறப்போ எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா? உட்காரு! எல்லாம் சீக்கிரம் சரியாயிடும்... இப்பத்தான் எந்திரிச்சு உட்கார்ந்து பங்கு மார்க்கெட் நிலவரத்தைப் பார்த்துட்டிருந்தேன்.

பைலைக் கொண்டா! எனக்கு ஒண்ணுமில்லைடா... கண்ணைத் துடைச்சுக்கோ. ஆலோசனையை ஆரம்பிக்கலாமா?"

அவனுடன் கலந்துரையாடியதில் முக்கால்மணி நேரம் பறந்ததே தெரியவில்லை.

கோப்பினை மூடி வைத்துவிட்டு யோசனையுடன் அவனை ஏறிட்டாள்.

அவனுடைய மலர்ந்த கண்கள், அவளை முழுமையாக





இமைக்குள் அடக்கிட மேலும் விரிந்தன.

"என்ன கமலி? எதையோ சொல்ல வந்துட்டு தயங்கற மாதிரி இருக்கு?"

கவுசிக் தனது 'எக்ஸ்ரே' விழிகளால் அவளது உள்மனதை வாசித்திருந்தான்.

"நீங்க சொன்னதை வச்சுப் பார்த்தா... அப்பா முன்னை மாதிரி இல்லை. ரொம்ப மாறிட்டாருன்னு என் மனசுக்குப் படுது! பழசையெல்லாம் மறந்துட்டு அவர்கிட்ட கொஞ்சம் நீங்க அனுசரணையா நடந்துக்கணும். பாவம்! ஆயிரம்தான் இருந்தாலும், அவர் உங்களைப் பெத்தவர்."

கவுசிக்கின் புருவங்கள் ஒரு கணம் யோசனையுடன் ஏறி இறங்கின.

"சரி... முயற்சி பண்ணுறேன்."

"இப்படி விட்டேத்தியா பதில் சொன்னா எப்படி? முழுமனசோடு அன்பு செலுத்தணும்... நான் அவரைப் பார்க்கணும்னு பிரியப்படுறேன். பார்க்கலாமா?"

கண்களில் ஆர்வம் மினுங்க கமலி கேட்டபோது, கவுசிக்கால் எதையும் மறுத்துப் பேச முடியவில்லை.

"அ... அப்பா? சாப்பிட்டீங்களா? மாத்திரை போட்டீங்களா?" கேட்டுக்கொண்டே கட்டிலில் அவரது மலர்ந்த முகத்துடன் கால்மாட்டில் கவுசிக் அமர்ந்ததும், விஷ்ணுவர்மனுக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை.

"ஆ... ஆச்சுப்பா" குழறிப் பேசியவரின் கண்கள் கசிந்தன.

நீர்த்திரையிட்ட விழிகளுடன் கவுசிக்கின் பின்னாடி வந்து நின்ற கமலியை வியப்புடன் பார்த்தார்.

தளரப் பின்னியிருந்த கூந்தல், காதோரத்தில் ஒற்றை ரோஜா, லட்சணமான தோற்றத்துடன் விழிகளில் கனிவையும், அன்பையும் தேக்கியபடி பவ்வியமாய் நின்றிருந்தவளை விழிகளால் அளந்தார்.

## வெல்க தமிழ்

கடலூரில் உள்ள எனது உறவினர் வீட்டிற்குச் சென்றேன். காரிலிருந்து இறங்கும்போதே, 'வாங்க, வாங்க' என பலமுறை வரவேற்றான், அந்த வீட்டில் இருந்த இரண்டரை வயது சுட்டிச் சிறுவன்.

'அங்கிளுக்கு டாட்டா சொல்லு' என பிள்ளைகளை ஆங்கிலத்துக்கு பழக்கி வரும் பெற்றோர்களையே பார்த்து வருவதால், வித்தியாசமான அச்சிறுவனின் பெற்றோருக்கு புகழாரம் சூட்டி வந்தேன்!

–கே.கே. பாலசுப்ரமணியன்,
குனியமுத்தூர்.

"அப்பா! இவ கமலி! நம்ம கம்பெனியில் வேலை பார்க்கிறா. நா..நான் கமலியை ரொ..ரொம்ப நேசிக்கிறேன்."

கமலி சட்டென்று அவரது கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"ந...நல்லா இரும்மா! கவுசிக், ஜோடிப் பொருத்தம் பிரமாதமா இருக்குப்பா... என் கண்ணே பட்டுடும் போலிருக்கு!"

"சிஸ்டர்! அப்பாவோட ஆரோக்கியத்துல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கா, இல்லையா?"

"ம்! 'பிசியோ தெரபி' கொடுத்துட்டு இருக்கோம். அவரும் முழு ஈடுபாட்டோடு நாங்க சொல்லித் தர்ற பயிற்சிகளை செய்து ஒத்துழைச்சா கூடியசீக்கிரமே நல்லா நடமாட வாய்ப்பு இருக்கு. ஆனா, சார் ஒத்துழைக்கிறதில்லை."

நர்சின் குரலில் அதிருப்தி தொனித்தது.

"அப்பா... எனக்குன்னு யார் இருக்காங்கப்பா? எங்களுக்கு நீங்க முழுசா வேணும்ப்பா! ப்ளீஸ்..." தழுதழுத்தான், கவுசிக்.

விஷ்ணுவர்மனுக்கு மகிழ்ச்சிக் குமிழிட்டது. உள்ளுக்குள் உற்சாகம் ஊற்றெடுத்து பொங்கி உயர்ந்தது.

"இங்க வாம்மா கமலி! எல்லாம் உன்னோட ராசிம்மா... பாராமுகமா இருந்தவன், என்னை மன்னிச்சு என்கிட்ட பாசமா அன்பா நடந்துகிறான்... நீ சவுபாக்கியவதியா அமோகமா இருக்கணும்மா!" அவளது உச்சந்தலையில் கை வைத்து ஆசிர்வதித்தார்.



மூவரது விழிகளும் கண்ணீரில் தளும்பின. மகிழ்ச்சி கரைபுரண்டது.

கூடிய விரைவில் புயல்வீசி.. விதி அவர்களை அலைக்கழிக்கப் போகிறது என்பதை யாரும் உணரவில்லை!

## 16

**நா**ட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்ததில் நான்கு மாதங்கள் உருண்டோடின.

விஷ்ணுவர்மனுக்கு கமலியைப் பார்த்த மாத்திரத்திலேயே மிகவும் பிடித்துப்போய்விட்டது.

கவுசிக் கொடுத்து வைத்தவன்! அருமையான, அழகான அன்பு தேவதை அவனுக்குக் கிடைத்துவிட்டாள்.

அன்பையும், பாசத்தையும் காணாமல்.. சொந்த வீட்டிலேயே அனாதையாய்... தனித்தீவாய் வாழ்ந்துவிட்ட கவுசிக், இனி அந்த அழகு மயிலின் அன்பு மழையில் காலம் முழுவதும் நனையப்போகிறான்!

இதை எண்ணும்போதே அவருக்கு பெருத்த நிம்மதி நிலவியது.

மரகதம் சாயந்தரம் மணி நாலரையாகிவிட்டால், வீடு தங்கமாட்டாள். நகர்வலம் கிளம்பிவிடுவாள்.

தோழிகளுடன் அளவளாவிவிட்டு வீடு திரும்ப மணி எட்டாகிவிடும்!

மரகதத்தின் தலை மறைந்ததும் விஷ்ணுவர்மன் போன் செய்து, கமலியை வீட்டுக்கு அழைத்துவிடுவார். காரை அனுப்பி அவளை அழைத்து வருவதும் உண்டு.

அலுவலக வேலை சீக்கிரமே முடிந்துவிட்டால் பெரும்பாலும் கமலியை தன்னுடனே அழைத்து வந்துவிடுவான், கவுசிக்.

இனிய குரலில் இதமாகப் பேசி, நர்சுடன் சேர்ந்துகொண்டு அவருக்கு பயிற்சி அளிப்பாள், கமலி.

கை, கால்களை நன்கு நீட்டி, மடக்கி பயிற்சி செய்தும், கைத்தாங்கலாக பிடித்து அவரை நடக்க வைத்தும் உடல்ரீதியாக, மனரீதியாக தெம்பூட்டினாள்.

கடற்கரைக்கு எதிரிலேயே அவர்களது அழகிய பங்களா அமைந்திருந்ததால், அவரை கடற்கரை மணலில் காலாற நடக்க வைத்து பயிற்சி அளித்தாள்.

நான்கு மாத பயிற்சியின் முடிவில் 'வாக்கிங் ஸ்டிக்'கை ஊன்றிக்கொண்டு கம்பீரமாக நடக்க ஆரம்பித்திருந்தார், விஷ்ணுவர்மன்.

அவர் பேசும் வார்த்தைகளில்கூட கொஞ்சம் தெளிவு பிறந்திருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை ஆறு மணிக்கே விஷ்ணுவர்மன், கமலிக்கு போன் செய்துவிட்டார்.

"இன்னிக்கு கவுசிக்கோட பிறந்த நாள். சுபமுகூர்த்த நாள் வேற. நானும், கவுசிக்கும் உங்க வீட்டுக்கு வந்து, உன்னை பெண் கேட்கப்போறோம். திடீர்னுதான் முடிவுபண்ணினேன்."

மரகதம் எங்கேயோ 'பிக்னிக்' போறதா சொல்லிட்டுப் போயிட்டா. அவ கிடக்கிறா! நிச்சயதார்த்தம் பண்ணும்போது அவளுக்குத் தெரிஞ்சா போதாதா?

அஷ்டலட்சுமி கோயில்லே அர்ச்சனை பண்ணிட்டு, நேரா உங்க வீட்டுக்கு வர்றோம், கமலி! வச்சுடட்டுமா?"

கவுசிக்கைப் பற்றியும், அவனது குடும்பத்தைப் பற்றியும் தேவகியிடம் ஏற்கெனவே சொல்லி வைத்திருந்தாள், கமலி.

பத்து மாதங்கள் சுமந்து பெற்றவள் அல்லவா? கமலியின் மனதில் அரும்பி இருந்த காதலைப் பற்றி பூடகமாக அம்மா தேவகி அறிந்து இருந்தாள்.

பூ, பழங்கள், தாம்பூலம், பட்டுச்சேலை, குங்குமச்சிமிழ்



அடங்கிய பெரிய தாம்பாளத்தை டிரைவர் ஏந்தி வந்து கூடத்திலிருந்த சாமி மாடத்தருகே வைத்துவிட்டு நகர்ந்தான்.

கவுசிக்கும், 'வாக்கிங் ஸ்டிக்'கை ஊன்றியபடி விஷ்ணுவர்மனும் வந்து கூடத்திலிருந்த நாற்காலிகளில் தங்களை நிறைத்துக்கொண்டபோது, கனத்த அமைதி நிலவியது.

"வணக்கம்! நான் விஷ்ணுவர்மன். கவுசிக்கைப் பத்தி நீங்க கேள்விப்பட்டு இருப்பீங்க. தங்கமான பிள்ளை. உங்க வீட்டுப் பொண்ணு கமலியை எங்க வீட்டு மருமகளாக்கிக்க நான் பிரியப்படுறேன். உங்களுக்கு சம்மதம்தானே?"

"தம்பியை முதன்முதலா பார்த்தபோதே எனக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுடுச்சு! எங்களுக்கு பரிபூரண சம்மதம்!"

"அப்போ கல்யாணத்துக்கு முதல்நாள் நிச்சயதார்த்தம் பண்ணிடலாம்! இன்னும் ரெண்டு மாசத்துல கல்யாணத்தை வச்சுடலாம். அய்யர்கிட்ட நாள் குறிச்சுட்டு, மண்டபத்தை 'புக்' பண்ணிடுவோம்!"

அப்பா நடேசன், தேவகி, தம்பி பாபு, விசாலி ஆகியோருக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சிதான் ஏற்பட்டது.

கவுசிக்கும், அப்பாவும் எத்தவித பந்தாவும் இல்லாமல் பழகிய விதம் அவர்களது நெஞ்சைத் தொட்டுவிட்டது.

"ஆமா... உங்க மூத்த மாப்பிள்ளைக்கு விஷயத்தைச் சொல்லவில்லையா? அவரைக் காணோம்?" விஷ்ணுவர்மன் கேட்டதும், அனைவரது முகங்களும் வாடி கூம்பிப்போயின.

"அக்கா பாவம்! இதுநாள்வரைக்கும் பல்லைக் கடிச்சுட்டு அத்தான் பண்ணுற அட்டூழியத்தை சகிச்சுட்டிருந்தா... எத்தனையோ வாட்டி நான் கெஞ்சிப் பார்த்தேன். 'நம்ம வீட்டோட வந்துடு... ஏன் சித்திரவதை படுறே?'ன்னு சொன்னேன். அவ கேட்கவே இல்லை.

அத்தான் எல்லைமீறிப்போயி... குடிச்சுட்டு வந்து அவளை அடிச்சு... 'கமலி பெரிய கம்பெனியில் கைநிறைய சம்பாதிக்கிறா. எனக்கு ஒரு லட்சம் பணம் தேவைப்படுது! பொறந்த வீட்டுக்குப்

போயி வாங்கிட்டு வா'ன்னு சொல்லி இருக்காரு!

அக்கா மறுத்துட்டாளாம்! ஆத்திரத்துல தகாத வார்த்தையில திட்டி, 'பெல்ட்'டைக் கழட்டி முதுகுத்தோல் உரியறாப்பல விளாசி இருக்காரு! குழந்தை பார்த்துட்டு பயந்து அலறி காய்ச்சலே வந்துடுச்சு!

இனிமேலும் அந்த மனுஷன்கூட வாழமுடியாதுன்னு அக்காவுக்கு புரிஞ்சுபோச்சு! இங்க வந்துட்டா... அவளுக்குள்ளே ஒரு தாழ்வு மனப்பான்மை... மத்தவங்களுக்கு பாரமா இருக்கோம் என்கிற நினைப்பு!

அக்காவுக்கு அளவுகடந்த பொறுமை, சகிப்புத்தன்மை உண்டு! அதனாலதான் அத்தான்கூட இத்தனை காலம் குப்பை கொட்டி இருக்கா!

அந்த குணத்தையே ஏன் மூலதனமா வச்சு முன்னேறக் கூடாதுன்னு ஒரு கேள்வி பிறந்துச்சு! இந்தப் பகுதியில், 'குழந்தைகள் காப்பகம்' கிடையாது. அடுத்த மாசத்துல இருந்து காப்பகத்தை ஆரம்பிக்கலாம்நு முடிவுபண்ணி இருக்கோம். வருமானத்திற்கு வருமானமும் ஆச்சு! அக்காவுக்கும் சுயமாக சொந்தக்காலிலே நிக்கிறோம்கிற தெம்பு வரும் இல்லையா?"

"அருமை கமலி! நல்ல முடிவு எடுத்திருக்கே. விசாலி, கவலைப்படாதிங்க! உங்களுக்கு நாங்க இருக்கோம்!" மெல்லிய குரலில் தைரியமூட்டினான், கவுசிக்.

"கமலிக்கு தன்னம்பிக்கை அதிகம்! எந்த கஷ்டம் வந்தாலும், கை சளைக்காம நீந்திப் போராடி கரையேறணும்னு துடிக்கிற ரகம்... உனக்குள்ளேயும் அந்த உறுதி பிறந்திடுச்சுன்னா, வாழ்க்கையில் ஜெயிச்சுடலாம் விசாலி" என்றார், விஷ்ணுவர்மன்.

மகிழ்ச்சியிலும், உணர்ச்சிப் பெருக்கிலும் விசாலிக்கு வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக்கொண்டன.

ஒன்றும் பேசாமல் கைகூப்பி வணங்கினாள்.

கண்ணீர் துளிர்க்க அக்காவின் தோளில் ஆதுரமாக கை வைத்து அழுத்தினாள், கமலி.



சூழ்நிலையின் இறுக்கத்தைத் தளர்த்த விரும்பிய விஷ்ணுவர்மன், "ஏம்மா கமலி? இன்னிக்கி கவுசிக்கோட பிறந்த நாள்னு சொன்னேனே? ஸ்பெஷலா ஏதாவது கிடைக்குமா?" என்று சிரித்தார்.

"சாரிப்பா! இதோ ஒரு நிமிடம்!" முந்தானையை இழுத்து செருகிக்கொண்டு, அடுக்களைக்குள் புகுந்தாள்.

**தோ**ட்டத்து தலைவாழை இலையை விரித்துப் பரிமாறத் தொடங்கினாள், கமலி.

அம்மா தேவகி உதவியுடன் குட்டி விருந்தே சமைத்திருந்தாள், கமலி.

விஷ்ணுவர்மனும், கவுசிக்கும் ஒரு பிடி பிடித்தனர். "கமலி! தம்ளர்லே கொஞ்சம் பாயசம் ஊத்து. எல்லாம் பிரமாதம்."

"ரொம்ப நாள் கழிச்சு இன்னைக்குத்தான் காரசாரமான சாப்பாட்டை சாப்பிடுற பாக்கியம் கிடைச்சிருக்கு. கமலி! உனக்கு உங்க அத்தை வரலட்சுமி மாதிரியே நல்ல கைபக்குவம் இருக்கும்மா!" மனதாரப் பாராட்டினார், விஷ்ணுவர்மன்.

குழந்தை தீபிகாவை தூக்கி தன் மடியிலே வைத்து கொஞ்சிக்கொண்டிருந்தான், கவுசிக்.

தனது உடை கசங்கிவிடும் என்று எண்ணாமல் அவன் குழந்தையை வைத்துக்கொண்டிருந்த விதமும், சாப்பிடுவதற்கு முன் தேவகி- நடேசன் தம்பதியினரை நிற்க வைத்து காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்ற பின்பும், அவனது மனதை அசைத்து விட்டிருந்தன.

'இப்பேர்ப்பட்ட மனிதர் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.'

காதலும், அன்பும் கண்களில் ததும்ப யோசனையுடன் அவனைப் பார்த்தபோது- அவனும், அவளது விழிகளைச் சந்தித்துவிட்டான்.

'எல்லா திறமைகளும், குணமும் ஒருங்கே அமையப்பெற்ற

உன்னை அடைய நான்தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்ற பொருள் பொதிந்தவிதத்தில் அவளை ஏறிட்டான், கவுசிக்.

நான்கு விழிகளும் ஆழ்ந்த காதலுடன் சங்கமித்தன!

## 17

படுக்கையை விரித்துப் போடுவதும், சுருட்டிக் கொண்டிருப்பதுமாக சளைக்காமல் மீண்டும் மீண்டும் செய்துகொண்டிருந்தன, அலைகள்!

கமலியின் காதோரமாய் சுருண்டிருந்த முடிக்கற்றையைத் தொட்டு விளையாடியது, கடற்காற்று.

"கவுசிக்! எதையோ சொல்ல வந்துட்டு... சொல்லாம என்னையே பார்த்துட்டிருந்தா என்ன அர்த்தம்?" கடற்கரை மணலில் விரலால் கிறி கோலமிட்டபடி கேட்டாள், கமலி.

"சொல்லாத சொல்லுக்கு விலையேதுமில்லைன்னு அர்த்தம்!"

"விளையாடாதீங்க... சொல்லுங்க, கவுசிக்!"

"மும்பையில ஒரு கருத்தரங்குக்கு நான் போயாகணும் கமலி! வர்றதுக்கு ஒரு வாரமாவது ஆகும். அதான்... தவிக்கிறேன். இந்தக் காதல் தேவதையை ஒரு வாரமா பார்க்காம, பேசாம... எப்படி பிரிஞ்சு இருக்கப்போறோம்னு மலைப்பா இருக்குடா."

"குழந்தை மாதிரி பேசாதீங்க, கவுசிக்! தொழிலில் நீங்க நிறைய சாதிச்சு சிகரங்களைத் தொடணும். அதுதான் எனக்கும் பெருமை! தினமும் போனில் பேசுங்களேன்."

"எளிதா சொல்லிட்டே, கமலி! என் வாழ்க்கைக்கே புது அர்த்தம் இப்பத்தான் கிடைச்சிருக்குடா... இத்தனை ஆண்டு கழிச்சு எனக்கு எங்கப்பா முழுசா கிடைச்சிருக்காரு...



# சாமக்கோடங்கி



செல்வ கதிரவன்

"எமதர்ம ராசா வரப்போறாரு... இந்த ஊர்ல ஒரு உசிருடே பறிபோகப்போகுது... காளி ஜக்கம்மா சொல்லுறா..."

குடுகுடுப்பை ஒலித்துக்கொண்டே போனது... ஊருக்குள் பீதி பரவியது.

"கோடங்கி குறி சொன்னா... அப்படியே நடக்குமே?"

"அப்படித்தான் சொல்லுவாங்க... யாரு சாகப் போறாங்களோ எந்த வீட்டுல இழவு விழப்போகுதோ?" ஒரே பதற்றம்- பரபரப்பு.

காலையில் முழித்தது முதலே மக்கள் எல்லாம் சாமக்கோடங்கி குறி சொன்னது பற்றிதான் இப்படி பேசிக்கொண்டு இருந்தார்கள்.

தெருக்களில் கூட்டம். எல்லோர் முகங்களிலும் பயம் படர்ந்திருந்தது.

"அந்தச் சாமக்கோடங்கி நம்ம ஊர் பிள்ளையார் கோயில் முன்னாடிதான் படுத்திருக்கான்... இதுக்கு எதாவது பரிகாரம் செய்யலாமான்னு கேக்கலாம்... வாங்க"



நடுத்தர வயதுக்காரர் ஒருவர் சொன்னார்.

அனைவரும் கும்பலாகக் கோயிலை நோக்கிக் கிளம்பினார்கள்.

போட்டி போட்டு சாமக்கோடங்கியை எழுப்பினார்கள். அவன் எழுந்திருக்கவில்லை. அவனிடம் எந்தச் சலனமும் இல்லை.

ஆமாம்... சாமக்கோடங்கி, சடலமாகக் கிடந்தான்...! *

அவரோட பாச மழையில நனைஞ்சுட்டிருக்கேன்.

அதுக்கு காரணமே நீதான்! இத்தனை காலம் அவரைப் பார்க்கவே பிடிக்காம... பாராமுகமா இருந்தவன்தான்! ஆனா, இப்போ ஒரு வாரம் அவரைப் பார்க்காம எப்படி இருப்போம்னு வேறு கஷ்டமா இருக்கு!

உன்னைப் பார்த்த பின்னாடிதான் நான் நிம்மதியாகவே இருக்கேன். ஆனா, நமக்குள்ளே ஒரு பிரிவு வந்து இந்த நிம்மதி எல்லாம் குலையப்போகுதுன்னு என் உள்மனசுலே அடிக்கடி தோணுது... எனக்கு பயமா இருக்கு, கமலி."

"என் உயிர்மூச்சு உள்ளவரை நான் உங்களைவிட்டுப் பிரிய மாட்டேன். இப்ப மட்டுமில்ல... ஜென்ம ஜென்மமாய் நம்ம பந்தம் தொடரத்தான் போகுது. பகவான் நம்மை கைவிடமாட்டார், கவுசிக்."

அவனது கலங்கிய கண்களைப் பார்த்ததும், சட்டென்று உருகிப்போனாள், கமலி.

அவனுக்கு தைரியமூட்டும் விதமா பேசியபடியே அவனது வலக்கரத்தைப் பற்றி தன் கன்னத்தில் வைத்துக்கொண்டாள்.

ஆயிரம் யானைகளின் பலம் தன் உடம்பில் சேர்ந்தாற்போன்ற தைரியம் அவனுக்குள் உருவானது.

கவலை மாயமாய் மறைந்து புதுத் தெம்பு உண்டானது.

"உன் பேச்சைக் கேட்டதும், ஏதோ 'டானிக்' குடிச்சாப்பல தெம்பு உண்டாகுது, கமலி! நன்றிடா."

அவளது விரல்களுடன் தன் விரல்களைக் கோர்த்துக் கொண்டு, மிக மென்மையாக அவளது புறங்கையில் தன் இதழ்களால் ஒற்றினான்.

அவளின் நெற்றியில் இதழ் பதித்து இதமாய் தன் தோளில் சாய்த்துக்கொண்டான்.

**க**வுசிக் மும்பைக்கு கிளம்பிச் சென்று நான்கு நாட்களாகி விட்டிருந்தன.



கடந்த இரண்டு நாட்களாக அவனிடமிருந்து போன் வரவில்லை.

'வேலை மும்முரத்தில் போன் செய்யக்கூட நேரம் இல்லையோ? ஒருவேளை உடம்பு சரியில்லாமல் போய்விட்டதா என்ன?' உள்ளூர பலதும் எண்ணி குழம்பித் தவித்துப்போனாள், கமலி. அவனது செல்லுக்கு முயற்சித்துப் பார்த்தபோது தொடர்பே கிடைக்கவில்லை.

சில நேரங்களில் 'நாட் ரீச்சபிள்' என்ற அறிவிப்புதான் வந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தால் குழப்பம்தான் மிஞ்சும் என்ற எண்ணம் தலை தூக்கியது.

"அக்கா! பாப்பாவைத் தூக்கிட்டு 'பிக்னிக்' போலாமா? மகாபலிபுரம், முட்டுக்காடு எல்லாம் சுத்திப் பார்த்துட்டு வரலாம். அப்பா வரமாட்டாரு. அம்மாவையும், பாபுவையும் கிளம்பச் சொல். நான் 'கால்டாக்சி'க்கு போன் பண்ணுறேன்."

"டாக்சியா? எதுக்கு கமலி? இவ்ளோ காசு செலவு பண்ணி போகணுமா?" விசாலி தயங்கினாள்.

"ஒரு சில விஷயங்களுக்கு காசை கணக்குப் பார்த்தா... சந்தோஷம் கிட்டாது. நான் கைநிறைய சம்பாதிக்கிறேன். குழந்தைகள் காப்பகமும் ஆரம்பிச்சாச்சு! எடுத்த எடுப்பிலேயே ஆறு குழந்தைங்க சேர்ந்திருக்காங்க.

உனக்கு இப்பத்தான் தன்னம்பிக்கை வந்திருக்கு! முகத்துல ஒரு தெளிவு பிறந்திருக்கு! வாரத்துல ஞாயிற்றுக்கிழமையில மட்டும்தான் நாம சுதந்திரமா இருக்கோம். மறுத்துப் பேசாதேக்கா. தீபு குட்டியை நான் தயார்பண்றேன். மத்தவங்க சீக்கிரம் கிளம்புங்க" அன்புடன் அதட்டினாள், கமலி.

உள்ளுக்குள் உற்சாகம் பொங்க– சிட்டாய் பறந்தாள், விசாலி.

மகாபலிபுரத்தில்–

காலத்தால் அழியாத பல்லவர் கால்ச் சிற்பங்களைப் பார்த்தபோது ஆச்சரியமும், பிரமிப்பும் ஏற்பட்டன.

சுற்றிப் பார்த்து கால்கள் ஓய்ந்த தருணத்தில் ஒரு மரத்தடியில் அமர்ந்து கையோடு கொண்டுவந்திருந்த புளியோதரை பொட்டலங்களை அவிழ்த்து ஒரு பிடி பிடித்துவிட்டு எழுந்தனர்.

மீண்டும் சிற்பங்களைச் சுற்றி சுற்றி வந்து அணு அணுவாக ரசித்து, தொட்டுப் பார்த்து மகிழ்ந்துவிட்டு, அரைமனதோடு தான் கிளம்பினர்.

கால்டாக்சியில் ஏறி அமர்ந்து, முட்டுக்காட்டிற்குள் வந்தபோது மாலை மணி ஐந்தாகி இருந்தது.

"கமலி! எனக்கு தண்ணின்னாலே பயம்! வயசுப் பசங்க நீங்க ஜாலியா போயிட்டு வாங்க. பாப்பா பத்திரம்! ஜாக்கிரதை. நான் இதோ இந்த பெஞ்சிலே உட்கார்ந்து உங்களை வேடிக்கை பார்த்துட்டு இருக்கேன்."

அம்மா தேவகி பிடிவாதமாக வர மறுத்துவிட்டாள்.

மற்றவர்கள் அமர்ந்ததும், படகு தண்ணீரைக் கிழித்துக் கொண்டு வேகமாய் நகரத் தொடங்கியது.

விசாலி, சகலத்தையும் மறந்து குழந்தை தீபிகாவுடன் போட்டி போட்டுக்கொண்டு குதூகலித்தாள். அதைக் கண்டு கமலியின் மனம் லேசாகி சிறகடித்தது.

காற்றில் படபடத்த துப்பட்டாவின் இரு முனைகளையும் ஒன்றுசேர்த்து முடிச்சிட்டுக்கொண்டு, நாலாபுறமும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள், கமலி. லயித்துப்போனாள்.

கலகலவென்று பெண்கள் சிரிக்கும் சத்தம் கேட்டதும்... சிந்தனை கலைந்து திரும்பிப் பார்த்தாள்.

பின்னால் சீறிப் பாய்ந்துவந்த படகில்... அரைகுறையான நாகரீக உடையில் இரு இளம்பெண்கள் அமர்ந்திருக்க, நடுநாயக மாக உட்கார்ந்து அவர்களது தோள்களில் தனது



கைகளைப் போட்டிருந்த் இளைஞனின் மீது கமலியின் பார்வை வெறுப்புடன் படிந்தது.

'பகீர்' என்ற உணர்வில் பதறிப்போய் எழுந்தாள்.

கண்களைக் கசக்கிக்கொண்டு மீண்டும் அவனை உற்றுப் பார்த்தாள்.

'கவுசிக்? ஆம், அவனேதான்!'

'என்னிடம் மும்பைக்குச் செல்வதாக நாடகமாடிவிட்டு... இங்கே கவர்ச்சிப் பெண்களுடன் சரசமாடுகிறானே? இதுதான் இவனது சுயரூபமா?'

'என்னிடம் முகமூடி போட்டுக்கொண்டு நடித்திருக்கிறான்!

கடவுளாகப் பார்த்து இன்று என்னை இங்கே வரவழைத்து, இவனது முகத்திரையைக் கிழித்துவிட்டார்!'

கண்ணீர் பொங்கி உடைப்பெடுத்தது.

'அலுவலகத்தில் அவ்வளவு கண்ணியமாக நடந்துகொள்ப வனா இவன்?'

மனம் எரிமலையாய் குமுறியது.

உலகமே தட்டாமாலையாக சுழல்வது போலிருந்தது.

காதல் அரும்பு மலர்ந்த இதயத்தை... யாரோ வெடிகுண்டு வைத்து தகர்த்தது போலிருந்தது.

கண்கள் இருள... லேசாகத் தள்ளாடினாள், கமலி.

"ஐயோ அக்கா! என்னாச்சு? தடுமாறி தண்ணியில விழுந்திடப் போறே! என்னத்துக்கு எழுந்து நிக்கிறே?" பதறியபடியே தம்பி பாபு, அவளது கரத்தை இறுகப் பற்றினான்.

அவளது பார்வை சென்ற திக்கிலேயே பயணித்தவன், அதிர்ச்சியில் உறைந்தான்.

"அ...அக்கா! இ...இவரு கவுசிக் அத்தான். மும்பைக்குப் போயிட்டதா சொன்னே?"

"அட... ஆமாம்! கவுசிக் மாப்பிள்ளையேதான்! இதோ...

ந...நம்மை நல்லா ஏறிட்டுப் பார்த்துட்டு... அறிமுகமே இல்லாதவரு மாதிரி அலட்சியமா போறாரு! கமலி... என்னடி, இது?

பணக்காரரா இருந்தாலும், ரொம்ப நேர்மையானவரு, கண்ணியமானவருன்னு நினைச்சோமே? மாப்பிள்ளை நடந்துக்கிறதைப் பார்த்தா... உங்க அத்தானையே மிஞ்சிடுவாரு போலிருக்கே!" தழுதழுத்தாள், விசாலி.

அதுவரை கமலியின் மனதில் பொங்கிய மகிழ்ச்சி, சட்டென்று நீர்க்குமிழியாய் உடைந்துபோனது.

அதிர்ச்சியில் உறைந்து சில்லிட்டுப்போயிருந்த அவளது கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டாள், விசாலி.

"இ...இனிமே அவரை நம்ம வீட்டு மாப்பிள்ளைன்னு சொல்லாதேக்கா! நம்பிக்கை துரோகம் பண்ணி, நெஞ்சுல நெருப்பை அள்ளிக் கொட்டினவருக்கும், எனக்கும் இனிமே எந்த சம்பந்தமும் இல்லை. பாபு! என்னால் தாங்க முடியலைடா... படகைத் திருப்பச் சொல்லு!" குரலில் உறுதி தொனிக்கப் பேசினாள், கமலி.

## 18

கட்டிலில் குப்புறப்படுத்து முதுகு குலுங்க குமுறி அழுதாள், கமலி.

அதிர்ச்சியை ஜீரணிக்கவும் முடியாமல், அவளைத் தேற்றவும் முடியாமல் இடிந்துபோய் ஆளுக்கொரு மூலையில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார், அப்பா நடேசன்.

வழக்கம் போல் வீட்டில் எது நடந்தாலும் தனக்கும் அதற்கும் சம்மந்தமே இல்லை என்பது போல் விட்டேற்றியாக





"எதுக்காக வயசுக்கு வந்த பையனை இந்த அடி அடிக்கிறீங்க?"

"வயசுக்கு வராத பொண்ணுங்களை 'சைட்' அடிக்கிறான்!"

—சி. பழனிசாமி, தாம்பரம்.



"மன்னா! அண்டைநாட்டு மன்னன் அழைப்பு விடுத்து இருக்கிறான்."

"விருந்துக்கு என்றால் இப்போதே புறப்படலாம். போருக்கு என்றால், யோசிக்கவேண்டும்."

—ரா.க. லீலாவிஜய், மதுரை.

"என் கணவர் மிகவும் பலகீனமாக இருக்கிறார், டாக்டர்."

"எப்படி சொல்றீங்க?"

"கோபத்தில் ஒரு அடிதான் அடிச்சேன் மனுஷன் 'பொத்'துன்னு விழுந்துட்டார்."

—அரவக்குறிச்சிப்பட்டி எம். அசோக்ராஜா.



# இதயம் பேசுகிறது

நாவலைப் படித்து உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.**

## தென்றல் நாவல்

'வீசும் தென்றலே வீசு' கதையில் வித்யாவின் காதலனாக வரும் பிரபுவை ஒரு பொறுப்பான கதாபாத்திரமாக உருவாக்கி இருப்பது வித்தியாசமானது. பாரதி குற்றமற்றவள் என்பதை விளக்க வித்யாவையே உதாரணமாகக் காட்டுவது அருமை,

*ரா. ராமகிருஷ்ணன், சேலம்.*

அம்மா- பொண்ணு கதை போகப்போக 'அம்மம்மா' என்று வியக்கும்படி இருந்தது.

***ஆ.ஜி. காயத்ரி, இசையன்விளை.***

வித்தியாசமான காதல் கதையை புயல் வேக நடையில் கொண்டு சென்று அசத்திவிட்டார் அருணா நந்தினி.

*த. சத்தியநாராயணன்,*
*அயன்புரம்.*

காதல் மென்மையோடு முடித்து இருந்தது அருமை. இரு குறுங்கதைகளும், கவிதைகளும் அற்புதம்.

***ஏரியூர் கி. கார்த்திக்.***

இனிய தென்றலாய் இதயத்தைத் தழுவியது. பாரதியின் பாத்திரப்படைப்பு மிக அற்புதம். "மனப்பொருத்தம்" சிறுகதை மிகவும் வித்தியாசமான கதைக்களத்துடன் கலக்கலாக இருந்தது.

***சு.மு. சுரேஷ், அரைக்கால்கரை.***

வித்தியாசமான படைப்பு. தென்றலாய் தவழ்ந்து, புயலாய் உருமாறி தென்றலாய் கரையைக் கடந்தது.

*சுந்தரி முருகன், சாத்தான்குளம்.*

விறுவிறுப்பு, வித்தியாசம் கொண்ட புதுமை நாவல்.

*கா. அப்துல்ரகுமான்,*
*குட்டுப்பட்டி.*

தாய் பாரதியின் சூழ்நிலையை புரிந்துகொள்ளாத மகள் திவ்யா, புயலாக இருந்து தென்றலாய் மாறியது மனதிற்கு மகிழ்வைத் தந்தது.

*ஜி. மனோகரன்,*
*கச்சிராயபாளையம்.*

இனிய இல்லம் அமைய சொர்க்கம் எங்குமில்லை. அது, நம்மிடம்தான் இருக்கிறது என்று தென்றலாக வீசியதற்கு வாழ்த்துகள்.

*ஆ.ம. சாந்தா, பெங்களூர்.*

தாய்க்கும், மகளுக்கும் இடையே ஏற்படும் வித்தியாசமான போக்குகளை படிக்கும்போது உண்மையில் நடப்பதைப் போலவே இருந்தது.

***ஆர். பிருந்தா, மதுரை.***

துணுக்குகள் எல்லாம் அட்டகாசம்... படிக்க சுவையாக உள்ளது. இன்னும் கொஞ்சம் வெளியிடலாமே...!

***குலசை க.மீ. தஜ்முதீன்.***



அமர்ந்திருந்தார்.

"அடுத்து என்ன செய்யப்போறோம்னு முடிவெடுக்கிறதை விட்டுட்டு... இடிஞ்சு உட்கார்ந்திருந்தா சரியாயிடுமா? தேவகி! நான் சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டாகணும். மறந்துட்டியா? சீக்கிரம் சோத்தைப் போடு!"

இதைக்கேட்டதும் விசாலி வேதனையுடன் முகம் சுளித்தாள். பொங்கிவந்த ஆத்திரத்தை அடக்கியவண்ணம், மெல்ல எழுந்துகொள்ள முற்பட்டாள், தேவகி.

கண்ணீரைத் துடைத்தபடியே விருட்டென்று வெளியில் வந்தாள், கமலி.

"அப்பாவுக்கு நான் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்ம்மா! அவர் சொல்றது சரிதானே? எதுக்கு எல்லோரும் இடிஞ்சுபோய் உட்கார்ந்திருக்கணும்?

நான் நாளைக்கு காலையில கவுசிக்கின் அப்பாவை சந்திச்சுப் பேசப் போறேன். இந்த விஷயத்துக்கு முடிவா முற்றுப்புள்ளி வைச்சுட்டு வந்துடறேன்.

நடந்துபோனதை நெனச்சு யாரும் கலங்க வேணாம். எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சுட்டு சகஜமா இருக்கலாம். கல்யாண பேச்சை மட்டும் இனிமே எடுக்க வேணாம்! என்னடா தீபு குட்டி? சித்தியை அப்படி பார்க்கிறே? உன் முகத்தைக் கண்டாலே எல்லாக் கவலையும் பறந்துடுதே செல்லம்!"

குழந்தையை வாரியணைத்து முத்தமிட்டபடியே அடுக்களைக்குள் புகுந்தாள், கமலி!

சொன்னபடியே காலை ஆறரைக்கு தயாராகிவிட்டாள். அன்று விஷ்ணுவர்மன் பரிசளித்த பட்டுச்சேலையை மறக்காமல் எடுத்துக்கொண்டாள்.

"அப்பாவைப் பார்த்து இதைக் கொடுத்துட்டு, பேசிட்டு அப்படியே ஆபீஸ் போயிடுறேன்ம்மா!"

"எடுத்தேன் கவிழ்த்தேன்னு முடிவு பண்ணாதேம்மா! இன்னமும் அந்த தம்பி மேல எனக்கு நம்பிக்கை இருக்கும்மா-

அவரைக் கூப்பிட்டு வச்சு, உட்கார்ந்து பேசி முடிவு எடுக்கலாமே கமலி."

"கண்ணால நல்லா பார்த்தாச்சு! அவரோட குணம் பட்டவர்த்தனமா தெரிஞ்சுபோச்சு! இன்னமும் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கும்மா?

பிளீஸ்ம்மா! கண்ட பெண்களோட சுத்தறவனை நான் சகிச்சுக்க முடியாது. என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. விட்டுரு."

"குட்மார்னிங்ப்பா!" கமலியின் குரலைக் கேட்டதும், வாசித்துக்கொண்டிருந்த 'தினத்தந்தி'யோடு நிமிர்ந்தார், விஷ்ணுவர்மன்.

"வாம்மா! நானே உனக்கு போன் பண்ணி இங்கே வரச்சொல்லலாம்னு நெனச்சுகிட்டிருந்தேன். நீயே வந்துட்டே! உட்காரும்மா."

"அ...அப்பா! இந்தக் கல்யாணம் நடக்காது! கடவுள் புண்ணியத்துல கவுசிக்கோட சுயரூபம் என்னன்னு எனக்கு தெரிஞ்சுபோச்சு! இனி அவருக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்தாங்க, நீங்க கொடுத்த பட்டுச்சேலை. இது விஷயமா யார் என்ன சமாதானம் செய்தாலும் நான் ஒப்புக்க மாட்டேன். வர்றேன்ப்பா! சாரி... போறேன்ப்பா."

"கமலி! அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துடாதே! கவுசிக் மும்பையிலேருந்து இன்னமும் வரலே. அவன் வர்றதுக்குள்ளே திடீர்னு என்ன பிரச்சினை வந்துச்சு? புரியும்படியா சொல்லும்மா!"

"அவர் போனது மும்பையா? முட்டுக்காடான்னு உங்க பிள்ளைகிட்டயே கேளுங்க. விவரமா சொல்வாரு!"

ஓட்டமும், நடையுமாக அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

முன்னறை சோபாவில் அமர்ந்து காப்பி பருகிக்கொண்டு இருந்த மரகதத்தின் விழிகளில் அவள் சிக்கினாள்.



நிமிர்ந்து ஏறிட்டுக்கூடப் பாராமல் வெளியேறிய அழகான இளம்பெண்ணைக் கண்டு திகைத்தாள், மரகதம்.

"ஏய்! யாருடி இவ? அவர் அறைக்கு வந்துட்டுப் போறா... இவ்ளோ உரிமையா?" வேலைக்காரியிடம் துருவி விசாரித்தாள்.

"இவங்க கமலி! நம்ம கவுசிக் சார் கட்டிக்கப்போற பொண்ணு! பெரிய முதலாளிக்கு அடிக்கடி மருந்து- மாத்திரைக் கொடுத்து, நடைப்பயிற்சி பழகவும் வச்சாங்களே?"

"ஏன்டி இதை என்கிட்ட சொல்லாம மறைச்சே? நான் இல்லாத நேரத்துல அடிக்கடி வந்துருக்கா?" பளாரென்று அறைந்தாள், மரகதம்.

"மன்னிச்சிருங்கம்மா! பெரிய முதலாளி உங்ககிட்ட சொல்லி இருப்பாருன்னு நெனைச்சேன்!"

'விஷயம் இவ்ளோ தூரத்துக்கு முத்திப்போச்சா? இந்த சண்டாளி உரிமையா வீட்டுக்குள்ள வந்து தினமும் கிழவருக்கு பயிற்சி கொடுத்திருக்கா? தாலி கட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்துட்டாள்னா நம் கதி என்னாகும்? கூடாது! இதற்கு உடனடியாக முடிவுகட்டணும்' மனதிற்குள் கறுவியபடி கண்களை இடுக்கிக்கொண்டு யோசித்தாள்.

அந்தக் கொடூரமான திட்டம் உருவானது!

"என்ன கமலி இது? உன்னோட செல்லுக்கு போன் பண்ணினா 'ரிங்' போயிட்டே இருக்கு! 'இந்த கல்யாணத்தை நிறுத்திடுங்க'ன்னு அப்பாகிட்டே குண்டைத் தூக்கிப் போட்டிருக்கே?

நான் என்ன தப்பு பண்ணினேன்? உன்னோட திடீர் மனமாற்றத்துக்கு என்ன காரணம்? மும்பை பயணம் வெற்றிகரமா முடிஞ்சிருக்கு. ஆனா, என்னோட வாழ்க்கை தோல்வியில் முடிஞ்சிடுமோன்னு பரிதவிக்கிறேன். சொல்லு, கமலி?" ஊசிப் பட்டாசாய் பொரிந்தான், கவுசிக்.

"உங்க மும்பை கதையை நம்புறதுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை. என்ன காரணம்னு உங்க மனசாட்சியையே கேட்டுப் பாருங்க… ஒண்ணுமே தெரியாதவர் மாதிரி ரொம்ப அழகா நடிக்கிறீங்க!

பிளீஸ்… என்னை விட்டுருங்க… இனிமே நமக்குள்ளே எதுவுமே இல்லை. நீங்க என்னோட முதலாளி! நான் உங்க தொழிலாளி, அவ்ளோதான்!

இதுக்குமேல இந்த விஷயத்தைப் பத்தி நீங்க ஒரு வார்த்தை பேசினால்கூட மறுநிமிடமே இந்த வேலைக்கு முழுக்கு போட்டுட்டு நான் போயிட்டே இருப்பேன்.

சரியா… என்னோட அடுத்த 'பிராஜெக்ட்' அறிக்கை தயாரா இருக்கு சார்! பைலை எடுத்துட்டு வரட்டுமா சார்?"

'சார்' என்ற வார்த்தையை அழுத்தம் திருத்தமாக உச்சரித்தாள், கமலி.

'சார்' என்ற வார்த்தையைக் கேட்டதும், குத்திட்டியால் இதயத்தில் சொருகி இழுத்ததைப் போலதுடித்துப்போனான்.

'என்ன ஆயிற்று இவளுக்கு? மும்பைக்கு கிளம்புமுன்… கடற்கரையில் 'என் உயிர் உள்ளவரை உங்களைவிட்டு பிரியவே மாட்டேன்' என்றாளே?'

'நான் அவளை ஆசையாய் முத்தமிட்டு அணைத்தபோது மறுப்பேதும் சொல்லாமல், முகம் பூரிக்க அணைப்புக்குள் அடங்கினாளே?'

'இடைப்பட்ட நேரத்தில் என்ன நடந்துவிட்டது?'

'ஒரு தவறும் செய்யாத எனக்கு பெரிய தண்டனையைக் கொடுத்துவிட்டாளே?' ஆடிப்போய்விட்டான், கவுசிக்.

"பிராஜெக்ட் அறிக்கையைப் பார்க்கிற மனநிலையில் நான் இல்லை மிஸ் கமலி! எனக்கு மனசு சரியில்லை… அப்புறமா பார்த்துக்கலாம்."

"ஓகே சார்!" என்றுவிட்டு நகரத் தொடங்கியவளை, அவனது



குரல் இடைமறித்தது.

"மிஸ் கமலி! தூக்கு தண்டனை கைதிக்குக்கூட மனசுல உள்ளதை வெளிப்படுத்தறதுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனா, எனக்கு என்ன தப்பு செய்தோம்னே தெரியலை. எதுக்கு இவ்ளோ பெரிய தண்டனை? என்ன காரணம்னு தெரிஞ்சாதானே என் தரப்பு நியாயத்தை நான் எடுத்துச்சொல்ல முடியும்?"

குரலில் பரிதாபம் இழையோட… கவுசிக் ஏகத்திற்கும் கெஞ்சினான்.

"ஆபீஸ் சம்பந்தமா ஆயிரம் கேள்விகளை நீங்க கேட்டாலும் பதில் சொல்ல வேண்டியது என் கடமை சார்! ஆனா, இது என்னோட தனிப்பட்ட விவகாரம்! இருந்தாலும் சொல்றேன். நான் கண்ணால் எல்லாத்தையும் பார்த்துட்டேன். நாங்க பார்த்ததும் நீங்களும் அலட்சியமா திரும்பிப் போனீங்க…

சார்! பிளீஸ்… நம்பிக்கை துரோகம் செய்துட்டு ஒண்ணுமே தெரியாத மாதிரி நடிக்கிறவரு முன்னாடி நிக்கவே எனக்கு பிடிக்கலை! இதைவிட வேறு நரகம் இருக்கமுடியாது சார்."

விருட்டென்று வெளியேறிவிட்டாள், கமலி.

## 19

"என்னப்பா, இது? கண்ணெல்லாம் சிவந்து வீங்கிப் போயிருக்கு? உடம்பு சரியில்லையா கவுசிக்?" விஷ்ணுவர்மன் அவனது நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். சில்லென்று இருந்தது!

"இரவெல்லாம் தூங்கலைப்பா! மளமளன்னு வேலைகளை முடிக்கணும்னு உத்வேகத்தோடு வந்தேன். வாழ்க்கையில பெரிய இடி விழுந்திருச்சேப்பா! ஆபீசுக்குப் போகவே பிடிக்கலை! அதான் 'சேவிங்'கூட பண்ணாம உட்கார்ந்திருக்கேன்."

"ஏதோ கெட்ட நேரம் நம்மை பிடிச்சு ஆட்டுது! எல்லாம்

சீக்கிரமா சரியாயிடும். நம்பிக்கையோடு இரு, கவுசிக்! உங்கம்மா தெய்வமா இருந்து எல்லாத்தையும் நல்லபடியா நடத்தி வைப்பா... பாரேன்!

இந்தக் கமலியை நான் புத்திசாலி பொண்ணுன்னு நினைச்சுட்டு இருந்தேன். ஆனா, அவ சுத்த அரைவேக்காடா இருக்காளே? என்ன ஏதுன்னு விவரமா எதையும் சொல்லமாட்டேங்கிறா...

நாம ஏதாவது சொல்லப்போனா அதையும் காதுலே வாங்க மாட்டேங்கிறா... அன்னிக்கு என்னிடம், 'உங்க புள்ளைகிட்ட மும்பையா? முட்டுக்காடான்னு கேளுங்க' அப்படின்னா... எனக்கு தலையும் புரியலை... வாலும் புரியலை!"

"என்கிட்டேயும் பொடி வச்சுத்தான் பேசினா... நம்பிக்கை துரோகம்கிறா, நடிக்கிறேன்கிறா... கண்ணால நல்லா பார்த்துட்டேன் அப்படிங்கிறா... விவரமா விசாரிச்சாக்க அவளுக்கு கோபம் பொத்துக்கிட்டு வந்துடுது. இன்னும் கொஞ்சம் அழுத்திக் கேட்டா... அவ்வளவுதான்! வேலையை விட்டுட்டுப் போயிடுவேன்னு பயமுறுத்துறா! அவ செய்யக்கூடியவள்தான்!

இந்த மட்டுமாவது அவ முகத்தை அடிக்கடி பார்த்துட்டிருக்கிறதையும் இழந்துடுவேன்னு பயந்து அவளை வற்புறுத்தலை!

தன் மனசிலேருந்து என்னை மொத்தமா தூக்கி எறிஞ்சுட்டாளேப்பா! அவ எனக்கு கிடைக்கலைன்னா... நான் கொஞ்சம் கொஞ்சமா செத்துடுவேன்ப்பா!"

"முட்டாள் மாதிரி பேசாதே கவுசிக்! 'உங்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை... உங்களைத் தூக்கி எறிஞ்சுட்டேன்' அப்படின்னு அவ வீராவேசமா சொல்லி இருக்கலாம்! ஆனா, இன்னமும் அவ மனசுல நீ இருக்கே. உன் மேல அன்பு இருக்கு. கம்பெனி வளர்ச்சியில அக்கறை இருக்கிறதாலதான் இன்னமும் வேலைக்கு வர்றா... உன்னை உண்மையாகவே தூக்கி எறிஞ்சிருந்தா, கம்பெனி வாசற்படியை அவ மிதிச்சி இருக்கமாட்டா. நடுவுலே ஏதோ குழப்பம் நடந்திருக்கு! அது என்னன்னு கண்டுபிடிச்சு அவளோட சந்தேகத்தை நிவர்த்தி



# அரும்பு + குறும்பு




எம்.ஜி.ஆர்.: (மகாகவி பாரதியாரிடம்) "உங்க தொப்பியை நான் போட்டுக்கிறேன்... என் தொப்பியை நீங்க போட்டுக்கங்க. எப்படி இருக்கும்னு பார்க்கலாம்?"

—விஜயா கண்ணன்

பண்ணிட்டா எல்லாம் சரியாயிடும்!"

"நான் நம்பிக்கை துரோகி இல்லைன்னு நிரூபிக்கணும், எத்தனை நாளானாலும் சரி, அதுவரைக்கும் நான் ஆபீஸ் பக்கம் தலை வைச்சுப் படுக்கமாட்டேன்."

"சரிப்பா... உன் இஷ்டம்! காலையில எழுந்ததுமே கமலியோட செல்லுக்கு முயற்சி பண்ணினேன். நம்பரைப் பார்த்துட்டு பேசப் பிடிக்காம கம்முன்னு இருந்துட்டா. இனி அவகிட்டே பேசி பயன் இல்லை. அவங்க வீட்டுலே உள்ளவங்ககிட்டதான் இதுபத்தி நிதானமா பேசி விவரம் தெரிஞ்சுக்கணும்."

"அத்தைகிட்டே பேசிப் பார்க்கட்டுமாப்பா?"

"கொஞ்சம் பொறு கவுசிக்! இந்த விஷயத்தை இன்னும் ரெண்டு நாளைக்கு ஆறப்போடு... கொந்தளிப்பு அடங்கி ஒரு நிதானத்துக்கு வந்தாதான் நாம பேசுறது எடுபடும். என்ன சொல்றே?"

"ச... சரிப்பா."

"கமலி வர்ற இடத்துக்கு நீ போக வேணாம். மத்த நிறுவனங்களைப் போய் கவனி! வீட்டிலேயே அடைஞ்சு கிடக்காதே மனசு வேதனைப்படும். சரியா?"

"சரிப்பா."

அவர் கூறியது போல் மனதை பலாத்காரமாக திசை திருப்பினான்.

ஆனால், கமலியின் எண்ணம்தான் சுற்றி வந்து அவனை வதைத்தது.

நிமிடங்கள் நரகமாய் நகர்ந்தன.

மறுநாளிலிருந்து மற்ற நிறுவனங்களைக்கூட கவனிக்காமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான், கவுசிக்.

"**நி**றைய ஆர்டர்ஸ் வந்திருக்கு! வர்மா சார் கையெழுத்து போட்டாதான் பைல்களை நகர்த்த முடியும். வேலைகள் தேங்கிப்போகுதே... மூணு நாளா ஆபீஸ் பக்கமே வராம



மெத்தனமா இருக்காரே? செல்லை வேறு 'ஆப்' பண்ணி வச்சிருக்காரு."

மானேஜர் வரதராஜன் வாய்விட்டு புலம்பியபோது, கமலிக்கு 'சுருக்' என்று குத்தியது.

'உற்பத்தி பாதிக்கப்படும், கம்பெனிக்கு பெருத்த நட்டம் ஏற்படுமே? என் மனதைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்று இவ்வாறு நடந்துகொள்கிறானா?'

அவளது மனம் பாறாங்கல்லாய் கனத்தது.

அவளுக்கு வீட்டிலும் நிம்மதியில்லை.

"முகூர்த்த நாள் குறிக்கிற வரைக்கும் வந்துட்டு... திடீர்னு கல்யாணம் நின்னுபோச்சுன்னா... நாலு பேர் நாலு விதமா பேசுவாங்களே?"

அம்மா தேவகி அடிக்கடி அழுது புலம்பி சுருண்டு படுத்துக் கொண்டாள்.

"அவசரப்பட்டு முடிவெடுத்துட்டியோன்னு தோணுது, கமலி. ஒரு தடவை கவுசிக் மாப்பிள்ளைகிட்ட நேர்லே பேசி..."

"அக்கா... நிறுத்து போதும்! என்னைக் கொஞ்சம் நிம்மதியா இருக்கவிடேன்."

கவுசிக்கின் பேச்செடுத்தாலே கமலி எரிந்து விழுந்தாள்.

ஆனால், உள்ளுக்குள் அனலிடைப்பட்ட புழுவாய் தவித்துத்தான் போனாள்.

அவனை மறக்க வேண்டும் என்று எவ்வளவுதான் முயன்றாலும், சண்டிக் குதிரையாய் மனம் கவுசிக்கிடமே போய் நின்றது.

தனது பலவீனம் வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழுந்து... அவளை அனைவரிடமும் கோபப்பட வைத்தது என்பதுதான் உண்மை.

இரவு முழுவதும் தூங்காமல், மற்றவர் அறியாவண்ணம் மவுனமாக கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்ததாலோ என்னவோ... கமலியின் முகமே வீங்கிப்போயிருந்தது.

தலையை இரண்டாகப் பிளந்து, உள்ளே பாறாங்கல்லை வைத்து தைத்தது போல் கனத்து வலித்தது.

"இன்னிக்கு என்னால் ஆபீசுக்குப் போகமுடியாதும்மா. தலைவலி தாங்கலை. ஓய்வு எடுத்துக்கிறேன்" சன்னலோரத்தில் முனகிவிட்டு படுத்துக்கொண்டான்.

காலை பதினொரு மணிவாக்கில் அவனது செல் அலறியது. "உ. கமலி! நான் மல்லிகா பேசறேன்! ஒரு துயர செய்தி- நம்ம வர்மா சாரோட கார் மேல ஒரு லாரி மோதி விபத்து ஆயிடுச்சு."

"ஐயோ- அவருக்கு பயப்படும்படியா ஒண்ணுமில்லையே?" அவளது இதயத்துடிப்பு திகிலில் எகிறியது.

"சாரி கமலி! வர்மா சார் நம்மை விட்டுட்டுப் போயிட்டார்."

"ஐயோ கவுசிக்! என்னை தவிக்க விட்டுட்டுப் போயிட்டீங்களே?" பெருங்குரலில் அலறிவிட்டாள், கமலி.

அவளது அலறலில் அந்த வீடே அதிர்ந்தது.

## 20

**"கவுசிக்!** ஐயோ கவுசிக்! உங்களைப் பார்க்கவே பிடிக்கலைன்னு சொன்னேனே? உங்க மனசை நான் காயப்படுத்திட்டேனே? அதே வேதனையில கார் ஓட்டினதால விபத்துல மாட்டி மொத்தமா என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களே?" கல் மனதும் கரையும் வண்ணம் கதறித் துடித்தாள் கமலி.

"யார் மனசையும் இதுவரை நான் நோகடிச்சதே இல்லையே. நீங்க எனக்கு நம்பிக்கை துரோகம் செய்ததால்தானே நான் கடுமையா பேசினேன்? அதுக்கு இவ்வளோ பெரிய தண்டனையா?"

அவள் உருகுவதைக் கேட்டு தேவகியும், விசாலியும் குமுறி அழுதனர்.

"அக்கா! அவரை நம்பிக்கை துரோகின்னு சொல்லாதே! அது மகா பாவம்! அன்னைக்கி முட்டுக்காட்டுலே நாம பார்த்தோமே- அது கவுசிக் அத்தான் இல்லை- அது அவரோட தம்பி தீபக் வர்மாவாம்!"

"இது- இது உனக்கு எப்படி தெரியும், பாபு?"

"நேத்து நான் காலேஜ்விட்டு வரும்போது கவுசிக் அத்தான் என்னைப் பார்த்து பேசினாரு- என்ன ஏதுன்னு விசாரிச்சாரு. நான் நடந்ததை சொன்னேன்.

'நீங்க பார்த்தது தீபக் வர்மாவை. நானும், அவனும் அச்சு அசலா ஒரே சாயல்லே இருப்போம். ரொம்ப நெருங்கிப் பழகினவங்களுக்குத்தான் வித்தியாசம் தெரியும்'னு சொன்னாரு!

கமலிகிட்ட நானே நேர்லே இந்த விஷயத்தைப் பத்தி பேசிக்கிறேன்'னு என்கிட்ட சொன்னாருக்கா- அதுக்குள்ளே அவருக்கு இப்படியொரு கதி ஏற்படும்னு நான் நெனச்சுக்கூட பார்க்கலைக்கா" தேம்பி அழுதான், பாபு.

முகத்தில் ஓங்கி அறைந்துகொண்டு அழுதாள், கமலி. "கண்ணால் பார்த்தது பொய்- காதால் கேட்டது பொய்! தீர விசாரிக்கணும்னு பெரியவங்க சொல்வாங்களே? அவசரப்பட்டு அவரை நான் சந்தேகப்பட்டுட்டேனே?"

'நான் ஒரு தப்பும் பண்ணலை! எனக்கு ஏன் இவ்வளோ பெரிய தண்டனை தந்துட்டே கமலி?'ன்னு கேட்டாரே?

அநியாயமா ஒரு நேர்மையான மனிதனை பழிசுமத்திட்டேனே! ஐயோ! நானே என் வாழ்க்கையை அழிச்சுட்டேனே?

நான் மகா பாவி! கவுசிக் விபத்துல சாகலை- நான்தான் அவரை நோகடிச்சு கொன்னுட்டேன்."

"கடைசியா அவர் முகத்தையாவது பார்க்கணும். அவரோட காலைப் பிடிச்சு கதறணும்... அப்பாவோட கால்லே விழுந்து பாவமன்னிப்பு கேட்டுட்டு... நானும் கவுசிக் போன இடத்துக்கே போகவேண்டியதுதான்!" தட்டுத் தடுமாறி எழுந்து ஓடத் தொடங்கினாள், கமலி.

மரகதத்தின் செல்போன் சிணுங்கியது.

"அலோ! நான் கபாலி பேசுறேன். சாக்லேட் நிற கார் நம் குறியிலிருந்து தப்பலை மேடம்!"

"ஒரு வணிக வளாகத்தின் வாசலில் அரை மணி நேரமா குறுக்கும் நெடுக்குமா நடந்துகிட்டே உன்னோட போனுக்கா காத்திட்டிருக்கேன். இவ்ளோ நேரமா?"

"சாரி மேடம்! 'சிக்னல்' கிடைக்கலை! ஆள் அந்த இடத்திலேயே போயிட்டான். இனி அத்தனை சொத்துக்கும் ஏகபோக எஜமானி நீங்கதான்... இந்த ஏழையை மறந்திடாதீங்க மேடம்."

"சரி சரி... சீக்கிரம் போனை வை! அமளி துமளி அடங்குற வரைக்கும் யார் கண்ணிலும் படாம இரு... கண்காணாத இடத்துக்குப் போயிட்டு... மூணு, நாலு மாசம் கழிச்சு வா."

சட்டென்று 'செல்'லை அணைத்தாள், மரகதம்.

முகத்தில் பூத்திருந்த வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக்கொண்டாள்.

"இனி எனக்கும், என் மகனுக்கும் ராஜயோகம்தான்! இருந்த ஒரே தடையை அகற்றிவிட்டேன். அப்பாடா!"

நிம்மதி பெருமூச்சுவிட்டாள்.

மனதில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

மீண்டும் அவளது 'செல்போன' அலறியது.

"அம்மா... அம்மா... நம்ம கவுசிக் சாரோட கார் விபத்தில் சிக்கிடுச்சாம்! கவுசிக் சார் இறந்துட்டாராம்... போலீஸ் நிலையத்திலேருந்து போன் வந்துச்சு. பெரிய முதலாளி கதறிக்கிட்டே போய் இருக்காரும்மா" வேலைக்காரி தேம்பி



அழுதுகொண்டே பேசினாள்.

பொங்கிவந்த சிரிப்பை அடக்கியபடி "அய்யய்யோ... கவுசிக்" என்று பொய்யாக அலறினாள், மரகதம்.

**க**வுசிக் நிறுவனங்களில் பணி செய்த அத்தனை ஊழியர்களும் ஆஸ்பத்திரி வளாகத்தில் குழுமி இருந்தனர்.

கூட்டத்தில் நீந்தியபடியே ஆஸ்பத்திரி வராந்தாவில் ஒடிந்துபோய் அமர்ந்திருந்த விஷ்ணுவர்மனின் எதிரில் போய் நின்னு பெருங்குரலில் கதறினாள், கமலி.

"வீணாக சந்தேகப்பட்டதுக்கு பெரிய தண்டனையை எனக்கு கொடுத்துட்டாரேப்பா?"

"சீக்கிரம் போயிடப்போறோம்னு தெரிஞ்சுதான் என்மேல பாசத்தை ஒரேயடியா கொட்டிட்டான், கவுசிக்" கேவினார், விஷ்ணுவர்மன்.

"ஐயோ... என்னாச்சுங்க நம்ம புள்ளைக்கு? அவனுக்கா இந்த கதி? என்னால் தாங்க முடியலையே?" வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்து, கணவரின் தோளில் கை வைத்தாள், மரகதம்.


நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டே பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள்.

கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு இறுகின முகத்துடன் சோகமாய் வந்தவனைக் கண்டதும் ஓடிச்சென்று கையைப் பிடித்துக்கொண்டாள்.

"தீபக்! இப்பதான் வர்றியா? உங்க அண்ணன் கவுசிக் நம்மை ஒரேயடியா விட்டுட்டு இல்ல... இல்ல... நீ..." விழிகள் விரிய உற்றுப் பார்த்தாள், மரகதம்.

"சித்தி... நான் கவுசிக்! மனசு சரியில்லாததால் கடற்கரையில் காலாற தூரம் நடந்து, மணல்லே மணிக்கணக்கா உட்கார்ந்துட்டேன்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் வீட்டுக்குப் போனேன். வேலைக்காரம்மா அழுதுகிட்டிருந்தாங்க. தீ...தீபக் இன்னிக்குப்





## சினிமா மோகத்தால் விபரீதம்!

தாயும், மகளும் திரைப்படம் பார்க்கச் சென்றிருந்தனர். திரையரங்கில் தீப்பற்றியது.

மகள், "அம்மா... தீ... தீ... என்றாள். எழுந்து, தாயின் சேலையைப் பற்றி இழுத்தாள், "போய்விடலாம்... வா" என்றாள்.

தாய் சொன்னாள் "சும்மா இருடி, இது கலர் படம். காசை கொடுத்துட்டு சும்மா போகணுமா?" என்றாள்.

விளைவு- மகள் தப்பிப் போய்விட்டாள். தாய், தீயில் எரிந்து போனாள். இது, 1979-ம் ஆண்டு, தூத்துக்குடியில் நடந்தது.

-ஆர்.கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

---

பார்த்து என் காரை எடுத்துட்டுப்போயி..."

"அய்யய்யோ தீபக்... உன் உயிருக்கு நானே உலை வச்சுட்டேனேடா தீபக்... என் கண்ணா..." அலறியபடி மூர்ச்சித்தாள், மரகதம்.

கவுசிக்கும், விஷ்ணுவர்மனும் அர்த்த பாவனையில் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

"கவுசிக்! இவ மேல கொஞ்ச நாளாகவே எனக்கு சந்தேகம் இருந்துச்சுப்பா... வினை விதைச்சா வினையை அறுக்கணும் இல்லையா? அதான்! அவ பெத்த பிள்ளைக்கு அவனே எமனா மாறிட்டா!" கண்ணீர் திரையிட்ட விழிகளோடு குரல் பிசிறடிக்கப் பேசினார், விஷ்ணுவர்மன்.

"ஆயிரம்தான் இருந்தாலும் அவன் தம்பியாச்சேப்பா?" கண்கள் கலங்கின.

"நர்ஸ்... எங்க சித்தியை கொஞ்சம் கவனியுங்களேன், பிளீஸ்..."

தேவகி, பாபு, விசாலி, நடேசன் ஆகியோர் ஸ்தம்பித்துப் போய்... கவுசிக்கையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

கலங்கிய விழிகளை சுற்றிலும் ஓடவிட்டவனது பார்வை, கமலியைக் கண்டு சட்டென்று நிலைத்தது.

"கவுசிக்! நான் தப்பு பண்ணிட்டேன்" கதறிக்கொண்டே

ஓடிவந்து விழிகளை ஊன்றிப் பார்த்தாள்.

மறுகணம் அவளது இரு கரங்களும் அவனது கழுத்தில் மாலையாயின.

"என்னை மன்னிப்பீங்களா கவுசிக்? தேவையில்லாம சந்தேகப்பட்டு உங்க மனசைக் காயப்படுத்திய பாவி நான்."

"அமைதியாகு கமலி! அன்பு அதிகமா இருக்கிற இடத்துல தான் சந்தேகமும் பிறக்கும்னு சொல்வாங்க. உன்மேல எனக்கு எந்த வருத்தமும் இல்லை, கமலி" அவளது கூந்தலை மிருதுவாகத் தடவினான்.

"நிஜமாவா?"

"சத்தியமா! இப்பக்கூட நீதான் என் உயிரைக் காப்பாத்தி இருக்கே... புரியலையா? பாபுவை பார்த்ததால் விஷயத்தைத் தெரிஞ்சுகிட்டேன். உன்னைத் தனியா சந்திச்சு உண்மையை எப்படி விளக்கலாம்னு யோசிச்சுக்கிட்டே கடற்கரைக்குப் போயிட்டேன். ஒரு வகையில, அங்கே போனதால்தான் நான் இப்போ உயிரோடு உன் முன்னாடி நிக்கிறேன். இரண்டாவது தடவையா நீதான் என்னைக் காப்பாத்தி இருக்கே, கமலி."

அதிர்ச்சியில் இருந்து இன்னமும் மீளாததால் கமலியின் மேனி லேசாக நடுங்கிக்கொண்டிருந்தது.

அவளது கண்ணீரைத் துடைத்து, இறுக்கமாக அணைத்துக் கொண்டான், கவுசிக்.

அவனது பரந்த மார்பில் தலைசாய்த்தபடி நிம்மதி பெருமூச்சு விட்டாள், கமலி.

'இனி இந்த உயிரும் உனக்காக' என்பதாக இருவரும் ஒருவராக சங்கமித்தனர்.

**(முடிந்தது)**

---

ராணி சின்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.